www.gnanam.info
www.gnanam.lk

ஒக்டோபர் 2019


# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

விலை :
ரூபா 100/=

233





ஈழத்தின் இருமொழி இலக்கியச் சாதனையாளர்
'சாகித்திய ரத்னா' ஐ. சாந்தன்

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

ஒளி:20
சுடர்:05
233

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

## ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்
நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

## தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506
தொ.நகல் ☞ 0094-11-2362862
இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை
மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk
அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6, Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekaran
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்பு பவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

*⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.*
*⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.*
*⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.*
*⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.*

# இதழினுள்ளே.....

**⊙ கவிதைகள்**
*நியாஸ் ஏ. சமத்* 11
*ஷெல்லிதாசன்* 17
*பேராயர் எஸ். ஜெபநேசன் (மொழிபெயர்ப்புக்கவிதை)* 18
*சோ.ப. (மொழிபெயர்ப்புக்கவிதை)* 28
*பா. வானதி வேதா இலங்காதிலகம்* 33

**⊙ சிறுகதைகள்**
*இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்* 07
*ஜுனைதா ஷெரீப்* 25
*நிலவூர்ச் சித்திரவேல் (குறுங்கதை)* 34
*சு. கருணாநிதி (குறுங்கதை)* 39

**⊙ கட்டுரைகள்**
*தி. ஞானசேகரன்* 03
*பாலமுனை பாரூக்* 14
*பொன். புத்திசிகாமணி* 20
*நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர்* 22
*பேராசிரியர் செ. யோகராசா* 31
*பேராசிரியர் சோ. சந்திரசேகரம்* 35

**⊙ பத்தி**
*பேராசிரியர் துரை மனோகரன்* 41
*தமிழ்மணி மானா மக்கீன்* 44

**⊙ சமகால கலை இலக்கிய நிகழ்வுகள்**
*கலாபூஷணம் பொன்னுத்துரை* 45

**⊙ வாசகர் பேசுகிறார்** 47

**அட்டைப்பட ஓவியம் : மும்தாஸ் ஹபீள்**

# ஆசிரியர் பக்கம்

## 49ஆவது இலக்கியச் சந்திப்பு – வன்னி

வன்னி மண்ணில் **இலக்கியச் சந்திப்பு – 49** நிகழ்வு 2019 செப்டெம்பர் 21, 22ஆம் திகதிகளில் சிறப்பாக நடந்தேறியது. இலங்கையில் இடம்பெற்ற நான்காவது சந்திப்பு இது. இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்களால் 1988ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இலக்கியச் சந்திப்புத் தொடர் ஜேர்மனியில் உள்ள ஹேர்ண் நகரில் முதலில் இடம்பெற்றது.

தொடர்ந்து, இந்த இலக்கியச் சந்திப்புகள் பல்வேறு நாடுகளில் உள்ள பல்வேறு நகர்களில் இடம்பெற்றுள்ளன. அனேகமான சந்திப்புக்கள் ஐரோப்பிய நாடுகளில் இடம்பெற்றன. இலங்கையில் முதன்முதலில் 41ஆவது சந்திப்பு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. அதன்பின்னர் மட்டக்களப்பு, மலைநாடு ஆகிய இடங்களிலும் இடம்பெற்றன. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சந்திப்பில் **குவர்னிகா** என்ற இலக்கியச் சந்திப்பு மலரும் வெளியிடப்பட்டது.

வன்னியில் இடம்பெற்ற 49ஆவது சந்திப்பில் பங்குபற்றவென பல்வேறு நாடுகளிலிருந்தும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், பெண்ணிலைவாதிகள், திரைப்படக் கலைஞர்கள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலதிறத்தினரும் வந்திருந்தனர். முதியவர்களைவிட இளையவர்களே அதிகமாகக் காணப்பட்டனர். நிகழ்வில் சில சிங்கள கலை இலக்கியவாதிகளையும் ஊடகவியலாளர்களையும் காணமுடிந்தது.

ஜேர்மனி, நோர்வே, பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியா, கனடா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்தும் இலங்கையின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் பலர் வந்திருந்தனர். 100க்கும் கூடுதலான பேராளர்கள் இந்தச் சந்திப்பு நிகழ்வில் பங்குபற்றினர்.

பின்வரும் 15 தலைப்புகளில் கருத்தாடல்கள் இடம்பெற்றன:

**(1)** வன்னி : நிலம், நீர், சமூகம் **(2)** வறுமையின் நிறம் பச்சை : பிரதிகள் காட்டும் வழி? **(3)** வன்னிக்காடு : அன்றும் இன்றும் **(4)** முஸ்லிம் சமூகமும் சமகால நெருக்கடிகளும் **(5)** அந்தரிப்புக்குள்ளானோரும் சமூகத்தின் பொறுப்பும் (காணாமலாக்கப்பட்டோர் மற்றும் போரில் இழப்புகளையும் நெருக்கடிகளையும் சந்தித்தோர் பிரச்சினை). **(6)** இலக்கிய அரசியல் : உண்மையும் விடுபடலும் **(7)** பிரதிகளில் இயற்கை, சூழல் உயிரினங்கள் (வரலாற்றுச் சித்திரிப்பும் புதிய உணர்தல்களும்). **(8)** போருக்குப் பிந்திய ஈழ இலக்கியம்: பத்திரிகைகள்: கச்சாப் பொருள், சந்தை, பதிப்பு முயற்சிகள் **(9)** ஊடக சுதந்திரத்தில் தமிழ்ப்பத்திரிகைகளின் நிலை – ஒரு வாசக நிலை நோக்கு **(10)** ஈழ அகதிகள் தமிழகத்திலும் தமிழகத்திலிருந்து ஈழத்திலும் **(11)** போருக்குப் பின்னரான சிறுகதைப் பிரதிகள் மீதான வாசிப்பும் புரிதலும் **(12)** தெய்வம், சடங்கு, மரபு: வன்னி நிலமும் கையளிப்புகளும் **(13)** வரலாற்றின் பயண வழியில் மக்கள் பண்பாடும் போர்ச் சுவடுகளும் **(14)** மரபும் நவீனமும்: மன்னார்ப் பண்பாட்டு இடையசைவுகள் **(15)**திரையும் நிஜமும்.

மேலே குறிப்பிட்ட விடயங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் உரைஞர்கள் 15 நிமிடங்கள் உரையாற்றினர். அதன்பின் 45 நிமிட நேரம் கருத்தாடல்களுக்காக ஒதுக்கப்பட்டது. சபையோர் விரிவான கலந்துரையாடல்களை மேற்கொண்டனர். ஒவ்வொரு விடயத்தைப் பற்றியும் 15 பேருக்குக் குறையாதவர்கள் கலந்துரையாடலில் பங்குபற்றினர். சிலர் கேள்விகளை எழுப்பி அவற்றிற்கான பதில்களைப் பெற்றனர். வேறுசிலர் தமது கருத்துக்களை முன்வைத்தனர். ஒவ்வொரு விடயத்தைப்பற்றியும் மிக ஆரோக்கியமான கலந்துரையாடல்கள் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. அதுவே இந்த இலக்கியச்சந்திப்பு நிகழ்வின் வெற்றி என்று திடமாகக் கூறலாம். இந்த இலக்கியச் சந்திப்பில் இடம்பெற்ற உரைகள் கையேடுகளாக வழங்கப்பட ஆவனசெய்தால் அது ஒரு பயன்மிக்க செயற்பாடாக அமையும்.

இந்தக் கருத்தாடல்களில், போருக்குப்பின்னரான சமூகப் பிரச்சனைகள் சில ஆராயப்பட்டிருந்தால் இந்தச் சந்திப்பு நிகழ்வு மேலும் சிறப்பாக அமைந்திருக்கும். குறிப்பாக தமிழர் பிரதேசங்களில் இராணுவப் பிரசன்னம் அதனால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கையகப்படுத்தப்பட்ட தமிழ்மக்களின் விவசாய நிலங்கள், சிறைவாசம், போரில் கணவனை இழந்த பெண்கள் எதிர்நோக்கும் கஷ்டங்கள், போராளிப் பெண்கள் சமூகத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், போதைப்பொருள் பாவனை போன்ற இன்னோரன்ன விடயங்களை விவாதப் பொருளாக்கியிருக்கலாம்.

அடுத்த இலக்கியச் சந்திப்பு நோர்வே நாட்டில் நடத்துவதற்கான தீர்மானமும் அங்கு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பௌதிக வளங்கள் குறைவான வன்னிப் பிரதேசத்தில் ஒரு சிறப்பான இலக்கியச் சந்திப்பை முன்னின்று நிகழ்த்திய கவிஞர் கருணாகரன் உள்ளிட்ட அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்.

# 2019ஆம் ஆண்டுக்கான சாகித்தியரத்தினா விருதுபெற்ற ஈழத்தின் இருமொழி இலக்கியச் சாதனையாளர் ஐ. சாந்தன்

ஈழத்தின் முக்கியமான எழுத்தாளர்களில் ஒருவரான ஐயாத்துரை சாந்தன், 2019ஆம் ஆண்டுக்கான அரச உயர் இலக்கிய விருதான 'சாகித்தியரத்தினா' விருதினைப் பெற்றுள்ளார். ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, நாவல், குறுநாவல், கவிதை, மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபாடுகொண்டு இயங்கிவரும் சாந்தன், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சுதுமலை என்ற ஊரில் 1947இல் திரு. ஐயாத்துரை - புவனேஸ்வரி தம்பதிக்கு மகனாகப் பிறந்தவர்.

தனது ஆரம்பக் கல்வியை சுதுமலை சிந்மய பாரதி வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றவர். 1968-1972ஆம் ஆண்டுகளில் மொறட்டுவ உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் குடிசார் - கட்டுமான பொறியியல் நெறிகள் பயின்றவர். இலண்டன் 'சிற்றி அண்ட் கில்ட்ஸ்' நிறுவனத்தின் பொறியியல் பட்டம், மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் சூழல் முகாமைத்துவ முதுவிஞ்ஞானமாணி பட்டம், காமராசர் பல்கலைக்கழகத் தொலைக்கல்வி நிலையத்தின் ஆங்கில இலக்கிய முதுகலைமாணி பட்டங்களைப் பெற்றவர். இலங்கை இணைக்கப்பட்ட பொறியியலாளர் கழகத்தின் தகைசார் உறுப்பினராகவுள்ளார். தமது தொழில்வாண்மைக்கு அப்பால், பல்வேறு மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களில் குடிசார் பொறியியல்-தொழில்நுட்ப விரிவுரையாளராகவும், ஆங்கில விரிவுரையாளராகவும் பணியாற்றியவர். ருஷ்ய இலக்கியங்களை அவற்றின் மூலத்தில் படிக்கும் ஆர்வங் காரணமாக கொழும்பு, சோவியத் நட்புறவுக் கழகத்தில் இரு ஆண்டுகள் ருஷ்ய மொழி பயின்று, பின்னர் 1984இல் மாஸ்கோ லுமும்பா பல்கலைக் கழகத்தின் 'புஷ்கின் நிலைய'த்தில் அம் மொழிக்கான இரண்டு மாதகால ஆசிரியப் பயிற்சிநெறி பயிலும் வாய்ப்பினையும் பெற்றவர். 1973இல் தனது தாய்வழி உறவினரான செல்வி சாந்தமலர் அவர்களைத் திருமணம் செய்தார்.

சாந்தனின் முதலாவது சிறுகதை 'பார்வை', அவர் கபொத(உத) பரீட்சை முடிவுகளைப் பார்த்திருந்த வேளையில், 'கலைச்செல்வி' 1966 புரட்டாதி இதழில் வெளியானது. அதனைத் தொடர்ந்து, 'விவேகி', 'வீரகேசரி', 'கதம்பம்', 'சுதந்திரன்,' போன்ற பல்வேறு இதழ்களில் இவரது சிறுகதைகள் வெளிவந்தன. 1970இல் மொறட்டுவ உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயின்று கொண்டிருந்த வேளையிலேயே முதலாவது சிறுகதைத் தொகுப்பு 'பார்வை' வெளியாயிற்று. இலங்கையில் 'மல்லிகை', 'இளம்பிறை,' 'முரசொலி', 'ஈழமுரசு', 'வெளிச்சம்', போன்ற இதழ்களிலும் தமிழ் நாட்டில், 'கணையாழி', 'பாலம்', '1/4', 'தாமரை', 'சாவி', 'புதிய பார்வை', 'அகநாழிகை', 'யுகமாயினி', போன்றவற்றிலும் எழுதலானார். உருவத்திலும் உள்ளடக்கத்திலும் புதுமுனைப்புக்களைக் காட்டிய முன்னோடிகளாய் அவரின் ஆக்கங்கள் அமைந்தன.



ஐந்து தசாப்தங்கள் தமிழ் எழுத்துலகில் தீவிரமாக இயங்கியதன் பயனாய் சிறுகதைத் தொகுதிகள், நாவல், குறுநாவல்கள். பயண நூல்கள், கட்டுரைத் தொகுதிகள், மொழி பெயர்ப்புகள், என இதுவரை தமிழில் இருபதிற்கும்

–தி. ஞானசேகரன்

மேற்பட்ட அவரது நூல்கள் வெளியாகியுள்ளன.

'கடுகு' (குறுங்கதைகள்), 'ஒரே ஒரு ஊரிலே' (சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற சிறுகதைத் தொகுப்பு) என்பன 1975இல் வெளியாயின. 'ஒட்டுமா' எனும் நாவல் 'தினகரன் வார மஞ்சரி'யில் தொடராக பிரசுரமாகிப் பின்னர் யாழ்ப்பாணத்தில் 'வரதர்' வெளியீடாக 1978இல் வந்தது. பேராசிரியர் கைலாசபதியின் முன்னுரையுடன் சென்னை என்.சி.பி.எச். வெளியீடாக 'முளைகள்' சிறுகதைத் தொகுப்பு 1982இல் வெளியாயிற்று. அதே ஆண்டில் பாளையங்கோட்டை, 'இலக்கியத் தேடல்' பிரசுரமாக வந்த 'கிருஷ்ணன்தூது' சிறுகதைத் தொகுப்பு, தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் மிகுந்த கவனம் பெற்றது. அடுத்து வந்தவற்றுள், 'ஆரைகள்' - (நெடுங்கதைகள் - ரஜனி பிரசுரம், யாழ்ப்பாணம் 1985), அசோகமித்திரனின் முன்னுரையுடன் வந்த 'இன்னொரு வெண்ணிரவு' (சிறுகதைத் தொகுப்பு - 'வெண்புறா' வெளியீடு யாழ்ப்பாணம் 1988), கவிஞர் முருகையனின் முன்னுரையுடன் வெளியான 'காலங்கள்' (சிறுகதைத் தொகுப்பு - வெண்புறா வெளியீடு, யாழ்ப்பாணம், 1994) ஆகியவை அடங்கும். 1998இல் சென்னையில் 'கோரி பிரசுர'மாக வந்த 'யாழ்இனிது' சிறுகதைத் தொகுப்பு அங்கேயே வெளியீட்டு விழாக் கண்டது. அடுத்த வருடம் 'ஒருபிடி மண்' சிறுகதைத் தொகுப்பினை சென்னை நர்மதா பதிப்பகம் வெளியிட்டது. 'எழுதப்பட்ட அத்தியாயங்கள்' (சிறுகதைத் தொகுப்பு - மல்லிகைப் பந்தல், 2001) மற்றும் யாழ்ப்பாணம் 'சஞ்சீவி' வார இதழில் வெளியானபோது பெருங்கவனத்தை ஈர்த்துப் பின்னர் 'மூன்றாவது மனிதன்' வெளியீடாக 2005இல் வந்த 'இருபதாம் நூற்றாண்டு உலக இலக்கியம்', என்பன அடுத்து வந்த இவரது முக்கியமான நூல்களாகும். இவற்றில் இரண்டாவது, பின்னர் 2010இல், 'உலக இலக்கியம்' என்ற தலைப்புடன் சென்னை அன்னை ராஜேஸ்வரி பதிப்பகத்தினரால் மறுபிரசுரம் செய்யப்பட்டது. 'சாந்தனின் எழுத்துலகம்' என்ற தேர்ந்த படைப்புக்களின் தொகுப்பொன்றினை 200இலும், 'விளிம்பில் உலாவுதல்' என்ற குறுநாவல் தொகுப்பினை 2007இலும், 'சிட்டுக்குருவி' சிறுகதைத் தொகுப்பினை 2014இலும், சென்னை அன்னை ராஜேஸ்வரி பதிப்பகத்தினர் வெளியிட்டிருந்தார்கள்.

பயண இலக்கியங்களான 'ஒளி சிறந்த நாட்டிலே', 1985இலும் 'காட்டு வெளியிடை, 2007இலும் வெளியானவை. முன்னையது சோவியத் நாட்டுப் பயண அநுபவங்கள் பற்றியது. யாழ்ப்பாணம், 'ஈழமுரசு' வார மலரில் தொடராக வெளிவந்து, பின்னர் அவர்களாலேயே நூலுருவில் பதிப்பிக்கப் பெற்றது. இதன் இரண்டாம் பதிப்பு, 2018இல், சோவியத் புரட்சி நூற்றாண்டு நினைவாக கொடகே வெளியீடாக வந்ததுடன், கொழும்பு ருஷ்ய கலாசார நிலையத்தின் கௌரவமும் பெற்றது. அடுத்தது ஆப்பிரிக்காவின் கென்ய நாட்டுப் பயண நூல். யாழ்ப்பாணம், 'வெள்ளி நாதம்' இதழில் தொடராக வெளியிடப்பட்டுப் பின்னர், 2007இல் சென்னை 'இருவாட்சி' பிரசுரமாக நூலுருப் பெற்றது.

ஃப்ரென்ச் விஞ்ஞானப் புனைகதை எழுத்தாளரான ஜூல் வேர்ண் எழுதிய Journey to the Centre of the Earth நாவலை ஆங்கிலம் வழியாக 'பூமியின் மையத்திற்கு ஒரு பயணம்' என்ற பெயரில் பெயர்த்தார். அது யாழ் - ஃப்ரெஞ்சு நட்புறவுக் கழக வெளியீடாக 2006இல் வெளியாயிற்று. உலகச் சிறுகதைகள் பதினெட்டின் ஆங்கிலம் வழி மொழிபெயர்ப்புகள் 'என் முதல் வாத்து' என்ற தலைப்பிலான தொகுப்பாகவும், நாற்பது கவிதைகளின் ஆங்கிலம் வழி மொழிபெயர்ப்பு 'கனவெல்லாம் எதுவாகும்?' என்ற தொகுப்பாவும் கொடகே பதிப்பகத்தினல் முறையே 2016, 2017இல் வெளியிடப்பட்டன.

சாந்தனின் சிறுகதைகள் பதினெட்டு, விமல் சாமிநாதனால் சிங்களத்தில் பெயர்க்கப்பட்டு, 'மினிஸ்ஸு சஹ மினிஸ்ஸு' என்கிற தலைப்பில் 1999இல் கொடகே நிறுவனத்தினரால் வெளியிடப்பட்டன. மேலும் மூன்று கதைகள் கலாநிதி வித்தாலி ஃபூர்ணிகா அவர்களால் ருஷ்ய மொழியிலும், நான்கு கதைகள், அஷோக் கன்னா அவர்களால் இந்தியிலும் பெயர்க்கப்பட்டுப் பிரசுரம் பெற்றுள்ளன. எஸ்.ராஜசிங்கம், ஏ.வி. பரத் ஆகியோர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அவரது ஆரம்பகாலத் தமிழ்க் கதைகள் நான்கின் தொகுப்பு 'Oddumaa and Other Stories' என்ற தலைப்பில் இவ்வாண்டு கொழும்பு சமயவர்த்தன புத்தக நிறுவன வெளியீடாக வந்துள்ளது. 'வெளிச்சம்', 'தினக்குரல்', 'எதுவரை?', 'மகுடம்', 'மறுகா', போன்ற பல இதழ்களில் அவ்வப்போது வெளியான அவரது நேர்காணல்களும்

அநுபவச் செழுமை, கலைநயம், கருத்தாழம், கொண்ட இலக்கிய வடிவங்களாகும்.

'தமிழில் விதந்து குறிப்பிடத்தக்க சிறு கதைகளை எழுதுவோரில் சாந்தனும் ஒருவர் என்பதை வாதிட்டு நிறுவ வேண்டிய தேவை யில்லை...' எனவும் ."அநாயாசமாகப் பொருளை உணர்த்தும் கலைத்திறன் வாய்ந்தவ" ரெனவும் 'முளைகள்' தொகுதி (1982) முன்னுரையில் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களால் விதந்து ரைக்கப் பட்டவர் சாந்தன். "புனைகதையில் விசேஷச் சாதனை" என அசோகமித்திரன் அவர்களால் பாராட்டப்பட்ட கதைகளை எழுதியவர். "தேசிய ஒருமைப்பாடு பற்றி வலியுறுத்தி நின்ற முற்போக்கு அணியினருள் இனப் பிரச்சினை பற்றிய பதிவுகளை முதலில் முன்வைத்த படைப்பாளி" எனவும் "இனப்பிரச்சனையை உணர்ச்சி சார்ந்த ஒரு விடயமாக அணுகாமல் அறிவு பூர்வமாகச் சிந்தித்து உணர்வு பூர்வமாக வெளியிட முற்பட்டவர்" எனவும் பேராசிரியர் நா.சுப்பிரமணியன் குறிப்பிட்டார். 'இத்தொகுதியைப் போன்ற ஒரு சில கலை முயற்சிகளினால்தான் ஒரு மொழி பிற மொழியினத்தவரிடம் தலைநிமிர்ந்து நிற்க முடியும்.' என்பது 'ஒரே ஒரு ஊரிலே...' தொகுதி பற்றிப் பிரபல எழுத்தாளர் நீல.பத்மநாபன் 'கணையாழி'யில் எழுதிய விமர்சனம். தமிழ் நாட்டின் முக்கிய எழுத்தாளர்களில் ஒருவரும் 'கல்குதிரை' சஞ்சிகையின் ஆசிரியருமான கோணங்கி 'அநாயாசமாகப் பொருளை உணர்த்தும் கலைத்திறன் சாந்தனிடமிருந்து அபரிமிதமாகக் காணப்படுகிறது. இந்த சிறுகதைகளை ஒரு விஞ்ஞானியின் கலைப்பார்வை என்றோ ஒரு கலைஞனின் விஞ்ஞானப் பார்வை என்றோ சொல்லலாம்,' என்கிறார்.

சுதுமலை அண்ணாமலை வைத்தியரென அறியப்பட்ட இவரது பாட்டனாரின் செல்வாக்கு, சோவியத் இலக்கியங்களுடனான பரிச்சயம், க.பொ.த உ.த. கற்ற வேளையில் ஏற்பட்ட சில தோழர்களின் அறிமுகம் ஆகியன இவரை ஒரு முற்போக்குச் சிந்தனையாளனாக ஆக்கின.

சாந்தன் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி யின் உறுப்பினராக இருந்ததோடு, கட்சி யின் இளைஞர் அமைப்பின் உப தலைவ ராகவும் அதன் வடபிராந்திய இளைஞர் அமைப்பின் தலைவராகவும் இருந்துள்ளார். அத்தோடு தொழிற்சங்க, எழுத்தாளர் சங்க செயற்பாடுகளிலும் ஈடுபட்டுழைத்த அனுபவமு முண்டு. இந்தக் கருத்துக்களும், அனுபவங்களும் இவரது கதைகள் பலவற்றில் இடம்பெற்றுள்ளன.

சாந்தன் என்ற இலக்கிய ஆளுமையின் இன்னொரு முக்கியமான பரிமாணம், அவர் ஆங்கில எழுத்தாக்க முயற்சிகளிலும் முனைப் புடன் ஈடுபட்டு இலங்கையின் ஆங்கில எழுத்துக் களத்திலும் அங்கீகாரங்களை வென்றி ருப்பதும், அங்கும் குறிப்பிடத்தக்க கவனத்தை ஈர்த்திருப்பதுமாகும்.

ஆங்கிலத்தில் இவரது முதலாவது தொகுதி The Sparks 1990இல் யாழ்ப்பாணத்தில் வெளியானது. இரண்டாவது தொகுதியான 2000 ஆண்டில் கொடகே வெளியீடாக வந்த In Their Own Worlds அவருக்கு ஆங்கிலச் சிறுகதைக்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் இலங்கையில் ஆங்கில ஆக்க இலக்கியத்திற்கான சாகித்தியப் பரிசு பெற்ற முதலாவது தமிழர் என்கிற பெருமையையும், தமிழ் ஆங்கிலம் ஆகிய இருமொழிகளுக்கும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற ஒரே எழுத்தாளர் என்கிற மதிப்பையும் கூடவே அளித்தது. The Northern Front என்கிற கதைத் தொகுதி 2005இல் கொடகே வெளியீடாக வெளிவந்தது. Survival and Simple Things கவிதைத் தொகுதி 2002இல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. இவரது முதலாவது ஆங்கில நாவல் The Whirlwind 2011இல் வெளிவந்தது. ''ஈழப்போராட்டத்தில் இந்திய அமைதிப்படையின் தலையீட்டையும் அது விளைவித்த பேரழிவையும் முன்வைத்து ஈழத்தவரால் எழுதப்பட்ட முதல் நாவலும் ஒரே ஒரு நாவலும் சாந்தனால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட விர்ல்வின்ட்' என கலை இலக்கிய விமர்சகர் யமுனா ராஜேந்திரன் இது பற்றிக் குறிப்பிட்டார். (விகடன் தடம்' ஜூன் 2016) இந்த நாவலை சென்னையிலுள்ள V.U.S பதிப்பகம் வெளியிட்டு அங்கு வெளியீட்டு விழாவும் நடத்தியது. இந்த நாவல் அவ்வாண்டு கிறேஷியன் குறும்பட்டியலில் இடம்பெற்றது. 2015இல் வெளியான Rails Run Parallel சிறந்த ஆங்கில நாவலுக்கான ஃபெயர்வே மற்றும் கொடகே விருதுகளைப் பெற்றுக்கொண்டது. 2018ல் வெளியான Every Journey Ends சிறந்த ஆங்கில நாவலுக்கான கொடகே விருதினை அண்மையில் வென்றது.

ஆங்கிலத்தில் எழுதத் தொடங்கியதற்காக சாந்தன் கூறும் காரணம் முக்கியமானது. "அம்

மொழியில் பெரும் ஆற்றல் பெற்றவன் என்று எண்ணியோ என் எழுத்தால் ஆங்கில இலக்கியம் வளம் பெற்று விடுமென்றோ ஆங்கிலத்தில் நான் எழுதத் தொடங்கவில்லை. இங்கு கால் நூற்றாண்டுகாலம் நிலவிய உண்மையான நிலையை - இருத்தலுக்கான போராட்டத்தின் மெய்ம்மையை - எள்ளளவேயெனினும் வெளியுலகிற்கு, முக்கியமாகத் தென்னிலங்கைக்கு, அறியத்தரவேண்டும் என்றுதான் முனைந்தேன்" என்கிறார்..

'சக்கரங்கள் சுழல்கின்றன' போர்க்கால வாழ்வினை அடிப்படையாக வைத்து இவர் தயாரித்த குறும்படமாகும்.

2017இல் கொடகே வாழ்நாள் சாதனை விருது, மற்றும் 2016இல் இந்தியா ராஜஸ்தானில் இடம்பெற்ற சர்வதேச எழுத்தாளர் விழாவில் 'சாகித்யஶ்ரீ' விருது என்பனவற்றையும் பெற்றவர் சாந்தன்.

இந்திய இலக்கிய மேதைகளில் ஒருவரான பிரேம்சந்த் நினைவாக 1996இல் இருந்து ஆண்டுதோறும் சார்க் நாடுகளிடையே இலக்கியம் பண்பாடு ஆகியவற்றில் தனித்துவமான பங்களிப்புச் செய்தவர்களிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்து இந்திய சாகித்திய அகாடமியினால் வழங்கப்படும் 'பிரேம்சந்த் விருது' (Premchand Fellowship) கௌரவம் 2017இல் சாந்தனுக்கு வழங்கப்பட்டது.

2019 ஜனவரியில் விருது விழாவுக்குச் சென்றிருந்த சாந்தன் புது தில்லியில் இந்திய சாகித்ய அகாடமியின் வருடாந்த இலக்கிய விழாவிலும் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் மதிப்பினையும் பெற்றார். "என்னை முதலில் வாசகனாயும் தொடர்ந்து எழுத்தாளனாயும் உருவாக்கிய இந்திய இலக்கியத்தின் இத்தகு விழாவில் உரையாற்றியமை பெருமகிழ்வு தருவது," என்றார் அவர்.

❍❍❍

# தேசிய சாகித்திய விருது 2019



62ஆவது அரச இலக்கிய விருது வழங்கல் நிகழ்வு 12-09-2019 அன்று மாலை. கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ் சிங்கள ஆங்கில படைப்பாளிகளின் ஆக்க நூல்களுக்கு விருதுகளும் பணப்பரிசில்களும் சான்றுகளும் வழங்கப்பட்டன.

2018ல் வெளிவந்து இலக்கியக் குழுவிற்கு அனுப்பப்பட்ட நூல்களில் பின்வரும் நூல்கள் பரிசுபெற்றன.

**1) சிறந்த சுய நாவல் இலக்கியம்: அலுவாக்கரை – எஸ் ஏ.உதயன்.**

**2) சிறந்த சுய சிறுகதை இலக்கியம்: கனவுலகம் – ஜுனைதா ஷெரீப்**

**3) சிறந்த சுய கவிதை இலக்கியம் : முகிலெனக்கு துகிலாகும். வ.வடிவழகையன்.**

**4) சிறந்த சுய நானாவிதம் : எல்லாப் பூக்களுமே அழகுதான். – அஸ.அஹமட் கியாஸ்.**

**5) சிறந்த சுய நாடக இலக்கியம்: மனவைரம் – செல்லம் அம்பலவாணர்.**

**6) சுய புலமைத்துவ மற்றும் ஆய்வுசார் படைப்பு: ஷாபி மரிக்கார் சிந்தனையும் பங்களிப்பும்: – ஏ.எம்.நஹியா.**

**7) சிறந்த சுய சிறுவர் இலக்கியம்: அம்மாக் கோழியும் அப்பாச் சேவலும். – வண.செபமாலை அன்புராசா.**

**8) சுய இளைஞர் இலக்கியம் : சாமி–தமிழ் அறம் – வண.T.S.யோசுவா.**

**9) மொழிபெயர்ப்பு நாவல் சிங்கள இலக்கியம் : அனுஷா சிவலிங்கம்.**

**10) மொழிபெயர்ப்பு சிறுகதை இலக்கியம்: மகர தோரணம் – சாமிநாதன் விமல்.**

**11) மொழிபெயர்ப்பு கவிதை இலக்கியம்: சுதந்திரம் ஆங்கிலம் – கலாநிதி கந்தையா ஶ்ரீகணேசன்.**

**13) மொழிபெயர்ப்பு நானாவித இலக்கியம் : யூஆன் ஹளகன் (ஆங்கிலம்)மு.பொன்னம்பலம்.**

**விருதுகளும் சான்றுகளும் பணப்பரிசுகளும் பெற்ற எழுத்தாளர்களை ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.**

# "மக்டொனால்டின் மகன்"

சிறுகதை

துளசி என்னும் மனநல வைத்தியர், மகாதேவன் என்னும் மனித உரிமை வழக்கறிஞர் என்பவர்களின் மேன்மை மிகு தந்தையும், கலிகாலக் கடவுளாகிய ஸ்கந்தனின் அருளில் அதிமிக பக்தியுள்ள தாட்சாயணியின் கணவருமான திருவாளர் சுந்தரலிங்கம் கடந்த சில நாட்களாக மிகவும் சோர்வாகவிருக்கிறார். அவருக்கு உடல்நலம் சரியாக இல்லாமற் போய்க்கொண்டிருக்கிறது என்று பயப்படும் அவரின் அன்பு மனைவி அவரின் மனநிலையைச் சீராக்க என்ன செய்வது என்று தெரியாமற் தவிக்கிறாள்.

திரு சுந்தரலிங்கம் அவர்கள் கடந்த சில நாட்களாக உண்ண மறுக்கிறார். உறங்குவதிற் சிரமப்படுகிறார் (சரியாகச் சாப்பிடாமல் வெற்று வயிற்றுடன் துயில் கொள்ளமுடியாது). வருவோர்களிடம் முகம் கொடுத்துப் பேசத் தயங்குகிறார்(ஏதோ ஒரு அவமான உணர்ச்சியின் பிரதிபலிப்பு). அதிலும், சமய, சாதியப் பண்பாடுகளை இறுக்கிப் பிடித்து வைத்திருக்கும் அவரது சொந்தக்காரர்கள் அவரைப் பார்க்க வந்தால் நித்திரை கொள்வதுபோல் பாசாங்கு செய்து கண்களை மூடிக் கொள்கிறார்.

ஏழுபது வயதைத் தாண்டும் தங்கள் சினேகிதன் ஏன் இப்படிச் சோர்ந்து போயிருக்கிறான் என்பதைச் சாடையாகத் தெரிந்தவர்களும், தெரிய ஆவற்படுபவர்களுமாகச் சிலர் அவரை அடிக்கடி வந்து பார்த்துச் செல்கிறார்கள்.

அவருடன் படித்த.இன்று ஓய்வுபெற்ற பல வயதுபோனவர்கள் (???) அவரைப் பார்க்க வந்தபோது சிலரிடம் ஏதோ முக்கி முனகிக்கொண்டு, "எங்கள் கலாச்சாரம் பண்பாடு எல்லாம் லண்டனிற் தலைகீழாகப்போகிறது" என்று முணுமுணுக்கிறார். அவரின் நண்பர்கள் பலர் அவர்களின் இருபது வயதுகளில் லண்டனிற் படிக்கவும், இன்னும் பலர் முப்பது வயதுகளில் இலங்கைப் பிரச்சினையைக் காரணம்காட்டி அகதிகளாகவும் வந்து சேர்ந்தவர்கள்.

லண்டனுக்குப் படிக்க வந்தவர்கள், படித்த படிப்புக்கு ஒரு வேலையை எடுத்துக்கொண்டு ஓரளவு பரவாயில்லாத பொருளாதார நிலையிலும் அகதிகளாக வந்தவர்கள் எப்படியோ முன்னேறவேண்டும் என்ற ஆவலில் ஒன்றுக்குப் பதில் இரண்டாம் மூன்றாம் சிறுவேலைகளையும் செய்து, பல பட்டம் பெற்ற படித்த தமிழர்களைவிட நல்ல பொருளாதார நிலையிலுமிருக்கும் மாயங்களை அறிந்தவர்கள். ஒருத்தரை ஒருத்தர் அவர்களின் பொருளாதார ரீதியில் கணக்கிடுபவர்கள், சினேகிதமாகவிருப்பவர்கள், உறவுகளைப் பிணைத்துக் கொள்பவர்கள்.

அந்தப் பாரம்பரியத்தில் வளர்ந்து, இப்போது லண்டனிலும் தமிழ் மொழியை வளர்க்கப் பல தமிழ்ப் பாடசாலைகளையும்,



இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
லண்டன்



கலாச்சாரப் பண்பாடுகளையும் பாரம்பரியத்தையும் வளர்க்கக் (??) கோயில்களையும் பல இடங்களிலும் அமைத்துக் கொண்டிருப்பவர்கள். அவர்களில் மிகவும் முக்கியமானவர்களில் ஒருத்தர் திருவாளர் சுந்தரலிங்கம்.

அவர் சில கடைகளின் சொந்தக்காரர். அவர் எண்பத்திமூன்றாம் கலவரத்தின்பின் லண்டனுக்கு அகதியாக வந்து சேர்ந்தார். இலங்கையில் படித்த படிப்புக்கு லண்டனில் வேலை கிடைக்காததால் லண்டனில் ஒரு கடையை மிகவும் சிரமம்பட்டு வாங்கி அதன் வளர்ச்சிக்கு இரவு பகலாக உழைத்து இப்போது சில கடைகளின் உரிமையாளராகவிருக்கிறார். அதனால் அவர் வசதியாக வாழ்கிறார். பணமிருந்தால் கவுரவம் தேடிவரும் என்பதால் அவர் தன்னால் முடிந்தவரை பல தமிழர் அமைப்புக்களில் முக்கிய பங்கு வகிக்கிறார். தன் குழந்தைகளும் தமிழர்கள் மதிக்கக் கூடிய வாழ்க்கையை வாழவேண்டும் என்று இடைவிடாது சொல்லிக் கொண்டிருந்ததார்.

தமிழ்ப் பண்பாட்டைக் காப்பாற்ற எதையும் செய்யத் தயங்காத பரம்பரையில் வந்த அவருக்கு அவரின் குழந்தைகளான துளசியும் மகாதேவனும், தாங்கள் பன்முகத் தன்மையுள்ள, பல்லின மக்கள் வாழும் பிரித்தானியாவில் பிறந்த தமிழர்கள் என்றும், தாங்கள் பிறந்த ‘தாய்’ நாட்டின் (பிரித்தானிய) கோட்பாடுகளான, “யாதும் ஊரே, யாவரும் கேளிர், எம்மதமும் சம்மதமே” என்ற பாரம்பரியத்தை மதிப்பதாகவும் சொல்லி கடந்த சில கிழமைகளாக அவருடன் வாதாடுவது அவருக்குத் துக்கத்தைத் தருகிறது. அவர்கள் சொல்லும் சமத்துவக் கோட்பாடுகள் தமிழரின்-சைவசமயத்தின் பாரம்பரியக் கோட்பாடுகள் என்று அவர் கோபத்தில் அதிர்ந்தபோது,

“அப்படி என்றால் அந்தப் பெருமையான பாரம்பரியத்தைக் கொண்டவர்கள் எங்களுக்குப் பிடித்தவர்களை நாங்கள் திருமணம் செய்வோம் என்ற எங்கள் விருப்பத்தை ஏன் மறுக்கிறீர்கள்” என்று துயர் படிந்த குரல்களில் கோரஸ் எழுப்புகிறார்கள்.

தனது குழந்தைகளின் படிப்பில், உத்தியோக வளர்ச்சியில் மிகவும் பெருமை கொண்டிருந்த அவருக்கு இன்றைய குடும்பநிலை மிகவும் அதிர்ச்சியைத் தருகிறது.

அவரின் வீட்டில் அவரின் ஒரேயொரு மகளையும் ஒரே ஒரு மகனையும் சீரும் சிறப்புமாகத் திருமணம் செய்து வைப்பது அவரின் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டவர். இப்போது மிகவும் நொந்து போய்ச் சோர்ந்து படுத்திருப்பதை அவரின் மனைவியாற் தாங்கமுடியதாதிருக்கிறது. குடும்பத்தில் என்ன நடந்தாலும் அவை அத்தனையும் கடவுளின் அனுக்கிரகம் என்ற நம்பிக்கையுள்ள அவர் துணைவி தாட்ஷாயணிக்குக் கணவனின் மனநிலை புரிந்தது. இப்பூவுலகிற் பிறந்து இறைவன் தன்னை அழைத்துக் கொள்ளும் இறப்பு வரும்வரை ஸ்கந்தன் விட்ட வழியில் வாழ்வை நகர்த்தும் பிரார்த்தனையுடன் வாழும் தாட்ஷாயணிக்கு அவர்களின் வீட்டில் தொடரும் மௌனயுத்தம் மிகவும் மனவருத்தத்தைத் தருகிறது.

சுந்தரலிங்கம்- தாட்ஷாயணி தம்பதிகளுக்கு ஆசைக்கு ஒரு பெண்ணும் ஆஸ்திக்கு ஒரு ஆணும் என்று இரு குழந்தைகள் பிறந்தபோது, அவர்களைத் தன்னால் முடிந்த வரை அப்பழுக்கற்ற தமிழக்கலாச்சாரத்துடன் வளர்ப்பது அவசியம் என்றும் அந்தக் கோட்பாட்டுக்கு அவர்களின் குழந்தைகள் காலையில் கடவுள் வழிபாட்டுடன் அவர்களின் நாட்கள் ஆரம்பிப்பது தொடக்கம், சனிக்கிழமைகளில் தமிழ்ப் பள்ளிக் கூடத்திற்குப் போவது, அங்கு தமிழ்மொழி மட்டுமல்லாது, கலைகளையும் கற்பிப்பது தங்களின் தலையாய கடமையாகக் கொண்டிருந்தார்கள்.

உலகம் தெரியாத வயதில் தாய் தந்தையர்களின் வழி நடந்த குழந்தைகள் தங்களால் புரிந்து கொள்ள முடியாதவற்றைத் தாய்தகப்பனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சில கேள்விகள் கேட்கத் தொடங்கிய காலத்திருந்து தங்கள் குழந்தைகள் தாட்ஷாயணியும் சுந்தரலிங்கமும் வாழ்ந்த

வாழ்க்கையைத் தொடரப் போகிறார்களா என்ற கேள்வி தாட்ஷாயணியின் மனதில் துளிர்க்க ஆரம்பித்தது. "எங்களின் பாரம்பரிய கலாச்சாரம் என்பதற்காக வாழ்க்கைக்குத் தேவையற்ற நம்பிக்கைகளைத் தொடர்வது தேவையில்லை" என்று வாதம் செய்கிறார்கள்.

ஆரம்பத்தில் அவளின் மனதில் அவளின் குழந்தைகள் பற்றித் துளிர்த்த பல கேள்விகள் இன்று அந்தக் குடும்பத்தின் ஒட்டுமொத்த நிம்மதியையம் குலைத்தழிக்கும் பெரும் புயலாக உருவெடுத்திருக்கிறது.

தாட்ஷாயணி வழக்கம்போல் காலை ஆறுமணிக்கு எழுந்தாள். புரட்டாதி மாதத்தின் சாடையான குளிர் தோட்டத்துக் கதவைத் திறந்ததும் அவள் முகத்திலடித்தது. அவள் எழுந்ததும் தோட்டத்துக் கதவைத் திறந்து ஒருசில நிமிட நேரங்கள் கண்களைமூடி, மனதை இறைவனிற் பதித்து ஆழ்ந்த மூச்சுக்களை எடுத்துத் தன் சுவாசத்தைச் சுத்தப் படுத்துவாள். தோட்டத்துப் பூ மரங்கள் இன்னும் இலையுதிர் காலத்தைக் காணாததால் இன்னும் பல்வகையான மலர்களைத் தாங்கிக் காலையின் இளம் தென்றலில் மெல்லென அசைந்தாடி அற்புதமான சுகந்தத்தை அவளின் சுவாசத்துடன் இணைக்கின்றன.

அதைத் தொடர்ந்து குளித்து முழுகி விட்டுக் கடவுளர்களுக்குப் பூசை செய்தபோது தாட்ஷாயணியின் வாயில் சீரடிபாபாவின் பாடல்கள் முணுமுணுக்கப் பட்டாலும் அவள் மனம் அவளின் இரு குழந்தைகளிலும் அவர்களின் நடத்தையால் மனமுடைந்து சோர்ந்துபோயிருக்கும் தனது கணவனின் நிலையையும் யோசித்துத் துயர் பட்டுக் கொண்டிருந்தது.

அவள் பார்வை அவளின் பூசையறையில் உள்ள கடவுளர்களின் படங்களில் நிலைத்து நின்றபோது அவள் கண்களில் பொல பொலவென்று கண்ணீர் கொட்டத் தொடங்கியது. "கடவுளே எனது குழந்தைகளையும் கணவரையும் ஒற்றுமையாக்கி இந்த வீட்டில் நிம்மதி தொடர உதவி செய்"அவள் வாய்விட்டு அழுதாள்.

தாட்ஷாயணி மிகவும் கடவுள் பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்தவள். குழந்தைகளையும் அப்படியே வளர்க்க விரும்பினாள். சிறுவயதிலேயே குழந்தைகளுக்குத் தேவார திருவாசகம் சொல்லிக் கொடுத்தாள். அதிலும் ஒரே ஒரு மகளான துளசி தங்கள் கலாச்சாரத்தைப் பேணவேண்டுமென்று தாட்ஷாயணி விரும்பினாள்.

துளசி மிகவும் சிறுவயதிலியே மற்றவர்களிடம் சாதி, மத, இன, வயது வேறு பாடற்று அளப்பரிய பாசத்துடன் பழகுவாள். முக்கியமாக வயது போனவர்களிடம் மிகவும் கனிவாக நடந்துகொள்வாள். கடை கண்ணிக்குப் போகும்போது தெருக்களில் குந்தியிந்து உதவி கேட்கும் வறியவர்களுக்குப், (பெரும்பாலும்வறிய வெள்ளையினத்தவர்கள்) பணம் கொடுக்கச் சொல்லித் தாயைக் கெஞ்சுவாள். மனிதர்களிடம் மட்டுமல்ல இயற்கையின் படைப்பில் உள்ள ஒவ்வொரு அம்சத்திலும் ஏதோ ஒரு அழகைக் கண்டு ரசிக்கும் தன்மை அவளின் இரசனை அவளின் சிறு வயதிலேயே தெரிந்தது. தோட்டத்திலள்ள மலர்ச் செடிகள் வாடிவிடாமல் தனது பிஞ்சுக் கரங்களால் நீர் ஊற்றுவாள்.

மிருகங்களை மிகவும் ஆச்சரியத்துடனும் ஆர்வத்துடனும் பார்ப்பாள். தனக்கு ஒரு பூனைக்குட்டி வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தாள். அவளின் தந்தை அவள் வேண்டுகோளை மறுத்தபோது பல நாட்கள் சோகமாகவிருந்தாள். "நாங்கள் விடுதலைக்கு ஊருக்குப் போகும்போது பூனையைப்பார்க்க யாருமில்லையென்றால் பூனை பாவமில்லையா" என்று தாய அன்புடன் விளக்கம் சொன்னதும் சமாதானமானாள்.

குழந்தைகள் சிறுவயதாக இருக்கும் போது சுந்தரலிங்கம் தம்பதிகள் கோயில் யாத்திரைக்காகக் குடும்பத்துடன் இந்தியா சென்றார்கள். கோயிலைச் சுற்றிப் பெருமள விலிருந்த வறிய மக்களைக் கண்டதும் அவள் கண்கள் கலங்கின. அந்தத் துயருடன் கோயிலுக்குள் சென்றபோது ஐயர் கடவுளின் சிலைக்குப் பெரிய பாத்திரம் நிறைந்த பாலூற்றிக் குளிப் பாட்டியபோது, "தயவுவெய்து அந்தப் பாலை வெளியிலிருக்கும் ஏழைக ளுக்குக் கொடுக்கச் சொல்லுங்கள்" என்று தாயின் கைகளைப்படித்துச் சிணுங்கத் தொடங்கி விட்டாள்.

அப்போது துளசிக்கு வயது ஐந்து.

அதைத் தொடர்ந்து, ஐயர் பூசை செய்யத் தொடங்கியது, "அவர், எனக்குத் தெரியாத ஏதோ மொழியில் பேசுவது எனக்குப் புரியவில்லை" என்று தாயிடம் முணுமுணுத்தாள்.

"ஐயர் சொல்வது கடவுள் மொழி" என்று தாய் சொன்னதும், "அப்படி என்றால் தமிழ் பேசத் தெரிந்த தமிழ்க் கடவுளிடம் போவோமா" என்று அப்பாவித்தனமாகக் கேட்டாள்.

அக்கால கட்டத்தில் லண்டனில் தமிழர்களுக்கென்று அதிக கோயில்களில்லை.



அத்துடன் அவர்கள் லண்டனை விட்டுத் தூரத்திலிருந்ததால் அடிக்கடி கோயிலுக்குப் போகும் பழக்கமுமில்லை. ஆனால் வீட்டில் தாட்ஷாயணி எப்போதும் தமிழில் தேவார திருவாசகம்பாடிக் கடவுளை வணங்குவதைப் பார்த்துப் பழகிய துளசிக்கு அன்று அந்தக் கோயிலில் கண்ட விடயங்கள் மிகவும் மனத் தாக்கத்தையுண்டாக்கி விட்டது தெரிந்தது.

அவளின் மகள் துளசி ஆரம்பப் படிப்பைத் தொடங்கமுதலே கடவுளைப் பற்றிக் கேள்வி கேட்டபோது தாட்சாயணி திடுக்கிட்டு விட்டாள். அந்த நிகழ்ச்சி தாட்ஷாயணியின் மனதில் பெரும் நெருடலை உண்டாக்கியது. லண்டனிலும் ஐரோப்பாவிலும் பல தமிழர்கள் வேறுமதங்களைத் தழுவிக் கொண்டிருக் கிறார்கள். அவர்கள் மாதிரியே இப்போது கோயில்களிற் காணும் அவர்களால் புரிய முடியாத சடங்குகளைப் பார்த்துக் குழம்பிவிடுவார்களோ என்று தாட்ஷாயணி யோசித்ததுண்டு.

துளசி எதிலும் மனித உணர்வின் மிக முக்கியமான அன்பைக் காணபவள். இந்தியப் பிரயாணம் அவள் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்து விட்டது. கடவுள், அந்தப் பிரமாண்ட சக்தியைச் சுற்றிப் பிணைந்திருக்கும் பல்வித சமூக, வாழ்க்கைக் கோட்பாடுகளை அவள் வளர்ந்து கொண்டிருந்த காலத்தில் படிக்கத் தொடங்கினாள்.

தாட்ஷாயணி, பழமையைத் தொடரும் பண்பாட்டில் ஊற்றி வளர்க்கப் பட்டவள். அவர்களின் அந்தஸ்துக்கு ஏற்ப, அவர்களின் பெற்றோர்களால் தெரிவு செய்யப்பட்ட திருவாளர் சுந்தரலிங்கத்தைக் கைபிடித்தபோது அவரின் முன்கோபம், பிடிவாதம், தன்னலம் என்பவற்றைப் புரிந்து கொள்ளாதவள். புரியத் தொடங்கியபோது அந்த வாழ்க்கையைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொண்டவள். ஆனால் துளசி அப்படி இருக்க மாட்டாள் என்று தாட்ஷாயணிக்கு விளங்கியது. துளசி டாக்டராகப் படிக்கத் தொடங்கியதும் அப்பாவின் சமுகம் சார்ந்த கோட்பாடுககைக் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டாள். எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாகத்தான் படைக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களின் பொருளாதார, படிப்பு நிலை, என்பன அவர்கள் வாழ்க்கையின் ஏற்றத் தாழ்வை நிர்ணயிக்கின்றன" என்று தாய் தகப்பனுடன் வாதம் செய்வாள்.

அவர்கள் தங்கள் குழந்தைகளின் வாதங் களை எதிர்த்து வாதாடி நேரத்தை விரயமாக்க விரும்பவில்லை. தாய் தகப்பனில் மிக மிகப் பற்றுள்ள மகனும் மகளும் தங்களின் சொற்படி நடப்பார்கள் என்று கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களின் மகள் தனக்குப் பிடித்த மாப்பிள்ளையைப் பற்றித் தாய்க்குச் சில வாரங்களுக்கு முன் சொன்னபோதுதான் வீட்டில் பூகம்பம் வெடித்தது. துளசியின் மனதைக் கவர்ந்தவன் ஒரு வெள்ளையினத்தவனாம். மிகவும் பணக்காரனாம். சிறு வயதிலிருந்து அவளுக்குத் தெரிந்தவனாம்.

"வெள்ளையனா"? தாயும் தகப்பனும் மூக்கில் விரலை வைத்துத் தங்கள் வியப்பைக் காட்டிக் கொண்டார்கள்.

ஒரு இலங்கைத் தமிழனை அவள் விரும்பி இருந்தாலும் "எங்களைக் கேட்காமல் என்னவென்று உனக்கொரு துணையைத் தேடினாய்?" என்று அவர்கள் சண்டை போட்டிருக்கலாம். அவளுக்கு இருபத்தி எட்டு வயதாகிறது. துளசியின் இருபத்தி நான்கு வயதில் அவளின் டாக்டர் பட்டப் படிப்பு முடிந்ததும் தாய் தகப்பன் அவளின் எதிர்காலம், அவளின் திருமணம் என்பன பற்றிப் பேச வாய் எடுத்தபோது அவள் தனது மேற்படிப்பு முடியுமட்டும் திருமணத்தைப் பற்றி யோசிக்கப் போவதில்லை என்று சொல்லியிருந்தாள். அவள் இப்போது உயர்ந்த நிலையிலிருக்கிறாள். தனது வாழ்க்கையில் செட்டில் பண்ண யோசிக்கிறாள். தாய் தகப்பன் தெரிவு செய்யும் வரைக்கும் பொறுத்திருக்கக் கூடாதா? அவர்கள் விரக்தியுடன் முணுமுணுத்தார்கள்.

"ம்ம்.. இப்போது இந்திய, இலங்கை இளம் தலைமுறையினர் கலப்புத் திருமணம் செய்வது பெரிய விடயமில்லை. உலகத்திலேயே

மிகவும் கூடுதலான கலப்புத் திருமணங்கள் லண்டனிற்தான் நடப்பதாகப் புள்ளி விபரங்கள் சொல்கின்றன. இலங்கையைச் சேர்ந்த ஒரு சில இளம் தலைமுறையினரும் வேறு இன மக்களைத் திருமணம் செய்கிறார்கள். பெற்றோருக்குப் பிடிக்காவிட்டாலும் வேறுவழியல்லாமல் அதை ஏற்றுக் கொள்ளவேண்டியிருக்கிறது. தாட்ஷாயணி தனக்குள் முணமுணுத்துக் கொண்டாள்..

திரு. சுந்தரலிங்கம் துளசியின் எதிர்காலம் இப்படித் திசை திரும்பும் என்று நினைக்க வில்லை. கருணையுள்ளம் கொண்ட துளசி தனது தாய்தகப்பனில் மிகவும் அன்பானவள். தங்கள் சொல்லைக் கேட்பாள் என்று எதிர்பார்த் திருந்தார்.

ஆனால் சில கிழமைகளுக்கு முன் அவள் தனது எதிர்காலத் துணையைத் தேர்ந்தெடுத்திருக்கும் விடயத்தைத் தாயிடம் சொன்னாள். இந்த விடயம் தாட்ஷாயணி மூலம் அவரின் காதில் எட்டியதும், “நீ எங்கள் பிள்ளைகளைச் சரியாக வளர்க்கவில்லை” என்று அவர் தாட்ஷாயணியைத் தாறுமாறகத் திட்டினார். வழக்கம்போல் தாட்ஷாயணி மறுமொழிபேசாமல் அவர் திட்டுக்களை ஏற்றுக் கொண்டு மவுனமாக நின்றிருந்தாள்.

அப்போது அவர்களின் மகன் மகாதேவன் வந்தான். அவன் அவனது தமக்கை துளசியில் மிகவும் அன்பாக இருப்பவன். அவள் பன்முகத் தன்மையுள்ள ஒரு நல்ல கெட்டிக்காரி என்பது அவன் அபிப்பிராயம்.

“நான் கேள்விப்படுகிற விடயம் உண்மையா?” அவர் உறுமினார்.

அவன் அவர் என்ன சொல்கிறார் என்று விளங்காமல் தகப்பனைப் பார்த்தான்

“உனது அக்காவுக்கு ஒரு வெள்ளைக்கார போய்பிரண்ட் இருப்பது உண்மையா”

மகாதேவன் தகப்பனை உற்று நோக்கினான். அவர் கண்களிற் தீ பரவிக்கொணடிருந்தது.

மகன் தனது நிதானத்தைக் கைவிடாமல் தகப்பனை அளவெடுத்தான்.

துளசியும், அப்பாவின் கடைக்கு வந்து அப்பாவுடன் பேசிப் பழகும் மிஸ்டர் மக்டொனால்டின் மகன் பீட்டரும் பக்கத்திலுள்ள பாடசாலையில் ஒன்றாகப் படித்ததை அப்பா கவனிக்கவில்லையா?

கவனித்திருக்கமுடியாது அவர் தங்களின் வாழ்க்கையின் வளர்ச்சிக்காகக் கடையுடன் மாரடிப்பவர்.

இப்போது அவள் அவனைக் காதலிப் பதைக் கேள்விப்பட்டுக் குதிக்கிறார், இதனால்

# குலத்துக்குரிய குணம்

கொண்டதெல்லாம் கண்டதெல்லாம்
கழிந்திலாது போகும்
பண்புடன் நாம் பகிர்ந்தவைதாம்
பிணைந்துடனே நிற்கும்
கொண்டிருந்த பண்புகள்தான்
கொள்ளுமுனைக் காக்கும்
கண்ணொத்த கௌரவத்தை
காத்துடனே நிற்கும்

குலத்தளவே குணமாகும்
கூர்ந்த நல்லவாக்கு
விலக்கில்லை உண்மையிது
வியப்பில்லா நோக்கு
துலக்கிடுமே உந்தனது
திறனில்லா நாக்கு
விலக்கிநில்லு வினைவார்த்தை
வீணல்ல உனக்கு

பெற்றோர்கள் இடமிருந்து
பெறுவதுதான் சொத்து
கற்பவையில் மட்டுமிது
கிடைக்காது சேர்த்து
சொற்பநிலைப் பொழுதில்பழு
சேர்த்துவிடும் கோர்த்து
சற்றும்நாத் தவறிடாது
சொல்வார்த்தை சேர்த்து

நியாஸ் ஏ ஸமத்

துளசியின் வாழ்க்கை அநியாயமாகப் போகிறதா? அதை அவன் மவுனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா?

"அப்பா, துளசி உங்கள் சினேகிதர் மிஸ்டர் மகடொனால்டின் மகன் பீட்டருடன் பேசுவது தெரியும்தானே?" என்று கேட்டான்.

திரு. சுந்தரலிங்கத்திற்து மாரடைப்பு வருவதுபோலிருந்தது.

"மக்டொனால்டின் மகனா?" அவர் அலறி னார்.

அதைத் தொடர்ந்து பெரிய வாக்குவாதங்கள்.

குழந்தைகளை நல்ல நிலைக்குக் கொணடுவர அவர்பட்ட துயர்களை அவர் அடுக்கிக்கொண்டே போனார்.

"எங்களுக்காக நீங்கள் பட்ட துயர்களுக்காக வருந்துகிறேன். அதற்காக எங்களை நீங்கள் பிளாக்மெயில் செய்யக் கூடாது. வாழ்க்கை என்பதே மிகவும் சவால்கள் நிறைந்தது" லாயராகப் படித்த மகன் தர்க்கித்தான்

அவரின் குழந்தைகள், தமிழ்க் கலாச்சாரத்தை அவமதித்து ஒரு ஆங்கிலேயனைச் செய்வது தங்கள் தாய்தகப்பனின் மரியாதையைக் கெடுப்பதாகக் கத்தினார். மக்டொனால்ட் குடும்பம் பிணங்களைப் பராமரித்து எரித்தோ புதைத்தோ இறுதிக் கடன்கள் செய்யும் பல ஸ்தாபனங்களுக்குச் சொந்தக்காரர். பிணத்தோடு பிழைப்பவனைத் திருமணம் செய்வது பற்றி அவர் வெளிப்படையாகத் திட்டினால் பிரித்தானிய சட்டத்தின்படி, ஒருத்தர் செய்யும் தொழிலை அவமதித்த குற்றத்திற்காக மகாதேவன் என்ற மனித உரிமை வழக்கறிஞரான அவரின் மகன் அவரைக் கோர்ட்டில் ஏற்றவும் தயங்கவும் மாட்டான் என்று தெரியும். மனித உரிமை வழக்கறிஞராக அவன் படிப்பதை அங்கீகரித்ததை எண்ணித் தன்னைத் தானே மனதுக்குள் திட்டிக் கொண்டார்.

மிஸ்டர் மக்டொனால்ட் அவர்களின் வீட்டுக்குச் சில தெருக்கள் தாண்டி வசிப்பவர். மிகவும் ஸ்மார்ட்டான மனிதன். மரியாதையைத் தன்பாட்டுக்கு ஈர்த்துக்கொள்ளும் ஒரு கவுரவ தோற்றம். இரவில் "வாக்கிங்" போகும்போது சுந்தலிங்கத்தின் கடையைத் தாண்டி போவார். சிரித்த முகமும் சினேகிதபாவமுள்ள அவர் சிலவேளைகளில் இரவில் நீண்ட நேரம் திறந்திருக்கும் சுந்தரலிங்கம் கடையில் சிகரெட் அல்லது மதுபானம் வாங்கவருவார். நாளடைவில் இருவரும் ஒன்றிரண்டு வார்த்தைகள் பேசிக்கொள்ளுமளவுக்கு உறவு விரிந்தது.

மக்டொனால்ட் சில தெருக்கள் தாண்டியி ருப்பதால் அவரைத் தவிர அவர் குடும்பத்து அங்கத்தவர்கள் யாரையும் சுந்தரலிங்கத்திற்குத் தெரியாது. அவரின் குடும்ப அங்கத்தவர்கள் இந்தப் பக்கம் வர ஒரு தேவையுமில்லை. அவர்கள் வீடு நகரின் அண்மையிலிருக்கிறது. ஒரு நாள் பேச்சுவாக்கில் திரு. மக்டொனால்ட் என்ன வேலை செய்கிறார் என்று திரு. சுந்தரலிங்கம் கேட்டபோது, அவர் மனிதர்கள் இறந்தபின் அவர்களின் இறுதியாத்திரையை ஒழுங்கு செய்யும் நிர்வாகத்தின் உரிமையாளர் என்று சொன்னார். அதைக் கேட்டதும் திரு. சுந்தரலிங்கம் மிகவும் தர்மசங்கடப்பட்டார்.

பிணத்துடன் தொடர்புள்ளவன் அவரைப் பொறுத்தவரையில் தாழ்த்தப்பட்ட சாதி யான். சைவ சமயத்தையும் தமிழையும் இருகண்களாகப் பார்க்கும் சுந்தரலிங்கம் சிவன் என்னும் சைவத்தின் தெய்வம் கடவுள் சுடலையை ஸ்தலமாகக் கொண்டவர் என்ற புராணக் கதைகளில் ஒன்றை மறந்துவிட்டார். இன்று இந்தியாவில் சமய ரீதியாகப் பிரபல மாகவிருக்கும் பிணம் தின்னும் 'அகோரிகள்' என்ற சாதுக்களை மறந்து விட்டார்.

அவர் எப்போதாவது பாதாள ரெயினில் அல்லது பஸ்ஸில் பிரயாணம் செய்தால், பக்கத்திலிருப்பவன் செத்தவீட்டுக்குப் போயிருந் தாலும் அல்லது "தாழ்ந்த(??") சாதியானவன் பக்கத்தில் வந்து இருந்தான் என்ற சந்தேகத் திலும் வீடுவந்ததும் முதல் வேலையாகத் தனது ஆடைகளைத் தோய்த்துத் தானும் குளித்து முழுகிச் சுத்தம் செய்து கொள்ளும் தூய்மை மனம் படைத்தவர்.

பிணங்களை இறுதியாத்திரைக்குத் தயார் செய்யும் நிர்வாகத்தின் உரிமையாளர் என்று மக்டொனால்ட் சொன்னபின் திரு. சுந்தரலிங்கம் அவர்கள் அவருடன் பேச்சைக் குறைத்துக் கொண்டார். எந்தச் சவத்தைத் தொட்ட கையுடன் வந்து தன் கடைச் சாமானைத் தொட்டானோ என்று மனதுக்குள் திட்டிக் கொள்வார்.

இப்போது என்னடாவென்றால் பிணத்தை வைத்து வியாபாரம் செய்பவனுடன் சம்பந்தம் செய்யவேண்டி வந்திருக்கிறது!.

மகளின் காதலை எக்காரணம் கொண்டும் அங்கிகரிப்பதில்லை என்ற தனக்குள் சபதம் செய்துகொண்டார்.

ஒன்றிரண்டு நாட்கள் வீட்டில் ஒரு பெரிய வாய்த் தர்க்கம் தகப்பன், மகள், மகன் மூவருக்கு மிடையில் நடந்தது. "குழந்தைகள் என்பவர்கள் உங்களுக்குத் தேவையான விதத்தில் நீங்கள் பாவித்துக்கொள்ளும் உங்களின் உடமையல்ல" மகாதேவன் தமக்கைக்காகச் சீறினான்.

துளசிக்கு தனது அப்பா இவ்வளவு

உக்கிர கோபத்தில் தாண்டவமாடுவார் என்று எதிர்பார்க்கவில்லை.

“அப்பா என்னை ஏன் டாக்டராகப் படிக்க வைத்தீர்கள்” அவள் விம்மலுடன் கேட்டாள். தகப்பனைத் துக்கப்படுத்தியதற்கு அவள் வருந்துவது அப்பட்டமாகத் தெரிந்தது.

“ மற்றவர்களுக்குச் சேவை செய்யவும் மற்றவர்களால் மதிக்கப்படுவதற்குமான உத்தியோகத்தை மிகவும் கருணையுள்ள மனமுள்ள நீ டாக்டராக வந்தால் திறமையாகச் செய்வாய் என்றுதான் நினைத்தேன் ஆனால் நீ..” மேலே பேசமுடியாமல் திணறினார்.

“பிணத்தைத் தொடுபவர்கள் சாதி குறைந்தவர்கள் என்று அம்மா சொன்னாள். நான் எனது தொழிலில் எத்தனையோ தடவைகள் பிணத்தைத் தொடவேண்டி வந்திருக்கிறது அதுதெரியுமா உங்களுக்கு?” முதல் வருடத்திலேயே பிணத்தை வெட்டி அனாட்டமி அன்ட் பிசியோலயி படித்த வைத்தியப் பெண் கடையில் காசு மெசினுடன் வேலை செய்யும் தகப்பனைக் கேட்டாள்.

“நீ எவ்வளவோ படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்..” அவர் சொல்லி முடிக்கு முதல் “என்னை விரும்பும் பீட்டரும் எக்கனாமியில் பட்டம் பெற்றவன். அவர்களின் குடும்பத்தின் நான்கு தலைமுறைத் தொழிலில் சேர்ந்திருக்கிறான்” அவள் எவ்வளவோ விளங்கப் படுத்தியும் அவர் மக்டொனால்டின் மகனைத் தன் மருமகனாக ஏற்கத் தயாராகவில்லை.

மகள் தகப்பனுடன் தர்க்கம் செய்வதைத் தவிர்த்து விட்டாள். மகன் “எங்களின் எதிர்காலத்தை நிர்ணயிப்பது எங்களின் ஜன நாயக உரிமை” என்று முழங்குகிறான்.

அவர்களைத் தன்வழிப்படுத்த திரு சுந்தரலிங்கம் உண்ணா விரதப் போராட்ட மிருக்கிறார். அதனால் தாட்ஷாயணி மிகவும் மனத்துயரால் அவதிப்படுகிறாள்.

வீடு மயான அமைதியுடனிருக்கிறது.

கடந்த சில நாட்களாக மகாதேவன் வெளியில் சாப்பிடுகிறானோ என்னவோ வீட்டில் சாப்பிடவில்லை. துளசி மவுனமாக எதையோ சாப்பிட்டுவிட்டு வேலைக்கு ஓடுகிறாள்.

அவள் மிகவும் பிசியான டாக்டர். இருபத்தெட்டு வயதாகிறது. அவர்களின் சொந்தக் காரர்களின் பெண்கள் பலர் இந்த வயதில் கல்யாணமாகிப் பிள்ளையும் பெற்றுவிட்டார்கள்.

அன்றிரவு சுந்தரலிங்கம் மிகவும் தீவிரமாக யோசித்தார். ஹொலிடேய் போவதாகக் குடும்பத்தைக் கூட்டிக் கொண்டுபோய் ஊரில் யாரும் நல்ல மாம்பிள்ளைக்குத் துளசியைச் சட்டென்று திருமணம் செய்து கொடுத்தால் என்ன என்று யோசித்தார்.

துளசி அன்பான மகள்தான் ஆனால் அநியாயத்திற்கு இடம் கொடாதவள். தன் விருப்பத்திற்கு எதிராகத் தன்னைக் கடத்திக் கொண்டுபோய் திருமணம் செய்து கொடுத்ததாகப் போலிசுக்குச் சொன்னால் சுந்தரலிங்கத்தார் கம்பி எண்ண வேண்டி வரும். மனித உரிமை வழக்கறிஞரான மகனும் சும்மா பார்த்துக் கொண்டிருக்க மாட்டான்.

வீட்டில் தொடரும் மவுன யுத்தம் மூன்றாம் கிழமையைத் தொட்டது. மகளின் சோகமான முகம் அவரின் இதயத்தை வருத்தியது. “எங்கள் உரிமையைத் தடுக்க உங்களால் முடியாது” என்று அவள் முணுமுணுத்தாலும் அவர் விரும்பாவிட்டால் அவள் திருமணம் செய்து கொள்ள மாட்டாள் என்ற அவருக்கு தெரியும்.

தகப்பன் என்ற உரிமையைப் பாவித்து, அவளின் எதிர்காலத்தை இருண்டுவிடச் செய்ய அவருக்குத் தைரியமில்லை. ஊரிலுள்ள அவரின் திமிர் பிடித்த சகோதரிகள் அவரின் ஞாபகத்திற்கு வருகிறார்கள். கவுரத்திற்காகவும் உயர்ந்த இடத்து டாக்டர், எஞ்சினியர் மாப்பிள்ளைக்காகவும் காத்திருக்கும், ஐம்பது வயதைக் கடந்து பெருமூச்சுடன் வாழ்க்கையைக் கடத்தும் அவரது இரு முது கன்னித் தங்கைகளும் அவர் மனக் கண்ணில் வந்து போனார்கள்.

அவள் விரும்புவனைத் திருமணம் செய்ய முடியாவிட்டால் துளசியும் வாழ்க்கை முழுதும் கன்னியாக இருக்கத் தயங்கமாட்டாள். அந்த உண்மை அவர் மனதில் உறைத்ததும் அழுதுவிட்டார்.

துளசி அருமையான மகள். அவளுக்குத் திருமணமாகிக் குழந்தைகுட்டிகள் பெற வேண்டும் என்று அவர் எப்போதும் பிரார்த்தனை செய்பவர்

“துளசி உங்களின் அருமையான மகள். திறமையான டாக்டர். கனிவான தாயாகத் தன் குழந்தைகளைப் பார்த்துக் கொள்வாள். காதலுடன் தன் கணவனைப் பராமரிப்பாள்” என்று மகாதேவன் தமக்கையைப் புகழ்வான்.

என்ன வழி தேடுவது?

அவரது வியாபார மூளை பலமாக வேலை செய்தது.

பிணக்கடை வைத்திருப்பவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்வது அவருக்குத் தாங்கமுடியாத அவமானத்தைக் கொடுத்தது.

அவரின் தமிழ்ச் சினேகிதர்கள் அதைக் கேட்டால் சிரிக்க மாட்டார்களா?

மக்டொனால்ட் என்ற பெயர் ஸ்காட்டிஷ் நாட்டுப் பெயர் உலகப் பிரசித்தமானது. அமெரிக்காவிலுள்ள ஸ்காட்டிஷ் பரம்பரையினர் கண்ட இடமெல்லாம் பீவ் பேர்க்கர் விற்பனைக்கு மக்டொனால்ட் கடைகள் திறக்கிறார்கள். எனது மகளும் அவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த கோடிஸ்வரன் ஒருத்தனைத் திருமணம் செய்ய விருக்கிறாள் என்று பொய் சொல்லலாமா?

"(மக்) டொனால்ட் ட்ரம்பும் அவரின் தாய் வழியான ஸ்காட்டிஷ் மக்டொனால்ட் பரம்பரையைச் சேர்ந்தவர். அவர்களின் பரம் பரையில் நான் சம்பந்தம் செய்யப்போகிறேன் என்று கோயிலுக்குப் போகும்போது சாடை யாகச் சொல்லி இந்த விடயத்தைத் தமிழ்ச் சமுதாயத்தில் நழுவ விடலாமா?"

பணக்காரத் தமிழர்கள் எதைச்சொன்னாலும் பெரும்பாலான சாதாரண தமிழர்கள் அதை நம்பத் தயாரானவர்கள் என்பது அவருக்குத் தெரியும். சுந்தரலிங்கம் பணக்காரர். பலருக்குப் பல உதவிகள் செய்பவர். தமிழர்கள் வீட்டு இறப்பு பிறப்பு விடயங்களுக்குத் தவறாமற் போகிறவர். மிகவும் 'பக்தி'யானவர். தமிழ்க் கடவுள் முருகக் கடவுளின் பெயரை முணு முணுத்தபடி வாழ்க்கையைத் தொடர்பவர். வெள்ளிக் கிழமைகளில் தவறாமல் கோயிலுக்குப் போகிறவர். லண்டனிலுள்ள பணக்காரர்கள் தங்கள் செல்வத்தை விருத்தி செய்ய ஒரு கோயிலையும் கட்டிக் கொள்ள ஆசைப்படுவார்கள். லண்டனில் கோயில் வர்த் தகம் மிக மிக பிரமாண்டமானது. அவர்க ளைப்போல் சுந்தரலிங்கம் விரைவில் ஒரு கோயில் கட்டவிருக்கிறார். "எல்லாம் அவன் விட்டவழி, அதுவும் கடவுள் அனுக்கிரகம்" என்று சொல்லி நண்பர்கள் அவரை ஒரு மகானாகப் பார்க்குமளவுக்கு உயர்ந்து கொண்டிருக்கிறார்.

அந்த வளர்ச்சிக்கு திருஷ்டி பட்டமாதிரி மகள் பிணத்தைப் பராமரித்து இறுதிக் கடமைகள் செய்யும் குடும்பத்தில் தொடர்பு வைத்திருக்கும் விடயம் வந்திருக்கிறது. அவரைப் போலவே அவரின் குழந்தைகளும் பிடிவாதமானவர்கள். அவர்களின் ஆசையின் படி விட்டுக் கொடுத்தால் தமிழ்ச் சமுதாயம் அவரை மதிக்குமா? அவர் சிந்தனை பல விதத்திலும் மகளின் காதலைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தது.

மக்டொனால்டின் குடும்பத்தைப் பற்றித் தமிழர்கள் கேட்டால் ஏதோ ஒரு வழியில் மக்டொனால்ட் குடும்பத்தை உயர்த்திப் பேசினால் தமிழர்கள் அவரை மதிக்கலாம். எப்படி அதைச் செய்வது? அவர் பெருமூச்சு விட்டபடி தீவிர யோசனையிலாழ்ந்தார்.

அவரின் மனதில் எத்தனையோ சிந்தனைகள் குதித்துக் கொண்டிருந்தன.

"எனது கனவில் தமிழ்க் கடவுள் முருகன் வந்து உனது குடும்பத்தில் நான் இணைய கோடிஸ்வரன் மக்டொல்டின் மகனாக அவதாரம் எடுத்து பீட்டர் என்ற பெயரில் உன் மகளைத் திருமணம் செய்வேன். இரண்டு கோடிஸ்வரர்கள் சேர்ந்தால் இன்னும் எத்தனையோ கோயில்கள் கட்டலாம்" என்று முருகன் தனது கனவில் வந்து சொன்னதாக அவர் சொன்னாலும் சுந்தரலிங்கத்தின் தமிழ் நண்பர்கள் நம்பக் கூடியவர்கள். எங்கள் புராணங்கள் எத்தனை தரம் கடவுள் பக்தர்கள் கனவில் வந்து தனக்குத் தேவையானதை பக்தர்கள் செய்ய வேண்டும் என்று பல தடவைகள் பணித்திருக்கிறார்கள என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

வியாபாரியான சுந்தரலிங்கம் பலதையும் பத்தையும் சிந்தித்தபின் எப்படிக் காய் நகர்த்தவேண்டும் என்ற திட்டத்தை யோசித்துக் கொண்டிருந்தார். எக்கானமியில் பட்டப்படிப்பு முடித்து விட்டு மூன்று தலைமுறை பிணங்களின் இறுதிச் சடங்கு வியாபார நிர்வாகத்தைக் கையேந்தியிருக்கும் பீட்டரை, அவரது மகளின் மனதைக் கவர்ந்தவனைக் காணவேண்டும் போலிருந்தது. துளசி அன்பும் பண்பும் உள்ள ஒரு மகள் என்பதைவிட மிகவும் எளிமையாக வாழும் பெண். மேக்அப் அதிகம் போடாத அழகான பெண். பீட்டர் என்னும் வெள்ளையன் அவளுக்கு ஏற்றவனாக இருப்பானா?

பல சிந்தனைகள் அவரைக் குழப்பின. பீட்டரைப் பார்க்க அவர் உள்மனம் ஆணையிட்டது. அந்த உந்துதலால் அவருக்கு நித்திரை வரவில்லை. "அவனை என்னிடம் அழைத்துக்கொணடுவா" என்ற மகளுக்குச் சொல்ல அவரின் தன்மானம் தடைபோட்டது. தனது குடும்பத்தின் நிம்மதிக்காகப் பெருமூச்சுடன் அருகில் படுத்திருக்கும் தாட்ஷாயணியில் பரிதாபம் வந்தது. தாட்ஷாயணி அதிகம் படித்திருந்தால் அவரைத் திருமணம் செய்திருக்கமாட்டாள் என்று அவருக்குத் தெரியும். அவளின் வாழ்க்கை முழுதும் தனக்காக வாழாமல் மற்றவர்களுக்காக வாழும் அன்பான, பண்பான மனைவியை அணைத்துக் கொள்ள வேண்டும் போலிருந்தது. ஆனால் அவர் செயற்படுத்துவதில்லை (அணைத்துக் கொள்வதை!)

“என்னுடைய திமிரால் எத்தனைபேர் துயர் படுகிறார்கள்?” தனக்குள் மனம் கனிந்து யோசித்துக் கொண்டார்.

அடுத்த நாள் காலையில் ஒரு “வாக்கிங்” போவதுபோல் இரண்டு மூன்று தெருக்கள் தாண்டி நடந்து சென்றார். அதிகாலையில் வேலைக்குப் போவோர்கள் தங்கள் வீடுகளிலிருந்து வந்து கொண்டிருந்தார்கள். மக்டொனால்டின் வீடு எது? அவர் மகன் எப்படியிருப்பான்?

மூன்று கிழமைகள் அவர் சாதாரண வாழ்க்கைக்கப்பால் மிகவும் மன உளைவோடு திண்டாடியதால் உடம்பு களைத்தது. அவர் தனது “வாக்கிங்” வேகத்தைக் குறைத்தார். தெருவின் கடைசியிலிருந்த பிரமாண்டான பெரிய வீட்டிலிருந்து ஒரு இளைஞன் வெளியில் வந்து கொண்டிருந்தான். பக்கத்திலிருக்கும் பாதாள ட்ரெயினுக்குப் போகிறான் போலும். தூரத்திலிருந்து பார்த்தபோது அவனின் தோற்றம் இவரின் கடைக்கு வரும் திரு. மக்டொனால்டின் தோற்றத்தை அச்செடுத்தமாதிரியான சாயல். வாட்டசாட்டமான, உயர்ந்த நிமிர்ந்த கம்பீர மான தோற்றம் அவரைத் திக்குமுக்காடப் பண்ணியது. ஒரு இளவரசன் அவரின் முன் வருவது போலிருந்தது. முகத்தைப் பார்க்க வேண்டும்போலிந்தது.

பல நாட்கள் சரியாகச் சாப்பிடாததாலும் கொஞ்ச தூரம் நடந்ததாலும் சுந்தரலிங்கத்திற்குத் தலை சுற்றியது. அவரின் நடை தடுமாறியது. பார்வை மங்கலானது. பல வெளிச்சங்கள் கண்களிற் தெரிந்தன. தன்னைச் சுற்றி என்ன நடக்கிறது என்ற கிரகிக்க முதல் சுந்தரலிங்கம் மயக்க நிலக்குத் தள்ளப் பட்டுச் சட்டென்று தடுமாறி விழப்போனார்.

அதன்பின் என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியவில்லை. அவருக்கு முன்னால் வந்து கொண்டிருந்த வெள்ளை இன இளைஞன் அவரைக் காப்பாற்ற ஆம்புலன்சை அழைத் ததோ, அவரின் ஓவர்கோர்ட்டுக்கள் கிடந்த பென்சனர்ஸ் பிரயாண அட்டை மூலம் அவர் யார் என்ற அடையாளம் கண்டு அவரின் வீட்டுக்கு அறிவித்ததோ அவருக்குத் தெரியாது.

கண்விழித்தபோது அவரால் எதையும் சட்டென்று அடையாளம் தெரியவில்லை. எங்கிருக்கிறார் என்று புரியவில்லை. அவருக்கு முன்னாலிருப்பவன் ஆறுபடை வீடுடையானின் அற்புத புன்னகையைத் தாங்கியபடி அவனை உற்று நோக்கினான். “கந்தனே வந்தானா என் கட்டிலருகில் எனை ஆட்கொள்ள” அவர் பக்தி நிலையில் முனகினார்.

அரைகுறை மயக்கத்தில் கண்களைத் திறந்தவர் அந்த இளைஞனை நேரே உற்றுப் பார்த்தார்.

அவர் கண்விழித்ததும் உடனடியாக. மகளின் அன்புக்குரல் அவரை யதார்த்த உலகுக்குக் கொண்டு வந்தது “அப்பா” அவள் குரலில் சோகம்.

அவரின் கண்கள் தன்னைச் சுற்றியிருக்கும் அத்தனை பேரையும் மெல்லமாக வலம் வந்தன. மகள் ஒரு பக்கம், அவரைக் காப்பாற்றிய கம்பீரமான இளைஞன் அடுத்த பக்கம் அவரின் கைகளை வருடியபடியிருந்தார்கள்.

இவனா என் மகளின் மனதைக் கவர்ந்தவன்?

அவர் கண்கள் குளமாயின. மகளின் மனதைக் கவர்ந்தவன் வழியில் வந்திருக்கா விட்டால் அவர் நிலை என்னவாயிருக்கும்? நான் வணங்கும் கந்தனே அவனுருவில் வந்து எனக்குப் பாடம் படிப்பித்தானா? அவர் கண்களில் நீர் சுரந்தது. தன் மகளின் அன்பனைப் பார்த்தார். அவன் முகத்தில் இவர் கண்விழித்ததைப் பார்த்த நிம்மதியில் ஒரு மெல்லிய மகிழ்ச்சி பாவம் தெரிந்தது. பிணத்தை வைத்து வியாபாரம் செய்யும் பரம்பரையின் உண்மையான மனதாபிமானம் அவனின் முகத்திற் பிரதிபலித்தது. கட்டிலைச் சுற்றி அவர் குடும்பம் துயரத்துடன் நின் றிருந்தது. தாட்ஷாயணியின் கண்கள் குளமாயிருந்தன. மகாதேவன் வெளிறிய முகத்துடன் தகப்பனருகில் நின்றிருந்தான்.

இரக்கமும் பாசமும் நிறைந்த துளசிக்கு ஏற்ற சரியான துணை மக்டொனாட்டின் மகன் என்று அவர் மனம் சொல்லியது. ஏனென்றால் யாரும் முதியவர்கள் தெருவில் விழுந்தால் ஏனோ தானோ என்று தன்பாட்டைப் பார்த்துக் கொண்டுபோகும் இந்த உலகில், அவர் யார் என்று தெரியாமலே அவரைத் தாங்கிப் பிடித்தவன் அவரின் மகளையும் காதலுடன் தாங்கிப் பிடிப்பான் என்ற அவர் மனம் சொல்லியது.

அவன் யாராயிருந்தாலும் இனி அவன் அவரது மருமகன். அவரின் குழந்தைகளின் மகிழ்ச்சிதான் அவரின் எதிர்காலம் என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டார். அன்பே சிவம்.

❍❍❍

**கு**றுகியதும் குறும்பு தருவதுமான பா குறும்பா. Edward lier ஐ தந்தையாகக் கொண்ட, அயர்லாந்து நாட்டுக்குரியதாகக் கொள்ளப்படுகின்ற Limerick என்ற பாவடிவமே மஹாகவி து.உருத்திரமூர்த்தி அவர்களால் தமிழுக்கு குறும்பாவாக அறிமுகம் செய்யப்பட்டது.

Limerick ஆரம்பத்தில்,

கிண்டல், கேலி, நக்கல் பாலியல் சேஷ்டைகள் என்பவற்றை நண்பர்களுக்கு இடையே பரிமாறிக்கொள்ளும் பாவடிமாக அமைந்திருந்தது. இப்போது

குறும்பாவாக அதன்பணி, சமூகச் சீர்கேடுகளைக் குத்திக்காட்டுவதாக வளர்ந்து நிற்பதை முறையாக ஆய்வு செய்வோர் அவதானிக்கலாம்.

மஹாகவி தமிழுக்கு கொண்டு வந்த குறும்பா வடிவத்தைப் பின்பற்றிச் சிலர் குறும்பாக்களை எழுதினர். ஆயினும், அவர்களில் ஒரு சிலரைத் தவிர, அனைவரும் அவர் சொன்ன வரைபுச் சட்டகத்தை முழுமையாகப் பின்பற்றவில்லை. ஒருவாறு ஓசை வருமாறு முயன்றனரெனலாம்.

குறும்பு இன்றி குறுகிய பாக்களாக மாத்திரமாகவே அமைந்து விடும் பாக்களும் குறும்பா என்ற வகையறாவுக்குள் வந்து விடுவது, நமது துர் அதிர்ஷ்டம்.

எவ்வாறாயினும், குறும்பா முயற்சியில் ஈடுபடுவோர் மிகச் சிலரே. செழுமையான குறும்பாக்களைத் தருபவர்களும் மிகக் குறைவே. குறும்பா நூல்களும் அதிகம் வரவில்லை. (இலங்கையில் 6 நூல்களுக்குள் இற்றைவரை)

**காய் காய் தேமா**
**காய் காய் தேமா**
**காய் காய்**
**காய் காய்**
**காய் காய் தேமா** என்றமைந்த

குறும்பாவின் வரைபுச் சட்டக இறுக்கம் இத் தேக்கத்திற்கு காரணமாக இருக்கலாமென்ற எண்ணத்தில்

குறும் பாவின் நீட்சி- விரிவு கருதிய முயற்சிகளும் நடைபெறுகின்றன.

காய் காய் தேமா என்றில்லாமல் புளிமாவிலும் எழுதுவது.

இயைபுத் தொடைக்காக பரிச்சயமான பிறமொழிச் சொற்களையும் அங்கீகரிப்பது.

தொடர் குறும்பாக்கள் எழுதுவது..என்று அவை தொடர்கின்றன.

கவிஞர் அல் அஸூமத் அவர்கள் யாப்பியலுரை என்ற தனது 524 பக்க நூலில் குறும்பா பற்றி ஒரு அதிகாரத்தைச் சேர்த்துள்ளார்.

குறும்பாவின் நீட்சி விரிவு பற்றிய குறிப்புக்களும் அவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. எனது "பாலமுனை பாறூக் குறும்பாக்கள்"(2013) நூலிலும் மஹாகவி காட்டித் தந்த வரைபுச் சட்டகத்துக்கு உட்பட்ட குறும்பாக்களோடு, குறும் பாவின் நீட்சி விரிவு கருதி சட்டகத்தில் மாற்றம் செய்த குறும்பாக்களும் இடம் பெற்றுள்ளன. அவ்வாறான முயற்சிகள் தொடர்கின்றன.

**நோய்வந்து நடிகையவள் இறக்க- வளர்த்த**
**நாய்நின்று அழுதழுது குரைக்க- மணந்த**
**நாயகனோ வந்தான்**
**நாலுகால் பறக்க**
**வாயெல்லாம் சாராயம் நுரைக்க!**
(பாலமுனை பாறூக்)



இப்பா,

**காய் காய் மா**
**காய் காய் மா**
**காய் மா**
**காய் மா**
**காய் காய் மா**

என்று குறும்பாவுக்குரிய வடிவத்தில் அமைந்திருப்பதோடு வளர்த்த, மணந்த என்று இரண்டு இடைச் சொற்களைப் பெற்று, (15 சீர்களாக) நீட்சி பெற்றிருப்பதை அவதானிக்கலாம்.

இப்போது குறும்பாவில் பரிசோதனை முயற்சிகளும் நடைபெறுகின்றன.

**காய் காய் தேமா**
**காய் காய் தேமா**
**காய் மா**
**காய் மா**
**காய் மா**
**காய் மா**
**காய் மா**
**காய் மா**
**காய் காய் தேமா**

என்று அமைந்த வரைபுச்சட்டகத்தில் 21 சீர்களில் அமைந்த குறும்பா கீழே அமையப் பெற்றுள்ளது

அடிகளில் முதல் சீர்களில் எதுகை மோனை பேணப்படுவதையும் 1ம்2ம்9ம் அடிகளில் இறுதிச்சீர்கள் ஒருவிதமான இயைபுத் தொடையாகவும் ஏனைய அடிகளின் இறுதிச் சீர்கள் வேறுவித இயைபுத் தொடையாக அமைந்திருப்பதையும் அவதானிக்கலாம்

**இனவாத விதைகளினைத் தூவி**
**எழுப்புகிறான் குரலங்கோர் பாவி**
**உணவுண்ணா திருப்பு**
**உரைகளிலே நெருப்பு**
**தினமிவனின் போக்கு**
**தேடிடவாம் வாக்கு**
**பிணவாடை வீசும்**
**பிரிவினையே பேசும்**
**மனமொடுங்கி,தீங்கிழைக்கும் நீவி!**

(பாலமுனை பாறூக்)

ஆங்கிலக் கவிதை வடிவமான Limerick மகாகவி து.ருத்திரமூர்த்தி அவர்களால் தமிழில் குறும்பாவாக மலர்ந்திருக்கின்றது. காலத்திற் கேற்றவாறும், பொருத்தமான மாற்றங்களோடும் அதனை வளர்த்தெடுப்பது கவிதைப் பிரியர்களுக்கு மகிழ்ச்சி தருவதாக அமையும்.

○○○

# குறும்புக் கவிதை

**தெறிப்பு,**
'மாற்றங்கள் மட்டுமே
மாறாதது' என்பதல்ல
ஏமாற்றுவதும்
ஏமாறுவதும் கூட
ஏழு தசாப்தங்கள் தாண்டி
இங்கு!

**பறிப்பு,**
தேங்காய் பழம் பாக்கு
பூக்கள் வெற்றிலையென
தேங்கி வழிந்த அர்ச்சனைத் தட்டுக்கள்
வத்தகை அன்னாசி
வகையறியா பழங்களுடன்
கடதாசி மாலை சூடி
கடவுளின் அருள் வேண்டி
கையேந்து நிலையில்!

**அபயம்,**
பட்டு வேட்டி
ஒட்டு வேட்டியாகி
பரிணாமம் பெற்று
பழங்குடியின் கலாசாரத்தை
கழன்று விழாமல் காப்பாற்ற
கைகொடுத்தபடி!

**ஏக்கம்,**
குங்குமத் திலகங்கள்
ஏங்குகின்றன
சுமங்கலிகள் நெற்றியில்
'ஸ்ரிக்கர்' பொட்டு.

**ஷெல்லிதாசன்**



'Grow old with me
The best is yet to be"
- Robert Browning

# முதுமையை நோக்கி ஓடி நடவுங்கள்:

பேராயர். எஸ்.ஜெபநேசன்

என்னோடு ஓடி நடவுங்கள்
முதுமையை நோக்கி ஓடி நடவுங்கள்
வாழ்வின் இனிய பகுதிகள்
இனித்தான்! இனித்தான்!!

வாலிபம் என்பது ஆய்வின் காலமே
அனுபவ மலர்களைச் சேர்த்துப் பார்ப்பதும்
இலட்சியக் கனவில் உறங்கிக் கிடப்பதும்
மின்னல் போன்ற இளமையை முடிக்கும்.

இளமையின் எதிர்பார்ப்பு ஏக்கம் ஐயம்
மனதைத் தாக்குவது பெரும்பயன் அறிவீர்!
அச்சம், ஐயம், கவலை, ஏக்கம்
இல்லா மனிதன் மிருகமே ஆவான்.

சீர்செமு இலட்சியம் உயர்ந்த நோக்கு
தோல்வியைத் தந்திடும் சோர்ந்திட வேண்டாம்
துணிந்து முயல்க! மேலும் மேலும்
என் ஆசை எனக்குத் தீதாய் அமைந்தது
அதனால் தோல்வியென்பது வெற்றியென்பேன்.

உயர்ந்த இலட்சியம் தோற்றுப் போவதும்
குறுகிய ஆசை வெற்றி அடைவதும்
உலகில் காண்பது இயற்கையாகும்.

உலகின் பார்வையில் வெற்றியே தோல்வி
தோல்வி என்பது வெற்றியே ஆகும்
குறுகிய ஆசை படைத்தவன் மிருகம்
உயர்ந்த இலட்சியம் உடையவன் மனிதன்
தன்னந்தனியனாய் ஆன்மீகப் போரில்
உயர்ந்தோன் ஆன்மா, நின்றுபோரிட
உடற்பெலன் அவனுக்கு உதவுதல் அவசியம்

தெளிவுறக் காட்டும் காலமாகும்
வாழ்வை ரசித்தோம் அறிவைப் பெற்றோம்
ஆற்றல், பூர்த்தி நிறைந்தது வாலிபம்
முதுமையில் வாழ்வின் திட்டஅமைப்பு
(Design)

தெள்ளத் தெளிவாய் விளக்கம் பெறுமே
ஆற்றல் தன்னுடன் அன்பு இணையுமே
இறைவன் திட்டம் (Design) விளங்கிக் கொள்ளல்
முதுமை பெற்றிடும் உயர்ந்த பரிசு
இறைவன் திட்டம் வெளிச்சமாக
இறைவனை சரண்புகல் தொடர்ந்துவருமே

உடல் என்பது ஆன்மாவைக் காக்கும்
ரோஜா வலைபோல அமைந்த கூடு
ஆன்மாவைக் கீழே இழுக்கும் கட்டு
உடலின் வெற்றி உலகின் வெற்றி
ஆன்மாபெறுவது ஆன்மீகவெற்றி

ஒன்றுக் கொன்று துணையாய் நிற்பது
வெற்றியின் இரகசியம் அறிவீர் உலகீர்!
இளமையில் கற்ற பாடங்களெல்லாம்
முதுமை பணிவாய் ஏற்றிடல் வேண்டும்

மனிதன் என்பவன் மிருகம் அல்லன்
படிப்படியாக இறைநிலை அடைபவன்
கண்ணால் காணும் சாதனை எல்லாம்
வெற்றியாக முடிந்துவிடாது
சிந்தனை நோக்கம் நல்லெண்ணம் இவையே
வெற்றியின் அளவுகோல் அறிவீர் ஜெகத்தீர்!
உலகத்தார்க்கு மனிதஉள்ளம்
எப்படித் தெரியும்? அறியார் மாந்தர்!

வாலிபத்தின் சிறப்பினை மறுக்கேன்
கண்கள் இரண்டும் காணத் துடிக்கும்
செவிகள் இரண்டும் கேட்கத் துடிக்கும்
மூக்குநன்றாய் முகர்ந்துசொல்லும்
நாக்கு என்றும் ருசித்துக் கூறும்
உடலின் தன்மை இன்பம் தேடும்
அனுபவம் எல்லாம் தேடித் தொகுத்து
பதிந்து வைப்பது மனத்தின் வேலை.

இளமையில் கற்ற பாடமெல்லாம்
முதுமையில் எனக்குப் படைக்கலமாகும்
முதுமையின் எல்லையில் கணக்குப் பார்ப்போம்
நஷ்டமென்பதுசக்திக் குறைவும் துடிப்பின் மறைவும்
சக்திமறையுமுன் தேங்கிநிற்பதை
முகர்ந்துபார்த்தால் நிற்பதுதங்கமே
பத்தரை மாத்து தங்கம் நிற்கும்.

துடிக்கும் இளமையில் கணக்குப் பார்க்க
நேரமெது? அவசரம் அவசரம்!!
மூப்பின்போதுமதிப்பீடுசெய்யலாம்
முடியும் வரையும் தாமதம் வேண்டாம்
இளமையில் எனது சாதனைஎன்ன?
சிந்தித்துப் பார்த்தால் விடையைக் காண்போம்
மூப்பையும் முடிவையும் துணிவுடன் ஏற்போம்.

வாலிபம் எல்லாம் பயிற்சிப் பட்டறை
கலையைக் கருவியை அறிந்திடும் காலம்
தப்பித் தவறிவிழுந்து எழுந்து
கற்றுமுடிக்கும் பருவம் இளமை

முதுமைதானே பரமஞானம்
வெற்றியும் தோல்வியும் சரியும் பிழையும்
நல்லநோக்கும் இலட்சியக் கனவும்
செயற்படாமல் மறைந்துபோவதும்
கவிதைவடிவம் பெறாமல் கழிவதும்
மனிதன் பார்வையில் தோல்விதானே

இறைவன் தீர்ப்பு அப்படிஅல்ல. மனதைப்
பார்ப்பார் நோக்கம் அறிவார்.
பாத்திரம் என்னும் உடலை அமைத்தவர்
பாத்திரங்களின் மகிமை அறிவார்
பாத்திரங்கள் பொய்யாய்க் கனவாய் மறையுமென்பது
மூடர்வாதம் காண்பீர் உலகீர்


மாற்றம் மத்தியில் இறுதியில் நிற்பது
மனிதஆன்மா. இறைவன் இரண்டுமே
குயவன் சில்லுதொடர்ந்துசுழலுமே
காலக் கழிவு இயந்திரம் போல
களிமண் பிசைக்கும் கருவியாகும்

பாத்திரம் மனிதன் குயவன் இறைவன்
இவையே இறுதியில் நிற்பது அறிவீர்
பாத்திரப் படைப்பில் அடியில் நிற்பது
இளமையென்பது உணர்தல் வேண்டும்
விளிம்புகளெல்லாம் முதுமைக் கோலம்
அடியில் வைரமும் விளிம்பில் நெகிழ்வும்
பாத்திரத்தின் தன்மைஅறிவீர்

குயவன் சில்லை உதறித் தள்ளி
பாத்திரத்தில் அமுதம் நிறைத்து
படைத்தவன் தாகம் தீர்த்தல் கடனே!
மனிதவாழ்வின் இறுதிப் பயனே
இளமை முதுமையை.முதுமை முடிவை
நிறைவுசெய்தல் இறைவன் திட்டம் (Design)

கண்ணீர் அஞ்சலி

## அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் மறைவு



பிரபல எழுத்தாளரும் நாடகக் கலைஞருமான அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை 08-09-2019 அன்று அமரரானார். 1933ஆம் ஆண்டு பிறந்த இவர், தனது ஆரம்பக் கல்வியை அராலி சரஸ்வதி மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பெற்றவர். ஆசிரியராகத் தொழில் புரிந்தவர்.

இவர் பல வானொலி நாடகங்களை எழுதியவர். பல மேடை நாடகங்களை எழுதி, இயக்கி, அரங்கேற்றியவர். 527 நாடகங்கள், 14 நாடகநூல்கள், 70 சிறுகதைகள், மூன்று இலக்கிய வழிகாட்டல் நூல்கள், நான்கு இலக்கிய விமர்சன நூல்கள், இலக்கியம் கற்பிக்க வழிகாட்டும் நூல் என்பவற்றை எழுதியவர். இலங்கை வடமாகாண ஆளுநர் விருது, அகில இலங்கை சாகித்தியப்பரிசு உட்பட பல பரிசில்களைப் பெற்றவர்.

அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள், நண்பர்கள், இலக்கியவாதிகள் ஆகியோருக்கு அனுதாபத்தைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, ஞானம் கண்ணீர் அஞ்சலி செலுத்துகிறது.




**தா**யகத்தில், குரும்பசிட்டியில் பிறந்து படித்துப் பட்டம்பெற்று ஆசிரியராகி கடமை புரிந்த வேளையில், போர்க்காற்று இவர் பக்கமும் வீசவே யேர்மனியில் குடியேறினார். கலை இலக்கியத்தில் பெருமளவு நாட்டம் பெற்றவர் இவர். கலாநிதிப் பட்டத்துடன் பல விருதுகளைப் பெற்றவர்.

இவரைப்பற்றி இன்னும் நிறையவே பேசலாம். அந்த அளவிற்கு தகுதி படைத்த கலைமகன். பரம்பரை, பரம்பரையாக கலை இலக்கியத்தில் கைகோத்து நடந்து வரும் வரலாறு இவருடையது.


தொண்ணூறுகளில் இவருடன் எனக்குப் பழக்கமுண்டு. அப்போது நான் கொக்சவலாண்ட் தமிழர் ஒன்றியத் தலவராக இருந்தேன். நாங்கள் ஆரம்பித்து நடாத்தி வந்த ஐந்து பாடசாலைகளின் போட்டி நிகழ்ச்சிகளுக்கு நடுவராக இவரை அழைத்திருந்தோம். எந்த மறுப்பும் சொல்லாது வந்து சிறப்பாக செயற்படுத்தித் தந்தவர்.

ஓவியர் கண்ணனாகவும், பத்திரிகை ஆசிரியராகவும் எனக்கு அறிமுகமாயிருந்தார். அறிவிருந்தும், அமைதியான சுபாவம் அவருடையது. அதனால் பார்த்தவர்களுக்கு அவரைப் பிடிக்கும். இலக்கியத்துறையில் மாத்திரமல்லாது நுண்கலைத்துறையில் அவர் ஆற்றிவரும் சிறப்பான செயற்பாடுகள் பெரும்பாலானவர்கள் அறிந்த தொன்றாகும்.

இத்துறையில் யேர்மனியிலும் தடம் பதித்து வருபவர். நுண்கலைப் பட்டதாரி இவர். நவீன யுகத்தில் எவ்வாறு பத்திரிகையை வெளிக்கொண்டு வரவேண்டும் என்கிற யுக்தியை அறிந்து, அதன் பிரகாரம் வடிவமைத்து அநேக வாசகர்களைத் தனதாக்கிக் கொண்டவர். தற்காலத்தில், முன் பக்கக் கவர்ச்சியே அதனை எடுத்துப் பார்க்கவைக்கும் என்கிற உண்மையை நடைமுறையில் செயல்படுத்தி அதில் வெற்றியும் கண்டவர். இவரால் எழுத்தாளராக அறிமுகமாகி இருக்கும் புதியவர்கள் அநேகம்.

பார்த்தவர்கள் கையில் எடுத்துப் புரட்டிப் பார்க்கும்போது தரம் மிக்க ஆக்கங்களைப் பார்த்து பிரமிக்கிறார்கள். புதிய எழுத்தாளர்களின் அறிமுகம் அவர்களால் கிடைக்கும் நவீன இலக்கியங்கள் பத்திரிகையை மேலும் வளம்படுத்தி வருவதைக்காணலாம். உலகில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் 'வெற்றி மணி'யின் ஓசையை படிப்படியாக ஒலிக்க வைத்துக் கொண்டு வருபவர்.

தந்தையால் வெளிக்கொணர்ந்த சஞ்சிகையை தன் கையில் எடுத்து இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்புற வெளிக்கொணர்ந்து விழா எடுக்கும் இவரின் கடின உழைப்பை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. காலத்தைப் பொன்போல் கருத்தில் கொண்டு கலை இலக்கிய வளர்சியுடன், தான் கல்விகற்ற பாடசாலையை, முன்னேற்றுவதற்கு முடிந்தவரை உதவி வருபவர். சிறந்த சமூக சேவையாளன்.



இவரால் வெளியீடு செய்திருக்கும் பதிப்புகள் பல. அமைதியான சிறந்த நகைச்சுவையாளன், நகைச்சுவையை விரும்பி ரசிப்பவர். இவரால்

**பொன்.புத்திசிகாமணி. யேர்மனி.**

எடுக்கப்படும் இவரது விழாக்களில் புதுமை இருக்கும். நிகழ்வுகளில் சுவை இருக்கும். 'விருதும், விருந்தும்' என்று இவர் நடாத்திய விழா ஒன்றில் நானும் கலந்து, விருந்துண்டு மகிழ்ந்திருக்கிறேன்.

பல தடவை இவரைப் பாராட்டியும் இருக் கிறேன். கதை வசனம், ஒளிப்பதிவு, இயக்குநர் என்று இவருக்கு இன்னொரு பக்கமும் உண்டு. தான் எவ்வாறோ! தனது பிள்ளைகளையும் அதற்குள் புகுத்தி அவர்கள் மூலமும் பெருமை சேர்த்து வருபவர். இவர் மனைவியும் இவருக்கு உதவிகளைச் செய்து ஊக்கப் படுத்தி வருகிறார். தந்தையும், தாயும் ஆசிரியர்கள் என்பதால் அவர்கள் சென்ற பிரதேசங்களுக்குச் சென்று அந்தந்த பிரதேசங்களோடும், அங்கு வாழ்ந்த மக்களோடும் இன்றும் வாழ்ந்து வருபவர்.

இந்தப் பிரதேசங்களில் வன்னி மண்ணும் ஒன்று. நான் வன்னியைச் சேர்ந்தவன் என்பதால் என்னுடன் உரையாடத் தவறுவ தில்லை."காதலியார் சம்மளங் குளத்திற்குப் போயிருக்கிறீர்களா?"

"ஆம் போயிருக்கிறேன்.ஒட்டு சுட்டானில் இருந்து நெடுங்கேணி செல்லும் பாதையில் இரண்டு மைல் வலப்பக்கமாகப் போகவேண்டும்" என்றேன்.

"அங்கே சின்னவயதில் அப்பா படிப் பிச்சவர். எங்கட குவாட்டஸ் வயலுக்கு நடுவில் இருந்தது. வயல் வரப்பால் போகும்போது, இரண்டு பக்கமும் செந்நெல் விளைந்து முறுகிக் கிடக்கும்.பாலும்,தயிரும்,தேனும் என்று வளம் நிறைந்த பூமி. பண்டாரவன்னியனின் காதலி குருவிச்சை நாச்சியார் இங்குதான் இருந்ததாகச் சொல்லுவார்கள். அதைவிட எங்களுக்குச் சொந்தமான அச்சகம் ஒன்று தண்ணீரூற்றில் இருந்தது" என்றார்.

"எனக்குத் தெரியும் மாங்குளம் வீதியில் இருந்தது. நான் இரண்டு தடவைக்குமேல் நோட்டீஸ் அடிக்கப் போயிருக்கிறேன். சக்தி அச்சகம் என்று பெயர் .அச்சு இயந்திரத்தை முதன் முதலில் அங்குதான் பார்த்தேன்" என்றேன்.

"இங்கெல்லாம் நான் வாழ்ந்திருக்கிறேன்" என்பார்.

தமிழ் உலகத்திற்கு இவர்கள் வழங்கி வரும் சேவையும் உழைப்பும் மிகப்பெரியது. விளம்பரம் கேட்டு கால்கடுக்க கடையின் ஓரத்தில் நின்றதை நான் பலமுறை கண்டிருக்கிறேன். சிலர் தப்பாகப் பேசியதையும் நான் கேட்டிருக்கிறேன். "நல்ல உழைப்பு மனுசனுக்கு" இதையெல்லாம் பொருட்படுத்தாது, அவற்றை உரமாக்கி இரவிரவாக கண்விழித்து சஞ்சிகையை வடிவமைத்து,அதனை வாசகர்களிடம் சேர்க்க தூக்கிக்கொண்டு கடைகடையாகத் திரிஞ்சு சேர்ப்பிக்கின்ற கஸ்டம் அவருக்குத்தான் தெரியும்.

சில ஆண்டுகளுக்குப் பின் நடைபெறும் வெற்றிமணி விழாக்களில் பலரது பாராட்டு இவருக்குக் கிடைக்கிறது. இதுவே இவருக்குக் கிடைக்கும் அதிகூடிய வெகுமதியாகும்.

அண்மையில் பிரமாண்டம் கண்ட இவரது 'வெற்றிமணி' வெள்ளி விழா மேலும் ஒரு மைல் கல்லாகும். அவர் உற்சாகத்துடன் வீறு நடைபோடுவார். அதில் எந்த சந்தேகமும் இல்லை. இவ்வேளை நாமும் வாழ்த்துவோம்.

ooo

## பகிர்வோம்....

ஈழமும் தமிழும்



ஈழத்தில் பன்னாலையில் வாழ்ந்த சிவானந்தையர் அவர்களுக்குத் தலையின் முன்பக்கத்தில் உயரமான புடைப்பு இருந்ததன் காரணமாக **மிடாத் தலையர்** என அழைக்கப்பெற்றுள்ளார். மட்டக்களப்பில் வாழ்ந்த வேலாப் போடியாரின் தலை மொட்டை விழுந்திருந்ததன் காரணமாக **மொட்டை வேலாப் போடியார்** என அழைக்கப் பெற்றுள்ளார். மன்னாரில் வாழ்ந்த சரிபுத்தீன் புலவரின் உடல் ஊனத்தைக் குறித்து **நொண்டிப் புலவர்** என சமூகத்தினர் அழைத்துள்ளனர். கற்பிட்டியில் வாழ்ந்த செய்கு அலாவுதீன் (கி.பி. 1890-1938) புலவர், இளமையிலேயே தமது கண் பார்வையை இழந்தவர். இதனால் இவரை **அந்தகப் புலவர்** என்றும் **கடாட்சக் கவி** என்றும் மக்கள் அழைத்துவந்தனர்.

# ஐரோப்பியப் பயணிகள்
# தென்னக ஆடல் நங்கையர் பற்றி எழுதியது:



**1298**இல் வெனிஸ் நகரத்தைச் சேர்ந்த மாலுமி Marco Polo தென் இந்தியா நோக்கிப் பயணமாகி தனது அனுபவங்களை நூலாக எழுதினார். அவரைத் தொடர்ந்து 1728வரை பல யாத்திரீகர்கள், மாலுமிகள், வியாபாரிகள் எனப் பலரும் தென் இந்தியா நோக்கி வந்தார்கள். இந்தியாவின் செல்வச் செழிப்பும் நாகரிகமும் இவர்களை வியப்பில் ஆழ்த்தின. இவர்கள் தாம்பெற்ற அனுபவங்களையும் கண்டு கேட்டவற்றையும் நூல்களாக எழுதினார்கள். அச்சுயந்திரத்தின் உதவியால் பல விஷயங்களை நூல்கள் மூலமே மக்கள் அறிந்த காலமது. இந்திய நாட்டுப் பண்பாடுகள், பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் யாவும் இவர்களுக்குப் புது வெள்ளமாகப் பாய்ந்த அறிவுச் செல்வமானது. அன்றைய மக்களுக்கு மகிழ்வூட்டும் சாதனமாக இருந்த அரங்கக் கலைகளுக்கும் கருவாகவும் அமைந்தது. இவ்வாறு ஐரோப்பியர்கள் கிழக்கின்பால் மோகம் கொண்டனர். இவர்கள் தமது பிரயாண நூல்களிலே ஆடற்கலை பற்றி எழுதிய சில குறிப்புகள் எம்மவர் ஆடற்கலை எவ்வாறு இருந்தது என்பதை அறிய உதவுகிறது. அதேவேளை அவர்கள் எமது நாகரிகத்தை எவ்வாறு பார்த்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.

Marco Polo வின் 'The Travel' என்ற நூலில் அவர் கூறியதைப் பார்ப்போம். மலையாளத்தவர் இறைவனை மகிழ்விப்பதற்கு ஆடுவதற்கும் பாடுவதற்கும் தமது சொந்த மகளை கோயிலுக்கு அர்ப்பணிப்பார்கள். இவ்வாறு கோயிலுக்கு அர்ப்பணிக்கப்பட்ட பெண்கள் புரோகிதர் அழைக்கும்பொழுது இறையை மகிழ்விக்க ஆடுவார்கள். இது இவர்கள் கடமையே. இவர்கள் பெரிய கோயில்களில் அதிக எண்ணிக்கையிலும் உள்ளனர்.

1440இல் இத்தாலியைச் சேர்ந்த பிரபலமான மாலுமி Meolo de conti விஜயநகரத்தில் நடந்த தேர்த்திருவிழா பற்றி விளக்குகிறார்: இரு தேர்களில் இறை விக்கிரகம் நகர் வலம் வந்தமை பற்றிக் கூறுகிறார். தேரின் பின் அழகிய நகைகளால் தம்மை அலங்கரித்த இளம் நங்கையர் இறை புகழ் பாடிய வண்ணம் பின்னே சென்றனர்.

இவரை அடுத்து 1510இல் தென்னகம் வந்த போர்த்துக்கேய வியாபாரி Domingos Paes விஜயநகர ஆடல் நங்கையர் பற்றி எழுதுகிறார். இந்தப் பெண்கள் முறையான திருமண பந்தம் அற்றவர்கள். இவர்கள் நகரின் அழகிய தெருக்களில் நிரையாக அமைந்த மாடிவீடுகளில் வாழ்ந்தவர்கள். மிகுந்த சமூக அந்தஸ்த்தும், மதிப்பும் உரியவர்கள். இவர்களது அந்தஸ்து, மந்திரி பிரதானிகளுக்கு ஒப்பானது. சமூகத்தில் கௌரவ அந்தஸ்த்துள்ள ஆண்களான படைத் தளபதி போன்றோருக்கு ஆசை நாயகியாக உள்ளனர். மரியாதைக்குரிய ஆண்கள் இவர்கள் வீட்டிற்கு போவது சமூக அந்தஸ்த்திற்கு உரியதே. இவர்களின் அந்தஸ்த்து அரசன் மனைவியருக்குச் சரிசமமானது. அரசன் முன்னிலையிலும் வெற்றிலை போடுவார்கள். இது அரச உயர் அதிகாரி எவரும் செய்யத் துணியாத காரியம். அரண்மனை நர்த்தகிகள் மிக உயர்ந்த அந்தஸ்த்து வகித்து வந்தனர். அரண்மனையில் ஆடல் பயில்வதற்கு மண்டபம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு ஆடலுடன் நர்த்தகிகள் பயிற்சி பண்ண பல உபகரணங்கள் காணப்பட்டன.



நாட்டிய கலாநிதி
கார்த்திகா கணேசர்

மேலும் கூறுகிறார், இந்தப் பெண்கள் அதிக பணம் படைத்தவர்கள். அவர்கள் உடல் பூராகவும் மிகுந்த பெறுமதி வாய்ந்த தங்க நகைகளை அணிந்திருப்பர். அந்த நகைகளில் விலையுயர்ந்த வைரம், ரத்தினம், முத்துக்கள் அலங்கரிக்கப்பட்டிருக்கும். கையின் மணிக்கட்டிலும் மேல்கையிலும் நகைகள் பூண்டிருப்பார். இடை கழுத்து என எங்கெல்லாம் ஆபரணங்கள் பூண முடியுமோ அங்கெல்லாம் அணிந்திருப்பர்.. இவர்கள் கல்வி அறிவில் சிறந்தவர்கள். பல பெண்களைத் தமக்கு வேலைக்கு அமர்த்தி இருப்பார்கள்.

Pietro della Valle, 20 November 1623இல் எழுதியது: இவர் ஒரு திருவிழா ஊர்வலம் எவ்வாறு அமைந்தது என்பதை விளக்குகிறார். முதலிலே நாதஸ்வரம். அதைத் தொடர்ந்து வேறுபட்ட வாத்தியங்களை வாசித்தபடி கலைஞர் வந்தனர். தீபந்தங்களை ஏந்தியவர் நிரையாகச் செல்ல அழகிய ஆடல் நங்கையர் கவர்ச்சிகரமான உடையணிந்து அலங்காரமான நகையணிந்து இருவர் இருவராக வர அவர்களின்பின் இறை திருவுருவம் நகரத்தின் மத்திய சதுக்கத்திற்கு ஊர்வலமாக வந்தடைந்தது. மத்தியில் பெரிய இடம் விட்டு யாவரும் அமர்ந்தார்கள். இருவட்டமாக நின்றிருந்த ஆடல் நங்கையர்கள் வட்டத்திற்கு ஒருவராக இருவர் வந்து சுவாமியைப் பார்த்த வண்ணம் நின்றனர். அவர்கள் வணக்கம் தெரிவிக்கும் பாணியில் 3 அடி முன்னும் 3அடி பின்னுமாகப் பல தடவை போய்வந்தனர். நடுவே வந்து ஆடியவரின் ஆடல் வட்டத்தில் நின்றவரது ஆடலையும் விட அழகாக இருந்தது. அவர்கள் இருவரும் சிறந்த நர்த்தகிகள். அவர்கள் வெவ்வேறு வகையாகக் குதித்தும் வளைந்தும் இடையிடையே நிலத்தில் அமர்வது போலப் பதிந்தும் ஆடினர். சில சமயங்களிலே மிக உயரமாகக் குதிக்கும் பொழுது அவர்கள் அணிந்திருக்கும் கச்சம் போன்ற உடை மேல் நோக்கிப் பறக்கப் போவதை உணர்ந்தவர்களாக அவர்கள் கை அதை அமத்திப் பிடிக்க தயாராகிவிடும்.

Della Valle, சில நர்த்தகிகள் சாமரை வீசுவதாகவும், பிறிதொரு கூட்டத்தின் நட்டுவனாரின் வழி நடத்தலில் ஆடுவதாகவும் எழுதுகிறார். இவரது வர்ணனை மூலம் கோயில் திருவிழாவில் ஆடல் எவ்வாறு இடம்பெற்றிருந்தது என்பதை அறியமுடிகிறது.

1711இல் Denmark அரசனால் திருவனந்த புரத்திற்கு அனுப்பப்பட்ட கிறிஸ்தவ மத போதகரே Bartholomaus Ziegenbalg. இவரது 'Malabarisches Hindenthum' என்ற நூல் 1711இல் எழுதப்பட்டது. 1926இலேயே வெளியிடப்பட்டது. Ziegenbalg இன் தமிழ் அறிவு அவரைப் பலருடனும் உரையாடிப் பல விஷயங்களையும் அறிந்து எழுதக்கூடிய வல்லமையைக் கொடுத்தது. இவருக்கு முன் வந்தவர்கள் தமிழ்மொழி அறிவு அற்றவர்களாகவே இருந்தனர். அவர் கோயில்பற்றி விரிவாக எழுதியிருந்தார். அங்கு 13 வகையான வெவ்வேறு சேவை செய்வோர் இருந்தனர். அவர்களில் ஒருவரே தேவதாசிகள் அல்லது இறைவனின் அடிமைகள். இவர்களின் பணி இறைவனுக்கு ஆடுவதும் பாடுவதும். இவர்கள் சிறந்த கல்வி அறிவு உடையவர்கள். செய்யுள்களைப் புரிந்து விளங்கிக் கொள்ளக் கூடியவர்கள். அதனால் புத்தி கூர்மை உள்ள பெண்களே இதற்கு தெரிவு செய்யப்படுகிறார்கள். அத்துடன் அழகிய உடல் அமைப்பைக் கொண்டவர்கள். இவ்வாறு தெரிவு செய்யப்பட்டோர் திருமணம் செய்துகொள்ளக் கூடாது. இவர்களது வசீகரத் தோற்றமே இவர்கள் யார் என்பதை எடுத்துக்காட்டும். மிகப் பெரிய கோயில்களில் இவர்கள் அதிக எண்ணிக்கையிலும், சிறிய கோயில்களில் குறைந்த எண்ணிக்கையிலும் இருப்பார்கள்.

இவர்கள் கோயில்களில் தாசியாக ஏற்றுக்கொள்ளப்படும்போது அவர்களுக்கும் இறைவனுக்கும் திருமணம் நடைபெறும். தாசியாகத் தெரிவு செய்யப்பட்ட பெண்ணுக்கும் இறைவனுக்கும் புரோகிதர் திருமணச் சடங்கை நடத்திவைப்பார். அதன் அடையாளமாக அவர்களுக்குத் தங்கச் சங்கிலி அணிவிக்கப்படும். இது மற்றைய திருமணமானவர்களினது அடையாளம் போன்று திருமணத்தின் அடையாளம் ஆகும். இந்தத் திருமணவிழா நிறைவேறியதும் மற்றைய திருமணங்கள் போலவே திருமணப் பெண் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்படுவார்.

18ஆம் நூற்றாண்டில் டச்சுக்காரரான Jacob Haafner மூலம் ஐரோப்பியர் மிக விரிவாக தேவதாசி பற்றி அறிய முடிந்தது. இவர் 13 வருடங்கள் இந்தியாவிலும் சிறீலங்காவிலும் வாழ்ந்தவர். இவர் நன்றாகத் தமிழ் பேசக்கூடியவர் மட்டுமல்ல ஏகாதிபத்தியத்தை எதிர்ப்பவர்.

அத்துடன் மதபோதகராக வந்த கிறிஸ்தவ பாதிரிகள் இங்கு நேரத்தை வீணடிப்பவர்கள் எனக் கூறுபவர். சில கிறிஸ்தவ பாதிரிகள் தேவதாசிகள் பரத்தை தொழில் செய்வோர்

என எழுதியதை வன்மையாக கண்டித்தார்.

தேவதாசிகளின் முக்கிய கடமை ஆடல் பாடல் மூலம் இறை பக்தியை வளர்ப்பதே. இறை மேல் மதுர பக்தியைப் பரப்புவதே. பக்தனோ ஜீவாத்மா. பரமாத்மாவான இறையில் கொள்ளும் பக்தி முது காதலாகி மதுர பக்தி எனப்படுகிறது. ரசங்களில் சிறந்தது சிருங்காரம், இறைவனை அடையத் துடிக்கும் ஜீவாத்மாவின் தாபத்தைக் காட்டுவது மதுரபக்தி. அதன் அர்த்தத்தை, தார்ப்பரியத்தை புரியாது, தாசியர் கேவலமான ஆடல்களை கோயில்களில் ஆடினர் எனக் கிறிஸ்தவ பாதிரியார் கொண்டனர். இவ்வாறு ஒரு பக்தி தெளிவு இருப்பதை அவர்கள் அறியாதவர் என்றார் Haafner.

Haafner தேவதாசிகளில் இருவகை தாசிகள் இருந்ததாக குறிப்பிடுகிறார். ஒரு வகையினர் கோயிலில் துதிபாடி ஆடுபவர்கள், மற்றவர்கள் கோயில் கட்டுப்பாடு அற்றவர்கள். இவர்கள் மக்கள் தங்கும் இடங்கள், திருமணவிழா போன்றவற்றில் ஆடுபவர்கள். இத்தகைய பிரிவை பூரியிலுள்ள ஜகநாதர் கோவிலில் காணலாம். (Bhitar) பவித்திர கன்னியர் கோயிலின் உள்ளே சுவாமியின் முன் ஆடுவோர், பகிரங்க கன்னியர் வெளிபுறத்தில் ஆடுவோர்.

E.Thurston னும் மு.றங்கசாமியும் 1909இல் எழுதிய 'Castes and Tribes of South India'என்ற நூலில், இருவகை தேவதாசிகள் இருந்ததாகக் கூறுகிறார்கள். ஒன்று வலங்கை மற்றயது இடங்கை. சுசீந்திரம் கோயிலில் இருவகை தாசிகள் இருந்தனர். முறை குடி நாளாந்த வேலை செய்பவர்கள். சிறப்பு குடியினர் முக்கிய நிகழ்ச்சியில் பங்கு கொள்பவர்கள். சிவன், விஷ்ணு ஆலயங்கள் முக்கியமானவை. இவற்றிற்கு உயர்ஜாதி எனக் கொள்ளப்பட்ட வைசியர் குலத்தில் இருந்தே சிறுமியரை சேர்த்துக் கொண்டனர். அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தாசிகள் கோயில் சுற்றாடலுக்குள்ளேயே வாழவேண்டும். அவர்கள் அவ்விடத்தை விட்டு வெளியேபோக முக்கிய புரோகிதரிடம் உத்தரவு பெறவேண்டும். இவர்கள் பிராமணர் மற்றும் உயர் ஜாதியினரின் ஆசை நாயகியாக வாழ்ந்தனர். தேவதாசி ஒருத்தி தாழ்ந்த ஜாதியுடன் உறவு பூண்டால் கடுமையாகத் தண்டிக்கப்படுவாள். அத்துடன் ஜாதியில் இருந்து விலக்கப்படுவாள். இதை ஆகமம் விரிவாக விளக்குகிறது.

இரண்டாம் வகையைச் சேர்ந்த தாசியர் கைகுழர் எனப்படும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் உயர்ஜாதி வாரிசுக்கு அளிக்கப்படும் பயிற்சியே இவர்கட்கும் அளிக்கப்படும். இவர்கட்கு உயர் ஜாதிக்கான கட்டுப்பாடு கிடையாது. இவர்கள் கிராமங்களிலும் நகரங்களிலும் வாழ்வார்கள். எங்கும் போகும் சுதந்திரம் கொண்டவர்கள். இவர்கள் கோயில் மானியம் தவிர இரசிகரிடம் இருந்தும் பணம், நகை பெற்றுக் கொள்வார்கள். உயர் ஜாதியினர் கோயிலுக்கு மட்டுமே ஆடலாம். இவர்கள் பல இடங்களிலும் ஆடலாம்.

டச்சுக்காரர் ஆடல் நங்கையரின் ஒப்பனை அலங்காரம் மட்டுமல்லாது அவர்களது மார்பு கச்சத்தின் அழகையும் வர்ணித்துள்ளார். மலர்களில் பிரியமுள்ளவர்கள் இவர்கள். தலையில் மலர்கள் இல்லாது இவர்களைக் காணமுடியாது. அழகிய இளம் நர்த்தகிகள் இயற்கை வசீகரமும் உடையவர்கள். அதற்கேற்ற முழுமையான உடையும் அவர்கள் அழகை மெருகூட்டும். எளிமையான அழகிய தலை அலங்காரம், மார்புக் கச்சம் அணிந்த திரண்ட மார்பகம், நீண்ட கைகள். அழகிய மடிப்புகளுடன் உடலைக் கவ்விப்பிடிக்கும் உடை, அழகிய நளினமான இடையழகி என அவளது ஆடை அவள் அழகை மேலும் அழகூட்டுவதற்காகவே அமைந்துள்ளது. Haarfner கூறுகிறார் இந்த நர்த்தகிகள் எமது ஐரோப்பிய நர்த்தகிகளில் இருந்து வேறுபட்டவர்கள். அவர்கள் அபிநயத்தில் சிறந்தவர்கள். காதல் கதைகளையோ வேறு எதையும் நடித்துக் காட்டும் வல்லவர்கள். ஏன், யுத்தக் காட்சிகளையும் அவர்களால் அழகாகச் சித்தரிக்க முடியும். இந்த ஆடல், உணர்ச்சியை மேடையில் காட்டுவதில் உன்னதமான இடம்வகிப்பது.

18ஆம் நூற்றாண்டின் இறுதிவரை மேற்கத்தியர் மத்தியில் Bayadere என்ற வார்த்தை தேவதாசிகளை குறிப்பதாகவே இருந்தது. இந்த வார்த்தை இவர்களுக்கு ஒரு கிழு கிழுப்பூட்டும் வார்த்தையாகவே இருந்தது. இதற்குக் காரணம் தென்னகம் நோக்கி வந்த பயணிகளின் நூல்களே காரணமாக இருந்தது. இந்தியப் பின்னணியில் தேவதாசிகளை மையமாகக் கொண்டு பல நாடகங்களும் உருவாகின. தென் இந்திய தெய்வமான சிவனாரும் இவர்களைக் கவர்ந்தார். சினிமா என்ற ஊடகம் வருமுன் நாடகம், 'ஒப்பறா' எனப்படும். இசை நாடகம் Ballet என்ற கதை கூறும் ஆடல். இவை யாவற்றிலும் தேவதாசியும் அவள் ஆடலும், அவள் கோயில் இறையையே மணப்பவள் என்ற கருத்தும் கொண்ட கலை வடிவங்கள் மேற்கு நாடுகளில் உருவாகின.

○○○

தலையை மூடி முக்காடிட்டு, பாதங்கள் தெரியாமல் வெள்ளைப் புடைவை உடுத்து, மணிக்கட்டுகள்வரை நீண்டிருந்த வெள்ளை ரவிக்கை அணிந்து விதவையான எனது மூத்தம்மா குசினிக்குள் கிடந்த குற்றியொன்றில் குந்திக்கொண்டிருந்தார். ரொம்பவும் கட்டுப்பெட்டித்தனமானவர். விடலைச் சிறுமியாக கிராமத் தெருக்களில் அவரோடொத்த வள்களுடன் சுற்றித் திரிந்தபோது மழைக்கதிர்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்குக்கூட பாடசாலை தென்னோலை கூரைகளுக்குள் ஒதுங்காதவர். சுத்த கிணற்றுத் தவளை.

வாசலில் விசாலித்துப் படர்ந்திருந்த மாமரத்தின் உறுதியான கிளையொன்றில் போடப்பட்டிருந்த ஊஞ்சலில் வாப்பா ஆடிக்கொண்டிருந்தார். அதற்கு சமீபமாக நான்கு பக்கங்களிலும் தென்னங்குற்றிகளை படுக்கப் போட்ட அகலமான சதுரமொன்றில் கொட்டிப் பரப்பியிருந்த வெண்மணலில் உட்கார்ந்து வெற்றிலை சப்பிக்கொண்டிருந்தார் எனது உம்மா.

ஆறு வயதான நானும் எனது மூத்த ராத்தாவும் சற்றுத் தள்ளி திட்டியிலானதோர் இடத்தில் கோலிக் குண்டு விளையாடிக்கொண்டிருந்தோம். அந்த வயதிலேயே குண்டு விளையாடுவதில் நான் விண்ணன்.

வேகமாக வாசற்கதவைத் திறந்தவாறு இக்பால் மாமா அரக்கப்பரக்க வருவது தெரிந்தது. அவரது முகம் நிறைய வெயர்வை.

''வா மச்சினன். நான் எழும்புறன். உஞ்சில்ல இருக்கிறீயா?' வாப்பா கேட்டார்.

''அவருக்கு முகமெல்லாம் வேக்குது. காக்காவுக்கு உஞ்சில குடுத்துட்டு இப்படி வந்து இருங்க'' என்றார் உம்மா.

''உம்மா எங்க புள்ள?'' வேகமாக ஊஞ்சலை அசைத்தவாறே மாமா கேட்டார்.

''கூப்புடறேன். என்ன முகமெல்லாம் ஒரு மாதிரியா கிடக்கு? ஏதும் பிரச்சினையோ?'' உம்மா கேட்டார்.

''என்ன மன, இப்பதானா வந்த?'' குசினிக்குள் நின்றவாறே முகத்தில் ஒரு பக்கத்தை மட்டும் வெளியே காட்டியவாறு மூத்தம்மா கேட்டார்.

''அதை ஏன் கேக்கிறீங்க. பரமக்குடியிலே ஒரு வெள்ளாளச்சி என்னை ரொம்ப கேவலமா நடத்திட்டா?'' முகத்தில் கோபம் வெடிக்க மாமா கூறினார்.

''உன்னையாடா மச்சினன்? என்னடா நடந்தது?''.

தூத்துக்குடியிலிருந்து வத்தை மூலமாக நாட்டோடு கொண்டு வந்து நெய்னாகுடியில் வாவிக்கரையோரமாக அமைத்திருந்த கிட்டங்கியில் வைத்து வியாபாரம் செய்பவர் மாமா.

புதிதாகக் கட்டிய வீட்டுக்கு மேய்வதற்காக இக்பால் மாமாவிடம் கடனுக்கு நாட்டோடு வாங்கிய பரமக்குடியைச் சேர்ந்த ஒருவன் பொருந்திக்கொண்டவாறு உரிய வேளையில் பணம்



கொடுக்கவில்லை. பலர் மூலமாக செய்தி அனுப்பியும் அவன் செவிசாய்க்கவில்லை. அன்று காலையில் அவனைத் தேடி நாலு பேரிடம் விசாரித்து அவனுடைய வீட்டுக்குப் போயிருக்கிறார்.

நெய்னாகுடியில் பெரும்பான்மையினராக முஸ்லிம்கள் வசிப்பதைப் போன்று அடுத்த ஊரான பரமக்குடியில் தமிழர்கள் வதிகின்றனர். பொதுவாக இரண்டு சமுகத்தினரும் பரஸ்பரம் விட்டுக்கொடுத்து ஒற்றுமையாக வாழ்ந் தாலும் சிற்சில சந்தர்ப்பங்களில் நான் பெரிதா, நீ பெரிதா போன்ற தான்மைப்(ego) பிரச்சினைகள் தலைதூக்கி சிலநாட்களுக்கு நர்த்தனம் ஆடி ஓயும்.

இக்பால் மாமா அங்கிங்கென அலைந்து தேடிச் சென்ற வீட்டை அடையும் வேளையில் கடுமையான தண்ணீர் தாகம் ஏற்பட்டது. திறந்து கிடந்த வாசற் கதவூடாக உள்நுளைந்து விசாரித்தபோது தேடிச் சென்றவர் வீட்டில் இல்லை என அறிந்தார். களைப்பு மிகுதியால் அவர்களது விட்டுத் திண்ணையில் அமர்ந்து குடிப்பதற்காக தண்ணீர் கேட்டுள்ளார். அப்போதுதான் அந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பரந்த வளவில் வேலியோரமாக நின்ற மரத்தில் துறட்டியொன்றால் முருங்கைக்காய் பறித்துக்கொண்டிருந்த பெண்ணொருத்தி ஈடுபட்டுக்கொண்டிருந்த வேலையை அப் படியே விட்டுவிட்டு வேகவேகமாக நடந்து வந்து "ஆர் நீர்? என்ன வேணும்?" என வினவினாள்.

இக்பால் மாமா தன்னை அறிமுகப் படுத்தியவாறே வந்த காரியத்தை சுருக்கமாகக் கூறி, களைப்பாயிருப்பதால் சற்று தங்கி தண்ணீர் குடித்துவிட்டுப் போக இருப்பதாகச் சொன்னார்.

"அதுக்காக திறந்த வீட்டிலே எதுவோ புகுந்தது போல நேரா திண்ணையிலே வந்து உட்காருவீரோ? எழும்பிப் போய் வாசல்ல மர நிழலிலே இரும். அடியே பாக்கியம்! தண்ணி குடுக்கிறயென்டா சீவின சிரட்டையிருந்தா அதிலே குடடி" என்றாள் சற்று சத்தமிட்டு.

இக்பால் மாமாவை அவமானம் பிடுங்கித் தின்றது. பரமக்குடியிலுள்ள எத்தனையோ வீடுகளுக்கு எத்தனையோ தடவைகள் சென்றிருக்கிறார். ஒரு நாளும் இல்லாத கூத்தாக இன்றைய கூத்து இடம்பெற்றிருக்கிறது. என்ன நினைத்தாரோ, சரேலென எழும்பி தொண்டைத் தாகத்துடன் வெளியேறி, வெளியே வேலியில் சாத்தியிருந்த சைக்கிளை நெருங்கும்போது "அடியே பாக்கியம்! வாளியிலே தண்ணி கொண்டு வந்து அந்த மனுசன் உட்கார்ந்திருந்த இடத்தைக் கழுவடி" என்ற உள்ளே ஒலித்த ஓங்கிய குரலொலியைக் கேட்டார். தாகத்தை அவர் தணித்துக்கொண்டது சொந்த வீட்டுக்கு வந்துதான்.

இக்பால் மாமா கூறி முடித்துவிட்டு ஒற்றைக் காலை தரையில் குற்றி ஊஞ்சலை வேகமாக ஆடவிட்டார்.

"இப்ப எல்லாரும் கேளுங்க. நம்முட ஊட்டுக்கு வார அவங்கட தாழ்ந்த சாதி ஆக்கள உள்ளுக்கு எடுக்காம வெளியேயே வைச்சி நான் கதைச்சி அனுப்பிவிடுவது சரியா? புழையா?" மூத்தம்மா முழு முகத்தையும் காட்டாமலேயே சத்தமாக கேட்டார்.

"எல்லோரையும் ஒரே மாதிரி நடத்த ஏலாது. அவங்கவங்களுக்கு ஏத்தமாதிரி பட்டும் படாம நடந்துக்க வேண்டியதுதான்" என்றார் மிதவாதியான எனது உம்மா.

மூத்தம்மாவின் சில கொள்கைகளை எனது உம்மா முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை. என்னைவிட சில வருடங்கள் மூத்தவளான ராத்தா ஒரு கொடுக்கான். அவளுக்கு மூத்தம்மா வின் குணம். எப்பவும் மூத்தம்மா சார்புதான்.

சில நாட்கள் கழித்து எங்கள் வீட்டில் துணி வெளுக்கும் கட்டாடி கந்தப்பன் வந்தார். வீட்டில் என்னைத் தவிர வேறு யாரும் இல்லை. மூத்தம்மா, உம்மா உட்பட எல்லாப் பெண்களும் சொந்தக்காரர் ஒருவரின் வீட்டு விசேசத்துக்காகப் போயிருந்தனர். வாப்பா அவரது வியாபார விடயமாக பக்கத்து டவுணுக்கு சென்றிருந்தார்.

"என்ன மன, ஊட்டிலே பொம்பு ளைகள் ஒருவரும் இல்லியா?" கிராமம் முழுதும் நடந்து நடந்து களைப்படைந் திருந்தனாற்போலும் கந்தப்பன் ஈனமான ஒலியில் கேட்டார்.

"ஓமண்ணே! திண்ணைக்குள்ள இருங்க. அவங்க வாற நேரமாயிட்டு. இப்ப வந்துடு வாங்க" என்றேன். முதுகில் கிடந்த துணி மூடையை இறக்கி வைத்துவிட்டு திண்ணை யில் பாயில் அமர்ந்தார். குடிப்பதற்கு நீர் கேட்டார். ஒரு கோப்பையில் மொண்டு வந்து கொடுத்தேன்.

சில நிமிடங்களில் பெண்கள் வீடு திரும்பினர்.

மூத்தம்மா உள்ளே நுளைந்ததுதான் தாமதம் "ஓய் கட்டாடி! எழும்பு! யார் உன்னை திண்ணைக்குள்ள இருக்கச் சொன்னது?

நீயாடா சொன்னே?" என கத்தினார் என்னைப் பார்த்து. ததிவிதிப்பட்டு கந்தப்பன் எழுந்தார்.

"நான் உனக்கிட்ட பல தடவைகள் சொல்லிதவா இருக்கேன். ஊட்டுக்கு வந்தா உள்ளே வந்து இருக்கப்படாதென்டு. சரிசரி. வெளுத்து வந்த துணிகளைக் கொடுத்துட்டு பழசுகளை எடுத்துக்கிட்டுப் போ" என கந்தப்பனிடம் கூறிவிட்டு ராத்தாவைப் பார்த்து "இந்தாள் போன பின்னாடி இருந்த இடத்த தண்ணிய ஊத்தி கழுவி விடு. தண்ணி குடிச்ச கோப்பையையும் மண் தேய்ச்சிக் கழுவு" என்றார் மூத்தம்மா.

ஆறாம் வகுப்பில் கற்பதற்காக நெய்னா குடி மத்திய வித்தியாலயத்தில் வாப்பா என்னைச் சேர்த்துவிட்டார். வகுப்பில் மூன்றாவது வரிசையில் எனது மேசை. எனக்கு இடப்புறமாக பரமக்குடியிலிருந்து வரும் குணம் எனும் குணரத்தினம். நிறைந்த தோற்றமானவன். அலையும் தலைமுடியை எண்ணெய் தேய்த்து சைட் எடுத்து வாரிவிட்டிருப்பான். ஏழைப் பையன் என்பதை பின்னர்தான் தெரிந்து கொண்டேன்.

குணமும் நானும் ஆழ்ந்த தோழமையுடன் பழகத் தொடங்கினோம். நான் நெய்னாகுடியில் குண்டு விளையாடுவதில் எவ்வளவு சமர்த்தனோ அதை விடவும் பரமக்குடியில் அவன் சமர்த்து என்பதை வகுப்பு நேரத்தின் பின்னர் நின்று பாடசாலை திட்டியொன்றில் குழி போட்டு விளையாடியபோதுதான் தெரியவந்தேன். என்னிடம் கற்குண்டுகள்தான் இருந்தன. அவன் வைத்திருந்தது பாரமான இரும்புக் குண்டுகள். விளையாட்டில் தோற்பவனை கடைசிக் குழியருகில் குந்தி சுட்டு விரலையும் சின்னி விரலையும் நிலத்தில் குத்திப் பிடிக்குமாறு கூறி அவனது மொழியைக் குறி பார்த்து முதலாவது குழியருகில் குந்தி கற்குண்டை குணம் தெறித்தானென்றால் தோற்றவன் போடும் ஆ… சத்தம் பாடசாலைச் சுவர்களை அசையவைக்கும்.

அவனும் நானும் உயிர் தோழமையுடன் பழகிக்கொண்டிருப்பது நெய்னாகுடியைச் சேர்ந்த சில மாணவர்களுக்கு வேப்பங்காயாக கசந்தது. அதற்கான காரணங்கள் இரண்டு. ஒன்று அவன் சாதியில் பறையன். சாவு வீடுகளில் பறை அடிப்பவர்கள். அவனுடைய சித்தப்பன் நெய்னாகுடி வீதிகளில் குப்பை அள்ளுபவன். மாலையில் தெருச் சந்திகளில் பொருத்தப்பட்டிருந்த திரி விளக்குகளுக்கு மண்ணெண்ணெய் ஊற்றி எரியவிடுபவன். மற்றது என்னைத் தவிர்ந்த மற்றவர்களுடன் குணம் குண்டு விளையாடுவதைத் தவிர்த்துக்கொள்வது அல்லது அவனால் மொழிகளில் குண்டடிபட்டிருப்பது அல்லது விளையாட்டில் நானோ அவனோ தோற்றால் மொழிகளை நோக்கி குண்டடிப்பதை தவிர்த்துக்கொள்வது.

அவனையும் என்னையும் பிரிப்பதற்காக அவர்கள் சதி செய்தார்கள். அதற்காக அவர்களுக்குக் கிடைத்த பெரியதொரு துரும்புச் சீட்டு ஒரு தடவை குணத்தின் வீட்டுக்கு சமீபமாகவிருந்த அவர்களது கோவில் உற்சவமொன்றைப் பார்ப்பதற்காக நான் சென்றது தான்.

ஒன்றை நாலாக, எட்டாக பெருப்பித்து எனது வாப்பாவிடம் மூட்டிவிட்டிருந்தனர். கோயில் திருவிழா பார்த்துவிட்டு இரவில் தன்னந்தனியாக பரமக்குடியிலிருந்து இருட்டில் நான் வீட்டுக்கு வந்தபோது வாப்பா ருத்திர தாண்டவம் ஆடத் தொடங்கிவிட்டார். கைகள் இரண்டையும் மெல்லிய கயிறால் கட்டிவிட்டு முதுகில் மூங்கில் பிரம்பொன்றால் குறுக்குமறுக்குமாக கோடு வரைந்தார். குறுக்கிட்ட உம்மாவின் கையிலும் ஒரு கோடு. போதாக்குறைக்கு மூத்தம்மா பெருங் குரலெடுத்து குசினிக்குள் நின்றவாறே எனக்கு வைதார்.

## பகிர்வோம்....



### ஈழமும் தமிழும்

தமிழ் நாட்டைச் சேர்ந்த கனகசபாபதி என்பவர் ஈழத்துடன் பெரும் தொடர்பு கொண்டவர். ***கனகசபாபதி யோகி***, ***கலைஞானி***, ***பண்டார சந்நிதி*** ஆகிய சிறப்புப் பெயர்களையும் இவர் கொண்டிருந்தார். இவர் பெற்றிருந்த ***தம்பிரான்*** பட்டமும் இவரின் கைகள் ஓர் சம்பவத்தில் கூழாகிவிட்டதன் காரணமாகவும் ***கூழங்கைத் தம்பிரான்*** என அழைக்கப்பெற்றவர். கை உறுப்பில் காணப்பெற்ற குறையினைக் குறித்து கனகசபாபதி அவர்கள் கூழங்கை என்று அழைக்கப்பெற்றுள்ளார்.

# படைப்பு : ஒரு நீக்ரோவ சம்பிரசங்கம்

கடவுள் அண்ட வெளியில் இறங்கினார்
சுற்று முற்றும் பார்த்தார்
'தனித்து இருக்கும் எனக்கென
ஓர் உலகைப் படைப்பேன்!' என்றார்

கடவுளின் கண்ணுக்கெட்டிய தூரம் வரை
எல்லாவற்றையும் இருள் மூடியிருந்தது
சைப்பிறஸ் சதுப்பு நிலத்தின்
ஒரு நூறு நள்ளிரவுகளை விட
கரிய இருள் கவிந்திருந்தது

அதன்பின் கடவுள் புன்முறுவல் பூத்தார்
ஒளி பிறந்தது
இருள் ஒரு புறம் ஒதுங்கியது
மறுபுறம் ஒளி பிரகாசித்தது
'நல்லது' என்றார் கடவுள்

பிறகு கடவுள் கைகளை நீட்டி ஒளியை ஏந்தினார்
அதை உருட்டிச் சூரியனைப் படைத்தார்
விண்ணகம் எங்கும் அதை விளாசி எரியச் செய்தார்
சூரியனைப் படைத்த பின் எஞ்சிய ஒளியைச் சேகரித்து
பிரகாசிக்கும் பந்தாக்கி இருளில் வீசினார்
சந்திரனும் நட்சத்திரங்களும் இரவை அலங்கரித்தன
பிறகு இருளுக்கும் ஒளிக்கும் நடுவே
உலகை வீசி எறிந்தார்
'நல்லது' என்றார் கடவுள்

பிறகு கடவுள் கீழே இறங்கினார்
அவரது வலக்கையில் சூரியன்
இடக்கையில் சந்திரன்
ஆவர் தலையைச் சூழ உடுத்தொகுதி
திருவடிகளின் கீழ் மண்ணுலகம்
கடவுள் நடந்தார், அவர் மிதித்த இடமெல்லாம்
நிலம் குழிந்து பள்ளத்தாக்குகள் உண்டாக
மலைகள் வீங்கி எழுந்தன
பிறகு நின்று நிதானித்துப் பார்த்தார் கடவுள்
பூமி வெப்பமாக வெறுமையாய்க் கிடந்தது
உலகின் விளிம்புவரை நடந்துபோய்
துப்பினார், ஏழு கடல்கள் உண்டாயின
கண்களை இமைத்தார் கடவுள், மின்னல் வெட்டியது
கைகளைத் தட்டினார், இடிமுழங்கியது
பூமி மீது மழை பொழிந்தது

பிறகு பச்சைப் புல் முளைத்தது
செக்கச் சிவந்த பூக்கள் மலர்ந்தன
தேவதாரு மரம் வானத்தை தன் விரலால் சுட்டியது
சிந்தூர மரம் கைகளை விரித்தது
நிலத்தின் குழிகள் குளங்களாயின
ஆறுகள் கடலை நோக்கி ஓடின
கடவுள் மீள முறுவலித்தார்
வானவில் அவர் தோள்களை வளைத்துக் கொண்டது

கடலின் மீதும் நிலத்தின் மீதும்
கடவுள் கையை அசைத்துச் சொன்னார்
'பெருகுக, பெருகுக!'
கடவுள் கையைக் கீழே விடுமுன்பே
மீன்கள் ஆறுகளிலும் கடலிலும் நீந்தலாயின
விலங்குகள் காடுகளில் அலைந்தன
பறவைகள் தம் சிறகுகளால் காற்றைக் கிழித்தன
'நல்லது' என்றார் கடவுள்

பிறகு கடவுள் சுற்றிவர உலவினார்
தாம் படைத்தவற்றைச் சுற்றிப் பார்த்தார்
தன் சூரியனைப் பார்த்தார்
தன் சந்திரனைப் பார்த்தார்
தன் சின்னஞ்சிறு நட்சத்திரங்களைப் பார்த்தார்
தான் படைத்த உலகையும் உயிரினங்களைப் பார்த்தார்
'இன்னமும் தனிமையை உணர்கிறேன்' என்றார் கடவுள்
பிறகு கடவுள் ஒரு மலையோரம் இருந்து சிந்தித்தார்
தன் தலையைக் கைகளில் ஏந்தியபடி
ஓர் ஆற்றோரம் அமர்ந்து சிந்தித்தார்
நீளச் சிந்தித்த பின் சொன்னார்,
எனக்கென ஒரு மனிதனைப் படைப்பேன்

ஆற்றுப் படுகையில் களிமண் எடுத்தார்
ஆற்றங்கரையில் முழந்தாளிட்டு அமர்ந்தார்
சூரியனைக் கொளுத்தி வானில் நிறுத்தி
இரவின் தொலைதூர மூலையில்
நட்சத்திரங்களைப் பதித்த
உள்ளங்கையில் பூமியை உருட்டிய
இந்த சர்வல்லமை படைத்த
தன் குழந்தையைப் பேணும் ஒரு தாய் போல
புழுதியில் முழந்தாளிட்டு
ஒரு பிடி களிமண்ணைப் பிசைந்து பாடுபட்டு
தன் சாயலாகவே ஒரு உருவைப் படைத்தார்
பிறகு அதனுள் உயிர் மூச்சை ஊதினார்
மனிதன் உயிருள்ள ஆத்மா ஆனான்
ஆமென், ஆமென்

**ஆங்கில மூலம் : ஜேம்ஸ் உவெல்டன்**
**தமிழில் : சோ.ப**

‘‘டேய் சைத்தான்! காபிர்களுட உறவு கரண்டிக் காலுக்கு கீழேடா. அதிலயும் நீ பழகிறவன் எளிய சாதிடா. இக்பால் மாமாக்கு என்ன நடந்ததுன்னு மறந்துடாதடா. வைக்க வேண்டிய இடத்தில அவங்கள வைக்கணும்டா’’ என்றார்.

‘‘இனிமே நீ அவனோட சேர்ந்து திரியிறாயென்று கேள்விப்பட்டா ஸ்கூல்ல இருந்தே உன்னை விலக்கி எடுத்துடுவேன்’’ என்றார் வாப்பா இறுதி முடிவாக.

வாப்பா என்னை விலக்குவதற்கிடையில் என்ன காரணமோ ஏழாம் வகுப்பு தொடக்கத்திலிருந்தே குணம் பாடசாலைக்கு வருவதை நிறுத்திவிட்டான். அவனின் குடும்பம் பரமக்குடியிலிருந்து தூரத்திலிருக்கும் ஏதோவோர் ஊருக்குச் சென்றுவிட்டதாக பின்னர் அறியவந்தேன்.

எனக்கு வயது இருபத்தினான்குக்கு மேலாகி விட்டிருந்தது. டவுனிலுள்ள தேர்தல்கள் காரியாலயத்தில் இலிகிதனாக பணியாற்றிக்கொண்டிருந்தேன். ஒரு தேர்தல் நடக்கவிருந்ததால் இரவு பத்து பத்தரை வரை அலுவலகத்தில் தங்கி தேர்தலுக்கான செயற்பாடுகளில் ஈடுபட்டேன்.

காலையில் ராத்தாவின் வீட்டுக்குச் சென்று அடுத்த நாள் முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடவுள்ள அவரது குழந்தையையிட்டு விசாரித்தேன்.

‘‘இன்னமும் அவனுக்கு வயிற்றால போகுதுதான்.’’

‘‘யாராவது ஒரு வைத்தியரிடம் எடுத்துச் சென்று கட்டாயம் காட்டுங்க.’’

அன்றிரவு பதினொரு மணிபோல வீட்டுக்கு வந்தேன்.

‘‘புள்ளையைப் பார்ரா தம்பி. மூச்சிழுக் குது போல தெரியுது’’ எனறார் ராத்தா அழுகையுடன்.

தொட்டிலருகில் சென்று குழந்தையைப் பார்வையிட்டேன். வெண்மையான முகம் முழுதும் சோகம் ததும்ப குழந்தை நீளமான மூச்சுகளை சிரமத்துடன் வெளியாக்கிக் கொண்டிருந்தது.

‘‘புள்ளைட கொண்டிசன் ரொம்ப சீரியஸ் போல தெரியுது. உடனேயே டவுன் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லணும். நான் போய் ஒரு வாடகைக் காரை பிடிச்சுக்கொண்டு வாரன். நீங்க ஆயத்தமா நில்லுங்க.’’ பதிலுக்கு நிற்காமல் வெளியே அம்பாகினேன்.

நள்ளிரவு பன்னிரெண்டு அளவில் ஆஸ்பத்திரியை அடைந்து, உயிருக்காக போராடிக்கொண்டிருக்கும் குழந்தையை ஓபிடி யில் காட்டி, அனுமதிச் சீட்டைப் பெற்று குழந்தைகள் வார்ட்டில் சேர்ப்பதற்காக நகர்ந்தோம்.

பிள்ளைக்கான கட்டிலை ஒழுங்கு செய்யுமட்டும் வெளியே இருக்குமாறு கூறினர். வாடகைக் கார் சாரதி துரிதப்படுத்தத் தொடங்கியதால் மச்சானின் தாயாரையும், ராத்தாவையும் பிள்ளையுடன் வார்ட்டில் நிற்குமாறு கூறிவிட்டு நீங்கினோம்.

அன்றிரவு எனக்கு நித்திரை வருவதாகவே இல்லை. வெளியே மரத்தில் குந்தியிருந்த ஆந்தையொன்று விட்டுவிட்டு அலறும் சத்தம் ஒலித்து என்னுள் எரிச்சலை ஏற்படுத்தியது. சிறியதொரு பூனைக்குட்டி தொடர்ச்சியாகக் கத்தியது மட்டுமல்லாமல் கதவைப் பிராண்டி உள்ள வர முயற்சிப்பதாக உணர வைத்தது. எரிச்சலின் உச்சத்தில் சடுதியாக கதவைத் திறந்து பூனைக்குட்டியின் கழுத்துத் தசையைக் கௌவி தூக்கிச் சென்று தெருக் கேட்டுக்கு வெளியே விட்டுவிட்டு வந்தேன்

விடிய விடிய உருண்டுருண்டு படுத்தேன். இரவெல்லாம் மழை கொட்டி விடியலுக்கு முன் நின்றிருந்தது.

அடுத்தநாள் அதிகாலை சூரியன் உதிப்ப தற்கு முன்னதாகவே மச்சானும் நானுமாக வார்டுக்குச் சென்றுவிட்டோம். ராத்தாவும், மாமியும் வார்ட்டில் தென்பட வில்லை. பிள்ளையையும் காணவில்லை. தாதியிடம் விசாரித்தோம்.

‘‘என்னோட கொஞ்சம் வெளியே வாங்க’’ என்றார் தாதி.

வெளியே வந்தோம்.

தாதி சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ‘‘நான் சொல்றதை யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க’’ என்றார்.

‘‘சொல்லுங்கம்மா. யாரிடமும் சொல்ல மாட்டோம்’’

‘‘நீங்க அவங்களை விட்டுட்டுப் போன பின்னாடி பிள்ளைக்கான கட்டிலை ஏற்பாடு செய்து போட்டு வெளியே வந்து பிள்ளையைப் பாத்தா அதுட உசிரு பிரிஞ்சு போய் கட்டையா கிடந்துது.’’

‘‘என்ன! என்ட புள்ள காலமாகிட்டானா?’’ என்றார் சத்தமாக மச்சான்.

‘‘சத்தம் போடதீங்க. நாலு பேருக்கு கேட்டுட்டா எனக்கு கஷ்டம். பிள்ளையை வார்டுக்குள்ளே எடுத்தா சவச்சாலைக்கு

கொண்டு போயிருவாக. போஸ்மோட்டம் அதுஇதுன்னு செய்துட்டுத்தான் தருவாக. நீங்க விரும்புனா வார்டிலே சேர்க்காம பிள்ளையை எடுத்துக்கொண்டு ஆள் மாறுங்க என்றேன். அவங்க யோசிச்சிப்போட்டு பிள்ளையோட வெளியாகிட்டாங்க.''

''அவங்க இதுவரை வீடு வந்து சேரல்லியே!''

தாதியிடம் விடை பெற்று வெளியே வந்து நானா பக்கங்களிலும் தேடினோம். மச்சானை ஓர் இடத்தில் நிற்குமாறு கூறிவிட்டு நான் சைக்கிளில் ஒவ்வொரு தெருவாக அலைந்து தேடினேன். நீண்ட நேர தேடலுக்குப் பின் குறுக்குத் தெருவொன்றிலுள்ள வீடொன்றின் அருகில் ராத்தா நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன்.

என்னைக் கண்டதும் சத்தமிட்டு அழத் தொடங்கினார். அவர் நின்ற வீட்டினுள் அழைத்துச் சென்றார். பாயொன்றில் காலஞ் சென்ற பிள்ளையின் உடல் வெள்ளைச் சீலையால் மூடி வைக்கப்பட்டிருந்தது.

ராத்தா ஏங்கியேங்கி நடந்தவற்றைக் கூறினார்.

தாதி கூறியதற்கிணங்க ஜனாசாவை கையில் தூக்கிக்கொண்டு வெளியேறி, ஊருக்குப் போகும் திசை தெரியாததால் கொட்டிய மழையில் ஏக நனைந்தவாறு நள்ளிரவு வேளையில் மனித நடமாட்டமே இல்லாத தெருக்களிலெல்லாம் அலைந்து, தூரத்தில் வீதி வெளிச்சத்தில் பொலீஸ்காரர் இருவர் நடந்து செல்வதைக் கண்டு மிரண்டு, தங்களைத் தாங்களே நொந்தவாறு சுற்றிக்கொண்டிருக்கும்போது அகஸ்மாத்தாக ஒரு வீட்டில் திறந்து கிடந்த கதவினூடாக வந்த வெளிச்சத்தைக் கண்டனர்.

ஹோட்டல்களுக்கு விநியோகிப்பதற்காக இடியப்பம் அவிப்பதற்கு வீட்டுக்காரி தனது பெண்பிள்ளைகளுடன் நேரகாலத்தோடு எழுந் திருக்கிறார்.

இவர்கள் உதவி கோரியதும், வரவேற்று ஜனாசாவை பாயொன்றில் வளர்த்தாட்டி, தலை துடைப்பதற்கு வெளுத்து மடித்து வைக்கப்பட்டிருந்த துவாய் கொடுத்து, ஈர உடுப்புகளைக் களைந்துவிட்டு உடுக்க மாற்றுத் துணி கொடுத்து, சுடச்சுட கோப்பி ஊற்றிக் கொடுத்து எங்களின் வருகைக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்.

உள்ளே ஆள் ஒருவர் நின்றார். என்னைக் கண்டதும் முகம் மலர்ந்தார். ''அட தம்பி! ஒன்ட சொந்தக்கார ஆக்களா?'' என்றார்.

''ஆமாண்ணே. இவங்க என்ட அக்கா. அவங்க மாமி''

சைக்கிளில் சென்று மச்சானை அழைத்து வந்தேன். டவுனுக்குச் சென்று வாடகைக் காரொன்றை பிடித்து வந்தேன்.

வீட்டுக்காரர்களுக்கு ஆழமான நன்றிகளைத் தெரிவித்துவிட்டு வெளியாகினோம்.

ஜனாசா அடக்கம் முடிந்து வீட்டுக்கு வந்து குடும்பத்தினர் எல்லோரும் திண்ணையில் ஒன்று கூடினோம்.

''நமக்கு அவ்வளவு உதவிசெய்த அந்த வீட்டுக்கார ஆளை உனக்கு முற்கூட்டியே தெரியுமா'' மச்சான் கேட்டார்.

''நல்லா தெரியும்''

''எப்படி?''

''நான் மாசாமாசம் முடி வெட்டுறது அவர்ர சலூனில்தான்''

''அப்படீன்னா, ஆக்கள் அம்பட்டக் காரங்களா?'' மூத்தம்மா கேட்டார்.

''ஆமா மூத்தம்மா.''

மூத்தம்மா ஆழமாக சிந்திப்பதை அவரது வெள்ளை முகம் காட்டியது.

பிள்ளை காலமாகி ஆறு நாட்கள் சென்றுவிட்டன. ஏழாவது நாளன்று, குடும்பத் தினர் அனைவரையும் அழைத்து புனித குர்ஆன் ஓதி, காலஞ்சென்ற பிள்ளைக்கும் குடும்பத்தினருக்காகவும் பிரார்த்தித்து, விருந்துபசாரம் செய்ய வேண்டுமென திட்ட மிட்டிருந்தோம்.

காரியாலயத்திலிருந்து நேரகாலத்தோடு வீடு திரும்பினேன். மூத்தம்மாவையும் ராத்தாவையும் வீட்டில் காணவில்லை.

''எங்க போயிட்டாஹ?'' அங்கு நின்றிருந்த மூத்த மருமகளிடம் கேட்டேன்.

''அவஹ கார் புடிச்சி டனுக்குப் போறாஹ.''

''எதுக்கு?

''புள்ள மவுத்தான அன்று அபயம் கொடுத்து உதவிசெஞ்சாங்களே, அவகள நாளைய விருந்துக்கு அழைப்பதற்கு.''

''ஓஹோ! இப்பதான் ஞானம் வந்திருக்கு. நாளை நடைபெறும் சமபந்தி போசனத்துக்கு அழைக்கப் போயிருக்காகளோ?'' என்றேன்.

மருமகள் என்னுடன் சேர்ந்து சிரித்தாள்.

❍❍❍

# ஈழத்து நாட்டாரிலக்கிய முன்னோடிகள் வரிசையில் க.இ.சரவணமுத்து (சாரதா)

பேராசிரியர் செ. யோகராசா



ஈழத்து நாட்டாரிலக்கிய ஆய்வு முன்னோடிகள் பற்றி எழுதுவோர் ஏறத்தாழ நாற்பதுகளிலிருந்து ஆரம்பிப்பதும், வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் தொடக்கப் புள்ளியாகவிருப்பதுமே மரபாகவுள்ளது. அதே காலப்பகுதியின் இம் முயற்சியிலீடுப்பட்ட (வித்துவான்) க. இ.சரவணமுத்து பற்றி எவருமே அறிந்திருக்கவில்லை. அன்னார் பல்வேறு செயற்பாடுகளிலீடுபட்டிருக்கக் கூடுமாயினும் நாட்டாரிலக்கியம் தொடர்பாக எழுதிய பதினொரு கட்டுரைகள் பற்றி மட்டுமே இப்போது அறியக்கூடியதாகவுள்ளது. (1946/47) மறுமலர்ச்சி சஞ்சிகையில் இடம்பெற்ற அவை கிராமியக் கவிதை வளமும் சிந்தனைக் கட்டுரைகளும் (1992) என்ற தொகுப்பிலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த பதினொரு கட்டுரைகளுள் பத்துக்கட்டுரைகள் நாட்டார் பாடலுடன் தொடர்புபட்டவை (நாட்டார் பாடல்கள் என்று கூறப்படுவனவற்றை, க.இ.சரவணமுத்து, 'கிராமியக் கவிதை' என்ற பெயரினால் குறிப்பிடுவது பாராட்டப் படவேண்டியது. ஏனெனில், 'மரபுக் கவிதை' என்பது எழுத்துருவக் கவிதையை மட்டுமன்றி வாய்மொழிப் பாடலையும் உள்ளடக்கியுள்ளது என்பது ஆழமாகச் சிந்திக்கும்போது புலப்படும்.

தமிழ் நாட்டிலே கூட நாட்டாரிலக்கியத்தின் முக்கியத்துவம் உணரப்படுவதற்கு முன்பே ஈழத்தில் வட்டுக்கோட்டை மு.இராமலிங்கம் போன்று க.இ.சரவணமுத்துவும் உணர்ந்திருந்தமை கவனத்திற்குரியது. இவ்விதத்தில் பின்வரும் கூற்று அவதானத்திற்குரியது.

> "....உயிருள்ள அக்கவிதைகள், கல்வி வாசனை சிறிதுமில்லாத சாதாரண ஜனங்களின் உள்ளத் துடிப்புகளைப் படம்பிடித்துக்காட்டுகின்றன.
>
> கிராமக் கவிதைகளில் யாப்பிலக்கண அமைதி இல்லாமல் இருக்கலாம்; நன்னூல் இலக்கணம் செல்லாமல் இருக்கலாம். ஆனால் சொற்கட்டும் பொருள் ஆழமும், ஓசை நயமும் பார்க்கப் போனால் அக்கவிகளுக்கு நிகர் வேறில்லை.

பால் குடிக்கும் குழந்தைகள் முதல், பல் விழுந்த கிழங்கள் வரை கிராமியப் பாடல்களைப் பாடுகிறார்கள், இரசிக்கிறார்கள். கிராம வாழ்க்கையின் பல கோணங்களில் இருந்து பார்க்கும் போதும் கவிவாணியின் விஸ்வரூபம் நமக்குப் புலப்படாமல் இருப்பதில்லை.

தாய், பிள்ளையைத் தாலாட்டும் போதும் சிறுவர் கூட்டமாக விளையாடும் போதும், பெண்கள், செத்தவீட்டிலே 'ஒப்பாரி' வைக்கும் போதும்; மாலுமிகள் ஓடம் செல்லும் போதும் தோட்டக்காரர் 'ஏற்றம்' இறைக்கும் போதும் கிணறு வெட்டிகள் 'கொந்தாலி' போடும் போதும் அக்கிரகாரத்திலே மணமக்களுக்கு நலங்கிடும்போதும் - இப்படியாக வாழ்க்கைத்துறைகள் ஒவ்வொன்றிலுமே அற்புதமான கவியூற்றுக்கள் சுரக்கின்றன.

புராதனமான இந்தக் கலையைப் பேணி வளர்ப்பவர்கள் பாமர மக்களே. அதிலும் பாட்டிமாரும் - பிச்சைக்காரரும் - தொழிலாளிகளும்

செய்துவரும் தொண்டுக்கு நாங்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள்.

அவற்றைத் தேடித் தொகுப்பதற்கு ஊர்கள் தோறும் தேவேந்திரநாத் சத்தியார்த்திகள் பலர் கிளம்ப வேண்டும். தமிழுக்கு ஆக்கம் தரும் முயற்சிகளில் அதுவே முக்கியமானது. (ஆங்கிலரது ஆட்சிக்கால ஆரம்ப சூழலிலே தமிழிற்கு வேண்டுவன பற்றி நாவலிக்கக் கூறிய தமிழ்ப் புலமையாளரெவரும் இந்நாட்டார் பாடல்களின் முக்கியம் பற்றி வற்புறுத்தினாரல்லர்: க- ர்)

**"சில்லென்று பூத்த**
**சிறுநெருஞ்சிக் காட்டிடையே**
**நில்லென்று வைத்து**
**நெடுந்தூரம் போயினையே"**

என்ற ஒப்பாரிப் பாட்டைக் கேட்க எவ்வளவு தூரம் மனம் குழைந்து விடுகின்றோம்... இப்படியான இக் கவிகளை மறந்து, வெறும் வரட்டு (முரட்டு – கஞ்சல் - குப்பை)ப் பாடல்களிலே, எதுகை மோனைகளின் வாலைப் பிடித்துக் கொண்டு வீணிற் காலத்தைப் போக்கிவிட்டோம். இந்த மனப்பான்மை விரைவில் ஒழிய வேண்டும். 'ஜீவன் கவிதா' என்று வங்காளிகள் நாடோடிப் பாடல்களுக்குக் கொடுக்கும் மதிப்பை உணர்ந்தால் தமிழ் நாட்டார் இனியும் மண்டுகளாக இருப்பார்களா?

நாட்டார் பாடலுடன் தொடர்புபட்டுள்ள பத்துக் கட்டுரைகளுள் முதல் இரு கட்டுரைகளில் யாழ்ப்பாணப் பிரதேசம் சார்ந்த நாட்டார்பாடல்களும் அவற்றிற்குரிய சிறப்புகளும் விளக்கப்படுகின்றன. வேறு இரு கட்டுரைகளிலே மன்னார்ப் பிரதேச நாட்டார் பாடல்களும் நான்கு கட்டுரைகளில் மலையக நாட்டார் பாடல்களும் ஒரு கட்டுரையிலே வன்னிப் பிரதேச நாட்டார் பாடல்களும் பற்றிப் பேசப்படுகின்றன. இவை முதன் முதலாக எழுத்துவடிவில் அறிமுகமாகின்றன என்பது கவனிக்கப்பட வேண்டியது (இவற்றில் இடம்பெற்ற பாடல்கள் சில வட்டுக்கோட்டை மு.இராமலிங்கத்தின் தேடல்களிலும் இடம்பெற்றிருக்கக்கூடும். அவை பார்வைக்குக் கிடைக்கும்போதுதான் இவ்விடயம் உறுதிபெறும்)

மேற்கூறிய பிரதேசங்களின் நாட்டார் பாடல்களை தாலாட்டு, ஒப்பாரி, காதல், தொழில், சமூகம், விளையாட்டு, வரலாறு என்றவாறு வகைப்படுத்தி இனங்காணமுடிகின்றது. விரிவஞ்சி எடுத்துக்காட்டுக்கள் இங்கு தரப்படவில்லை. இவ்வாறான பாடல்களையெல்லாம் உரியவர்களிடம் நேரே தேடிச்சென்று பெற்றிருக்கின்றார் கட்டுரையாளர். எனினும் தகவாளிகளின் விவரங்களைக் குறிப்பிடாது போனமை அன்றைய காலச்சூழலில் எதிர்பார்க்க முடியாததொன்றே. ஆயினும், இன்றைய ஆய்வாளருக்கும் ஆய்வுகளுக்கும் வேண்டப்படுகின்ற விடயங்களும் பயன் பாடுள்ள புதிய தகவல்களும் விமர்சன நோக்கும் ஆங்காங்கே இடம்பெற்றிருப்பது விதந்துரைக்கப்பட வேண்டியதொன்று. எடுத்துக் காட்டாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கையின் அதிவரண்ட பிரதேசங்களில் ஒன்று மன்னார். அங்கு வழங்கும் பாடல்கள் பெரும்பாலும் காதற்கருத்துள்ளவை. காரணம் ஆராய்தற்குரியது.

(11) வன்னிப் பிரதேசத்தில் பன்றிப்பள்ளு, குருவிப்பள்ளு முதலான பாடல்கள் காணப்படுவது நாட்டார் இலக்கிய ஆர்வலர்கள் அறிந்த விடயமே. இவைபற்றி கட்டுரையாளர் குறிப்பிடுவதாவது. "நெல் விளைந்து கொண்டிருக்கும் போது பன்றி முதலிய பிராணிகளாற் சேதம்வராது காக்க வேண்டும். அந்தக் காவலும் வேலையாகத் தோன்றாமல் விளையாட்டாக நடப்பதற்காக பன்றிப்பள்ளு முதலிய குட்டி நாடகங்களை நடிப்பார்கள்"(பக். 36) வன்னி நாட்டார் பாடல்களைத் தொகுத்த மெற்றாஸ் மெயில் குறிப்பைத்தரவில்லை)

(111) நன்கு பிரபல்யமானதும் பல பிரதேசங்களில் (பாடபேதங்களுடன்) பாடப்பட்டு வந்ததுமான ஆக்காண்டிப் பால் பற்றிய குறிப்பு: "குடும்ப பாரம் தாங்கமுடியாத ஒரு தொழிலாளியின் தவிப்பை ஆட்காட்டியின் வாயிலாகப் புலப்படுகிறது. கவிதை '(பக். 9)"எழுபதுகளளவில் கவிஞர் சண்முகம் சிவலிங்கம் ஆக்காண்டிப் பாடலை சர்வதேசப் பாட்டாளிகளின் குரலாக நோக்கி கவிதை இயற்றுவது இங்கே நினைவு கூரத்தக்கது. சரவணமுத்துவின் இக்குறிப்பை சண்முகம் சிவலிங்கம் பார்த்திருக்க வாய்ப்பில்லா நிலையில் கவிஞரின் அபாரமான கற்பனைத் திறனை பாராட்டமலிருக்கமுடியாது!

(4) சரவணமுத்து எடுத்தாள்கின்ற பின்வரும் பாடலும் விளக்கமும் முக்கிய கவனிப்புக்குரியவை.

**ஆலமரமுறங்க – குட்டி**
**அடிமரத்து வண்டுறங்க**
**மடியிலே நானுறங்கக் – குட்டி**
**வரம்பெற்று வந்தேனடி.**
**ஒருநாள் ஒரு பொழுதும் – மச்சான்**

**உங்க முகம் காணாமலே**
**ஓடைக்கரை மண்ணெடுத்து – மச்சான்**
**உருவஞ் செய்து பார்த்திருந்தேன்.**

இது ஒரு காதற் சம்பாஷணை அமைந்த தெம்மாங்குப்பாடல். கட்டை வண்டிகளில் தூரப் பிரயாணம் செய்யும் போது வண்டிக்காரர் இராத் தூக்கத்தை மறப்பதற்காக இவ்வித முஸ்பாத்தி பாடல்களைப் பாடிக் கொண்டு போவார்கள்.

பிற்காலத்தில் பேராசிரியர் நு.ஃ.மான் முஸ்லீம் மக்களது காதற் பாடல்களுள் பெண்கூற்றாக அமைந்தவை பாவனைப் பாடல்கள் என்று முன்வைத்த கருத்திற்கு மேற்குறிப்பிட்ட கூற்று மேலதிக சான்றாகின்றது நு.ஃ.மானின் கருத்தை மறுதலிப்போருக்கும் தகுந்த பதிலளிக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சரவணமுத்து அவர்கள் பழமொழிகளைத் தொகுப்பதிலும் ஆர்வங்காட்டியவர் என்பது கவனத்திற்குரியது. ஆரம்பத்தில் சேகரித்தவை இந்திய அமைதிகாக்கும் படையினரால் சேதமாக்கப்பட்ட நிலையில் பிற்காலத்தில் அவற்றை நினைவு கூர்ந்து ஏறத்தாழ 650 பழமொழிகளை அவர் தந்திருப்பதும் பாராட்டப்படவேண்டியது. (பக். 121 - 140). இவற்றுள் கணிசமானவை நாமறியாதவை.

நாட்டாரிலக்கியங்கள் பற்றி மேற்குறிப்பிட்ட வற்றைத் தவிர வேறு தேடல்களும் சரவணமுத்து அவர்களால் வெளிப்படுத்தப்பட்டிருக்கக்கூடும். அவையும் கிடைக்கும் போதுதான் வட்டுக் கோட்டை மு.இராமலிங்கத்திற்கு சரவணமுத்து, நிகரானவர் என்பது மேலும் உறுதிப்பட வாய்ப்பேற்படும்.

○○○

## பகிர்வோம்....

**ஈழமும் தமிழும்**



எழுதுமட்டுவாளில் வாழ்ந்த மாப்பாண முதலியார், சோமகேசரி நாடகம் மற்றும் பரிமளகாச நாடகம் ஆகிய நாடகங்களை இயற்றியவர். இவற்றுடன் விரதநிச்சயம், ஆசௌசவிதி ஆகிய நூல்களையும் குறவஞ்சி ஒன்றையும் இயற்றியுள்ளதாக அறியமுடிகின்றது. இவருக்கு **இருமரபுந்துய்ய குலசேகரப் புதுநல்ல மாப்பாண முதலியார்** என்னும் பட்டப்பெயரும் இருந்துள்ளது.

# களவும் கற்பும்

அகத்திணை வாழ்வின் இரு பகுதியே
அகத்தினுள் இரகசியமானது களவும் கற்புமே
அகப்பொருள் இலக்கணத்தில் பேச்சதிகம் களவே
அடுத்தவர் அறியாது நிகழும் ஒழுக்கமிதே.

பெற்றவருக்கு களவு நெறி குற்றமே
சுற்றமெனும் சமூகம் கருதாது குற்றமென.
உற்ற காதல் கைகூடி ஊரறிய
வெற்றியடையும் திருமண உறவு கற்பு.

கற்பியலாம் திருமணம் புக இருவழியாம்
அற்புத மரபுநெறி களவுநெறியாமிது தொல்காப்பியம்.
கற்பும் களவுமுலகில் கைக்கொள்ளும் ஒழுக்கம்.
பற்றுகிறார் இதைக் கைக்கோள் என்று.

மறைமுகமாய்க் கண்டும் கூடியும் இன்பிக்கும்
குறையுடைய வாழ்வு களவு எனலாம்.
மறையோதிச் சேர்ந்த திருமணம் கற்பாகி
இறைநிலை ஆதரவு பெறுவது கண்கூடு.

பா வானதி வேதா. இலங்காதிலகம்.
டென்மார்க்.

# உபதேச தகுதி

சங்கரன் சாயங்காலப் பொழுதைச் சந்தோஷமாகக் கழிப்பதற்காகத் தன் சகாக்களின் அழைப்பின் பேரில் காலிமுகத்திடலுக்குச் சென்றிருந்தான். ஓரிரு மணித்தியாலங்கள் சுவாரஷ்யமாகப் பலதும் பத்தும் கதைத்துக்கொண்டிருக்கக் கடற்கரைக் காற்றின் குளிர்ச்சியும் கூடிக்கூடி வர 'ஏதும்' குடித்தால் நன்றாக இருக்கும் என்று ஏகோபித்த ஆசையோடு எல்லோரும் எழுந்து வெளியேறிச் சிறிது தூரம் சென்று மதுபான குடிப்பகம் ஒன்றுக்குள் நுழைந்துகொண்டார்கள்.

சுற்றுவட்டம் பார்வையைவிட்டு வெற்றிடமாயிருந்த மேசை கதிரைச் செற்றில் எல்லோரும் அமர்ந்துகொண்டார்கள். "மச்சான் உனக்கென்ன?, மச்சான் நீ என்னமாதிரி? என்றவாறே ஒருவன் மற்றவர்களின் விருப்புக்களைக் கேட்டுக்கொண்டே சங்கரனிடம் "உனக்கென்ன கூலா ஹொட்டா?" என்றான். இந்தக் குளிருக்குத் தேநீர் அல்லது கோப்பிதான் நல்லது என மனதில் நினைத்தவனாய் "எனக்கு ஹொட்டா எதென்றாலும் சரி" என்றான்.

பரிமாறுபவன் இவர்கள் இருந்த மேசையருகே வந்ததும் தங்கள் 'தாகசாந்தி'க்குரியவற்றைக் குழுத்தலைவன் கூறினான். வெவ்வேறு வகையான போத்தல்களும் கண்ணாடிக் குவளைகளும் (கிளாஸ்கள்) மேசையில் வைக்கப்பட்டன. சங்கரனுக்குக் கொழும்பும் புதுசு, இப்படியான ஹோட்டலும் புதுசு என்பது அவன் மற்றவர்களது முகங்களை மாறிமாறிப் பார்த்ததிலும் அவனது முகச்சுருக்கங்களிலும் வெளிக்கொணரப்பட்டது. போத்தல்களில் இருந்தவற்றை கிளாஸ்களில் வார்த்துக் கொண்டார்கள். சங்கரன் இவற்றைப் பார்த்துக் கொண்டே வியர்த்துக் கொண்டான். "மச்சான் என்னை விட்டிடுங்க நான் போகப் போறன்" என்றவாறே எழுந்துகொண்டான். மற்றவர்கள் அவனை விட்டபாடில்லை "இன்றைக்கு மட்டும்தான்" என்றான் ஒருவன். "ஒரு ஷொட்தான்" என்றான் இன்னொருவன் "Just for company" என்றான் மூன்றாம் ஆள். சங்கரனின் கடுமையான ஆட்சேபனையையும் கூட்டாளிகளின் அழுத்த பிரயோகத்தையும் தூரத்து மேசையிலிருந்தபடியே ஒரு முதியவர் பார்த்துப் பரிதாபப் பட்டுக்கொண்டார். எழுந்துவந்து சங்கரனை 'நண்பர்'களிடமிருந்து – (அவர்கள் நண்பர்கள் என்று சொல்வதற்கு அருகதையற்றவர்கள் வெறும் 'கூட்டாளிகள்' என்றே சொல்லவேண்டும்) விடுவிக்க முன்னமே அழுத்த பிரயோகம் ஆட்சேபனையை வென்றுவிட்டது.

சங்கரன் கிளாசைக் கையிலெடுத்து ஒருமிடர் உள்ளே செலுத்திவிட்டு அச்சம், அருவருப்பு, குற்றஉணர்வு அனைத்தும் மேலோங்கச் சுற்றுவட்டம் பார்வையை விட்டவன் "அப்..பா..டா" என்று தலையைக் கவிழ்த்துக் கொண்டான். ஒரு மிடர் ருசியிலேயே "அப்பாடா! இதுவல்லோ அமுதபானம்" என்று ரசிக்கிறான் என்று ஒருவன் எண்ணி "கமோன் சங்கர் கீப் இற் அப்" என்றபடியே அவனது கிளாசுக்குள் விளிம்புவரை ஊற்றினான். "மச்சான் அப்பா தூரத்து மேசையிலிருந்து என்னைப் பார்த்திற்றாரடா" என்று கூறியவன் குனிந்ததலை நிமிரவில்லை.


இந்த 'மல்லுக்கட்டல்களை' தூரத்திலிருந்து பார்த்த முதியவர் எழுந்து 'ஆடி' வந்து குனிந்தபடியிருந்த சங்கரனின் தோள்மீது கைபோட்டு "சங்கர்" என்றதும் அவன் திகைத்துத் திக்குமுக்காடி எழுந்து நின்றான். "டோன்ற் வொறி மைசன், சிற். சிற், தப்பேதுமில்லை. ஆனால் எதற்கும் ஒரு லிமிற் இருக்கு. அதோ பார் அந்தக் கவுண்டரில் இரண்டுபேர் நிற்கிறாங்க. அவங்க உனக்கு நாலு பேராகத் தெரியவரும்போது அதுதான் உனது லிமிற். உடனே எழுந்து நேரே வீட்டுக்கு வந்துவிடவேண்டும். சரியா? புரிகிறதா?" என்று உபதேசித்து விட்டுத் தான் இருந்த கதிரை நோக்கி நடக்க முற்பட்டவரைச் சங்கரனின் கூட்டாளி ஒருவன் தடுத்து நிறுத்தி "அங்கிள், நீங்கள் இனி நேரே வீட்டுக்குப் போய் விடவேண்டும். நீங்கள் காட்டிய கவுண்டரில் இரண்டுபேர் நிற்கவில்லை. ஒருவர்தான் நிற்கிறார். உங்களுக்கு இரண்டு பேராத் தெரியுது. சரியா? புரிகிறதா"? என்றானே பார்க்கலாம்.

**நிலவூர்ச் சித்திரவேல்**
**திருகோணமலை**

○○○

# உலகப் புகழ்பெற்ற நாவல்கள் :

## Irving Wallace, இன் second Lady (1980)




**1980**களின் மிக அதிக அளவில் விற்பனையான நாவல்களின் இதுவும் ஒன்று. பின்னர் இதனை வாசித்தபோது, அமெரிக்க ஜனாதிபதி, அவருடைய மனைவி, ரஷ்ய பிரதமர், ரஷ்ய உளவுத்துறை ஒரு ரஷ்ய நடிகை மற்றும் அப்போதிருந்த அமெரிக்க – சோவியத் யூனியனின் பனிப்பொர் என்பவற்றை உள்ளடக்கிய கற்பனையான இந்த மர்மங்கள் நிறைந்த நாவலை எப்படித்தான் எழுத முடிந்ததோ என்ற எண்ணமே தோன்றியது.

ஆபிரிக்காவில் அணுசக்தியை உருவாக்கும் யூரேனியம் காணப்படும் ஒரு நாடு; அதன் தலைவன் அமெரிக்கச் சார்பானவன். அவனை வீழ்த்துவதற்கு ரஷ்ய சார்பான ஒரு கிளர்ச்சிப் படை தயாராக உள்ளது. அது ரஷ்ய இராணுவ உதவியுடன் வெற்றி பெற்றால், யூரேனியத்தை அப்படியே பெறும் வாய்ப்பு சோவியத் யூனியனுக்குக் கிடைத்துவிடும். இதனை எப்படியாவது தடுத்துத் தனக்கு சார்பான ஆட்சியாளனைக் காப்பாற்ற அமெரிக்கா நினைக்கின்றது. இந்நிலையில் இந்நாட்டிலும் பொதுவாக ஆபிரிக்காக் கண்டத்திலும் இவ் வல்லரசுகள் தலையிடுவது பற்றிய உச்சி மகாநாட்டை இலண்டனில் கூட்ட அமெரிக்காவும் சோவியத் யூனியனும் முடிவு செய்கின்றன. அமெரிக்க ஜனாதிபதி பிரட்போட் எத்தகைய சிந்தனை, கொள்கைகளுடன் வருவார் எனத் தெரிந்தால், ரஷ்யா அதற்கேற்றவாறான ஆயத்தங்களுடன் பேச்சு வார்த்தைக்குச் செல்லலாம். அந்த இரகசியத்தைக் கண்டறிய ரஷ்யா மிகவும் அபாயமான சர்வதேச சதியொன்றைத் திட்டமிடுகின்றது. இத்திட்டத்தைச் செய்ய ரஷ்ய உளவுத்துறை (KGB) முன்வருகின்றது.

KGB தலைவன் பெட்றோவ் இந்த சதித்திட்டத்தை வரையச் சாதகமாக ஒரு ரஷ்ய நடிகையான விராவைச் சந்திக்கின்றான். அவள் அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி பில்லியின் முகத்தோற்றத்தையும் உடல் வாகுவையும் கொண்டவள். அமெரிக்க பாணி ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றவள். என்றாலும் அவளுக்கு பில்லி போன்ற வேடமணிய மேலும் சில ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.



பேராசிரியர்
சோ. சந்திரசேகரம்

மொஸ்கோவில் நடைபெறும் சர்வதேசப் பெண்கள் மகாநாட்டில் முக்கிய பங்கேற்க பில்லி வர உள்ளாள். அந்த சந்தர்ப்பத்தில் அவளைக் கடத்தி, சிறைவைத்துவிட்டு, பதிலாக நடிகை விராவை வெள்ளை மாளிக்கைக்கு அனுப்பி, ஆபிரிக்க நாடு பற்றிய பேச்சுவார்த்தை இரகசியங்களை விரா மூலம் அறிய பெட்ரோ திட்டமிடுகின்றான்.

ஜனாதிபதி மனைவி பில்லி போல நடிக்கச் செய்ய விராவுக்கு அமெரிக்க ஆங்கிலப் பயிற்சி, பல்வேறு மேக் அப்கள், உடல் எடையைக் குறைத்தல், சில பிளாஸ்டிச் சத்திர சிகிச்சை என்பன நடைபெறுகின்றன. இதற்கு மூன்றாண்டு காலம் செல்லுகின்றது. பில்லி

சம்பந்தப்பட்ட காட்சிகள், மேடைப்பேச்சு என்பன அவளுக்குத் தொடர்ச்சியாகக் காட்டப்பட்டு பயிற்சி நடைபெறுகின்றது. ரஷ்யப் பிரதமர் உட்பட்ட அரசாங்கத்தின் பெரிய தலைவர்கள் விசா நடித்த காட்சிகளைப் பார்த்துவிட்டு, அவளை பில்லி என நினைத்து ஏமாறுகின்றனர். பெற்றோவின் சதித்திட்டத்துக்கும் ஒப்புதல் அளிக்கின்றனர். அவர்களுக்குத் தேவை ஆபிரிக்க நாட்டின் வளங்கள் மட்டுமே.

பெண்கள் மகாநாட்டுக்கு வரும் அமெரிக்க ஜனாதிபதி மனைவி அவள் தங்கும் ஹோட்டலின் மர்மக் கதவு வழியாகக் கடத்தப்பட்டு சிறை வைக்கப்படுகின்றாள். அவளிடத்தில் விரா அமர்த்தப்பட்டு வாஷிங்டன் செல்கின்றாள்.

அங்கு உறவினர்கள், நண்பர்கள் பலரைச் சந்திக்கின்றாள். தந்தை கூட அவளைப் பார்த்து ஏமாந்துவிடுகின்றார். எவ்வாறாயினும், சில தவறுகள் நிகழ்கின்றன. தந்தை வீட்டு நாய் பில்லிக்கு நல்ல பழக்கம், தற்போது ஆள் மாறிவிட்டதால், விராவிடம் வர மறுக்கின்றது. மருமகன் ஒருவனிடம் 'நீண்ட நாட்களுக்குப் பிறகு பார்க்கின்றேன்' என விரா சொல்ல, அவள் சென்ற மாதம் தானே பார்த்தோம் என்கிறாள். ஆனால் அவர்கள் இத்தவறுகளைப் பொருட்படுத்தவில்லை.

மற்றொரு சந்தர்ப்பத்தில் பில்லியின் சினேகிதி பற்றிய ஒரு பேச்சு எழுந்த போது, நடிகை விரா தான் அவளைப் பார்க்கப் போவதாகக் கூறுகின்றாள். ஆனால் அச்சினேகிதி முன்னரே இறந்துவிட்டாள். இதனை யாரோ சுட்டிக் காட்டியபோது, விரா சமாளித்து, தான் அவளின் கல்லறையைப் பார்க்கப் போவதாகக் கூறியதாகச் சொல்கின்றாள்..

யாருக்கும் ஐயம் எழாவிட்டாலும் இருவருக்குப் பலத்த சந்தேகம் ஏற்படுகின்றது. ஒருவர் பில்லியன் வாழ்க்கை வரலாற்றை எழுதும் பழக்கம் என்பவர்; மற்றவள் பில்லியின் செயலாளர் நொரா என்பவள். இவர்கள் தமது சந்தேகங்களைப் பற்றிக் கலந்துரையாடுகின்றார்கள்.

இவ்விடத்து வேறொரு முக்கியமான பிரச்சினை பற்றி நாவலாசிரியர் விபரமாக எழுதுகின்றார். தமிழ் வாசகர்களுக்கு இது மிகவும் மோசமானதாகவே படும். நாவலாசிரியரும் எமது எல்லைகளை எல்லாம் கடந்து இவ்விடயத்தைக் கையாளுகின்றார். சற்று பூடகமாகவே இதனைச் சொல்ல வேண்டும். மனைவி ரஷ்ய மகாநாட்டின் பின்னர் திரும்பி வந்ததும் ஜனாதிபதி தனது மனைவியோடு இணைய முயற்சிப்பார். எவ்வாறாயினும் அவளுடைய உடல் நலக்குறைவு காரணமாக இவ்விடயம் ஒத்தி வைக்கப்படுகின்றது. விராவுக்குத் தேவையானது, மொஸ்கோவில் சிறைவைக்கப்பட்டிருக்கும் மனைவி பில்லியினதும் ஜனாதிபதியினதும் பாலியல் நடத்தைகள், இது தெரியாமல் ஜனாதிபதியுடன் இணைந்தால், விரா பிடிபட்டுவிடுவாள். எனவே அப்பாலியல் நடத்தை பற்றி ரஷ்ய உளவுத்துறை ஆராய்கின்றது.

ஜனாதிபதியுடன் தொடர்புள்ள பெண் ஒருத்தியைப் பயமுறுத்தி சில தகவல்களை KGB பெற முயல்கின்றது. சிறை வைக்கப்பட்டுள்ள மனைவி பில்லியிடமிருந்தும் KGB இத்தகவலைப் பெற முயற்சிகிறது. அவள் அவற்றைக் கூற மறுக்கின்றார். இதற்காக பில்லியைக் கவனித்துக் கொள்ளும் KGB உயர் அதிகாரி ஒருவன், பில்லி தப்பிச் செல்ல உதவுகின்றாள். அவன் பில்லிக்கு ரஷ்ய ஆங்கில மொழிப் பெயர்ப்பாளன். பில்லி அவன் பேச்சை நம்பி, தப்பியோடி மொஸ்கோ நகரத்துக்குள் நுழைகின்றாள். அப்போது சந்தித்த ஒரு அமெரிக்கப் பெண்மணியிடம் தான் தான் ஜனாதிபதியின் மனைவி, தற்போது சிறை வைக்கப்பட்டுள்ள தகவலைத் தெரிவிக்கின்றாள். அப்பெண்மணியும் இவ்விடயத்தைப் பல சிரமங்களுடன் மொஸ்கோவில் உள்ள அமெரிக்கத் தூதரிடம் தெரிவித்துவிடுகின்றாள். இத்தகவல் ஜனாதிபதியின் உதவியாளர் நொராவுக்குத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆனால் பில்லியை KGB உளவாளிகள் மீண்டும் கைது செய்து கடுமையாக நடாத்துகின்றனர். அப்போது வரும் மொழிபெயர்ப்பாளர் அவ்விடத்தில் அவளைக் காப்பாற்றுகின்றாள். அவள் மீது அன்பு மழை பொழிந்து அனுதாபம் காட்டுகின்றாள். எவருடைய உதவியுமின்றி செய்வதறியாத பில்லி, அவனுடைய வலையில் விழுந்து அவனுடன் உறவு கொள்கின்றாள். இதில் ஏதோ தந்திரமிருக்கலாம் என உணர்கின்றாள். அவள் மொழிபெயர்ப்பாளன் மட்டுமல்ல; அவன் ஒரு KGB உளவுத்துறைத் தலைவன் என்பது அவளுக்குத் திசைதிருப்ப, தனது வழமைக்கு மாறான முறையில் உறவு கொள்கிறாள். இதனை அவன் புரிந்த கொண்டு, இயல்பான பாலியல் நடத்தை போதுமானது என விராவுக்குத் தகவல் அனுப்புகின்றாள்.

இவனே விராவுக்கு முன்பு பில்லிபோல நடிக்கப் பழக்கியவன். அவ்வாறு பழகி இருவரும்

காதலித்தவர்கள். அதனால் அமெரிக்கா சென்ற விரா தனது கடமையை முடித்துவிட்டுத் தன்னை வந்தடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றான். நடிகை விரா பேச்சுவார்த்தை இரகசியத்தை அறிந்துவிடுகிறாள். ஜனாதிபதி இரவில் உண்மை மனைவி என நினைத்து, ஆபிரிக்க நாட்டில் ஆட்சியாளன் பலவீனமாக உள்ளான் என்றும் அமெரிக்கா பெரிய அளவில் அவனுக்கு உதவிபுரிவதில் பல சிக்கல்கள் உண்டு என்றும் கூறுகின்றார்.

வீரா இந்த இரகசியத்தை ரஷ்யப் பிரதமருக்கு அறிவித்துவிட்டால் அவருடைய கடமை முடிந்துவிடும். ஜனாதிபதியின் உண்மை மனைவி அமெரிக்கா வந்துவிடுவாள். வீரா ரஷ்யா சென்றுவிடுவார். உண்மை மனைவி தான் KGB யால் கடத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டதாகச் சொன்னால் அதனை அமெரிக்காவில் யாரும் நம்பமாட்டார்கள் என்பதே KGB யின் திட்டம்.

இதற்கிடையில் வீராவிடம் இருந்து இரகசியத்தைப் பெற்ற பின்னர் அவளைவிட்டு வைத்தால் பெரிய ஆபத்து என்று KGB கருதுகிறது. அவளைக் கொலை செய்யவும் முடிவு செய்யப்படுகிறது. இது வீராவுக்குத் தெரிய வருகிறது. இதனால் அவளும் ஒரு பதில் நடவடிக்கையை மேற்கொள்ளுகின்றாள். அவள் அடாவடியாக லண்டன் ஹோட்டலில் காவலையும் மீறி ரஷ்யப் பிரதமரைச் சந்திக்கின்றாள். அவளுடைய நிபந்தனையின் படி மொஸ்கோவில் உள்ள உண்மை மனைவி கொல்லப்படல் வேண்டும். தானே தொடர்ந்து அமெரிக்க ஜனாதிபதியின் மனைவியாக இருக்க வேண்டும். இதற்கு ஒத்துக் கொண்டால் மட்டுமே தான் கண்டறிந்து இரகசியத்தை ரஷ்யப் பிரதமருக்குத் தெரிவிப்பேன் எனக் கூறுகிறாள். KGB இதனைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறது.

மொஸ்கோவில் ஜனாதிபதி மனைவியைக் காப்பாற்றி லண்டனுக்குக் கூட்டிவர ஒற்றர் தலைவன் (ராசின்) முயற்சிக்கின்றான். அப்படியே மேற்குலகில் தஞ்சம் கோருவது அவனுடைய நோக்கம். அவளை ஒரு பெட்டியில் வைத்து மிகத் தந்திரமாக விமானத்தில் ஏற்றி லண்டன் வருகிறான். K.G.B அதிகாரி என்பதால் அவனுக்கு இதனைச் செய்ய முடிகின்றது. அவனே வீராவை ஜனாதிபதி மனைவியாக மாறுவதற்குப் பயிற்சி அளித்தவன். அத்துடன் அவளுடைய காதலன், ரஷ்யப் பிரதமரின் கட்டளைப் படி மொஸ்கோவில் ஜனாதிபதி மனைவியைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வி அடையவே, ஒற்றர் தலைவன் அவளைக் காப்பாற்றிச் சாமர்த்தியமாக லண்டனுக்கு அழைத்துச் செல்லுகின்றான்.


எவ்வாறாயினும் அவன் இறுதியாக லண்டனில் குறிப்பிட்ட விமானதளத்தில் ஜனாதிபதி மனைவியுடன் வந்து இறங்குவது K.G.Bக்குத் தெரியவருகிறது. விமானதளமும் ரஷ்யாவின் பிரத்தியேக பாவனைக்குரியது. எவ்வாறாயினும் வீராவும் இவர்கள் வருவது தெரிந்து அவ்விமான நிலையத்துக்குச் செல்லுகின்றான். அவள் அமெரிக்க ஜனாதிபதி மனைவியை விமானத்துக்குள் சந்திக்கின்றான். இருவரும் ஒன்றாகவே வெளியே வருகின்றனர். அப்போது இருவரில் ஒருவர் K.G.B கொலையாளியின் குண்டுத்தாக்குதலில் அடிபட்டுச் சாம்பலாகிறார். முடிவாக இறந்தது யாரென்பது எவருக்கும் தெரியாத முறையில் நாவலாசிரியர் கதையை முடிக்கின்றார். அமெரிக்காவின் பேச்சுவார்த்தை இரகசியம் எதுவும் தெரியாத நிலையில் ரஷ்யப் பிரதமர் அமெரிக்க ஜனாதிபதியுடன் உடன்பாட்டைச் செய்கின்றார். இருநாடுகளுமே ஆபிரிக்காவில் தலையிடுவதில்லை என்பதே அந்த உடன்பாடு.

உண்மை பாதி கற்பனை பாதி என்ற முறையில் இரு உலக வல்லரசுக்களுக்கிடையிலான முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த நாவல் 1980களில் மிகவும் புகழ்பெற்று, இலட்சக்கணக்கில் விற்பனையானது. இது பின்னர் திரைப்படமாகவும் வெளிவந்தது.

## Fredrick Forsyth , இன் Odessa file (1972)

1972இல் வெளியிடப்பட்ட இந்த மர்ம நாவல் பலமுறை மீண்டும் மீண்டும் அச்சிடப்பட்டு உலகெங்கும் லட்சக்கணக்கான பிரதிகள் விற்பனையாகின. நாவலாசிரியர் கடுமையாக உழைத்து நாவலுக்கான பின்புலம் பற்றி சில ஆண்டுகள் ஆராய்ந்து இந்த நாவலை எழுதினார். இதுபோன்று பல புகழ்பெற்ற நாவல்களை அவர் எழுதியுள்ளார்.

மேற்கு ஜேர்மனி, இஸ்ரேல், எகிப்து, அவுஸ்திரேலியா போன்ற பல நாடுகளின் பின்புலத்தில் இந்த நாவல் எழுதப்பட்டது. நாவலின் பிரதான பாத்திரமான 30 வயதான பீட்டர் மில்லர் ஒரு பிரபல பத்திரிகையாளர். எம்பர்க் நகரில் ஆடம்பர மாடிவீட்டில் அதிக




விலையுள்ள வாகனத்துடன் ஆடம்பர வாழ்க்கை நடத்துபவர். அவர் தற்செயலாக ஜேர்மன் யூதர் ஒருவரின் தினக்குறிப்பை கண்டறிகின்றார். அந்த யூதர் தற்கொலை செய்து கொண்டவர் தினக்குறிப்பேட்டை ஆழமாக படித்த மில்லர் பழைய ஹிட்லர் காலத்து இரகசிய பொலிஸ் தலைவன் 'றொட்ச்மன்' என்ற கொலைகாரனை எப்படியாவது தேடிப்பிடிக்க வேண்டுமென கங்கணம் கட்டுகின்றான். இவன் ஹிட்லர் காலத்தில் ஏராளமான யூதர்களை கொன்றொழித்தவன். 'ரிகா' என்ற இடத்தில் இருந்த ஜேர்மன் நாஸிகளின் சிறைக் கூடத்தில்தான் இவன் ஏராளமான யூதர்களை அழித்தொழித்தான். அதனால் அவனுக்கு 'ரிகா படுகொலையாளி' என்ற பெயரும் இருந்தது. இந்த தேடுதலில் ஈடுபட்ட மில்லர், இவன் போன்ற பழைய கொலையாளிகளை மறைத்துக் காப்பாற்றும் 'ஒடெஸா' என்ற அமைப்பை பற்றி கண்டறிகின்றான். இந்த அமைப்பின் உறுப்பினர்கள் ஹிட்லர் காலத்து ரகசிய காவல்துறையினர்.

மில்லர் இந்த 'ஒடெஸா' அமைப்பினுள் ஊடுருவ முயற்சி செய்கின்றான். அதற்கு பாதாள உலக யூத அமைப்பு ஒன்று உதவு கின்றது. இதன் காரணமாக ஏராளமான சம்ப வங்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் மில்லர் ஏன் பழைய கொலையாளியான 'றொட்சுமனை' இவ்வளவு தூரம் தேடுகின்றான் என்பதும் தெரிய வருகின்றது.

இரண்டாம் உலகப்போர் முடிவடையும் தறுவாயில் 'றொட்சுமன்' மில்லரின் தந்தையை கொலை செய்த விபரம் மில்லருக்கு தெரியவருகின்றது. அத்தந்தை இரண்டாம் உலகப்போரில் ஒரு ஜேர்மனிய தளபதியாக இருந்தவர். மில்லர் தனது தந்தையைக் கொன்றவன் யாரென்பதை யூதனின் தினக்குறிப்பிலிருந்து அறிந்துகொள்கின்றான். மில்லர் ஆரம்பத்திலிருந்து தனது தந்தையின் கொலைக்கு பழிவாங்க திட்டமிட்டிருந்தவன்.

ஆயினும் றொட்சுமன் எப்படியோ அவனிடமிருந்து தப்பியோடுகின்றான். அதன்பின் மில்லர் சாதாரண வாழ்க்கைக்கு திரும்புகின்றான். தந்தையை கொலை செய்தவனைத் தேடுவதில்லை என முடிவு செய்கின்றான்.

'ஒடெஸா' கோப்பில் பல ஜேர்மன் காவல்துறை கொலையாளிகளின் உண்மைப் பெயர்களும் புனைபெயர்களும் காணப்படுகின்றன. எனவே அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மில்லர் அந்த கோப்பினை புதிய ஜேர்மன் அரசாங்கத்தின் நீதி அமைச்சுக்கு அனுப்பி வைக்கின்றார்.

ஒட்டுமொத்தத்தில் இந்த நாவல் மிகவும் ஆச்சரயமான ஒரு மர்மநாவல் என்பதால் அக்காலத்தில் உலகப்புகழ் பெற்றது. மில்லர் 'றொட்ச்மனை இவ்வளவு கடுமையாக தேட முற்பட்டதின் உண்மை நோக்கம் பின்னால் தெரியவரும் போது ஒரு முக்கியமான மர்ம முடிச்சு அவிழ்கின்றது. இத்தகைய நாவல் பல லட்சக்கணக்கில் விற்கப்பட்டது ஆச்சரியமான ஒரு விடயமல்ல.

ooo

## பகிர்வோம்....



**ஈழமும் தமிழும்**

மாதகல் பகுதியைச் சேர்ந்த கந்த **குலோத்துங்க முதலியார்** கி.பி.1760களில் வாழ்ந்தவர். இவரின் மகனான **சீமான் கணக்கர்** என்பவர், தஞ்சை அரசிடம் தமது புலமையைக் காட்டி **கவீச்சுரன்** என்கிற பட்டத்தையும் அனேக விருதுசின்னங்களையும் பெற்றுள்ளார். இவரின் மகனும் அந்தோனிப்பிள்ளை நாவலர், என்ற **நாவலர்** பட்டத்தைத் தாங்கிய பெரும் புகழ்படைத்த வித்துவான் ஆவார்.

# மொழி

சு.கருணாநிதி

**யா**ழ் நகரத்தில் மருத்துவ மனைவீதியில் உள்ள நவீன சந்தையின் படிக்கட்டில் நின்று பாதசாரிகளையும் வாகனங்களையும் விசித்திரமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன் எல்லாம் விநோதமாகவே இருந்தன. பல வருடங்களுக்குப் பின் பார்த்த தெரு என்னைப் பேதலிக்கவைத்தது. பழைய வாகனங்களின் புகைபோக்கிகளிலிருந்து வரும் புகை எரிவால் கண்கள் கலங்கிக்கொண்டிருந்தன. கையிலிருந்த போத்தல் நீரில் கண்களைக் கழுவிக்கொண்டேன்.

பாதையில் நடப்பதுகூட மனிதர்களுக்கு எவ்வளவு உபாதையாக இருக்கிறது. வெய்யில் வெம்மை சனநெரிசல், வாகனநெரிசல், காட்சிகள் மகிழ்ச்சியையும் சூழல் வெறுப்பையும் தந்துகொண்டிருந்தன. நகரம் மோசமான நிலையிலிருந்தாலும் சனம் நிறைந்திருந்தது .சூழல் மாற்றம் வியப்பாகவும் பயமாகவுமிருந்தது. இரசிக்கக் கூடியமாதிரி விருப்பமும் விருப்பின்மையாகவுமிருந்தது. பிரிந்திருந்த காலஇடைவெளி அந்தச் சூழலில் என்னைக் கட்டிவைத்திருந்தது .மனம் பாரமாகிக்கொண்டிருந்தது. ஆட்டோக்களும் சைக்கிள்களும் குறுக்கும்மறுக்குமாக ஓடிக்கொண்டிருக்கையில் இவர்கள் எப்படி வீதியில் நடக்கின்றார்கள்? என்று என்னையே நான் கேட்டுக்கொள்கிறேன். தன்னிச்சையாக வீதியில் இறங்கி சுதந்திரமாக நடக்க ஆசையாக இருக்கிறது, ஆனால் நடக்கின்ற கணங்களில் விபத்து ஏற்பட்டுவிடுமோ எனப் பயமாகவுமிருந்தது.

வேறொரு உலகைத் தரிசிப்பதுபோன்ற என் ரசிப்பினூடே ஒரு பத்து, பன்னிரண்டு வயது மதிக்கத்தக்க சிறுவன் குறுக்கிட்டான். "அய்யா, உங்களப் பாத்தா கடவுள் மாதிரியிருக்கிறீங்க சாப்பிடக்காசு இல்லீங்க" கையை நீட்டினான். நான் நூறுரூபாய் பணத்தை எடுத்து நீட்டினேன் அவன் வாங்கமறுத்து "அய்யா, நீங்க வெளிநாட்டுக்காரர் மாதிரியிருக்கிறீங்க முருகன் மாதிரியிருக்கிறீங்க வெளிநாட்டுச் சல்லிதாங்க" என்றான்

"வெளிநாட்டுச்சல்லி இல்ல" இன்னுமொரு நூறை எடுத்து இருநூறாய் நீட்ட, பக்கத்தில் நின்று உரையாடிக்கொண்டிருந்த இரு இராணுவத்தினரில் ஒருவன் என்னை நெருங்கி "பொடியன் என்ன சல்லிகேட்டா?" என வினவினான்.


"அவன் சல்லிகேட்டான் குடுக்க வேணாமெண்டு, பொறின் சல்லி கேக்கிறான்" என்று சிங்களமொழியில் பதிலிறுத்து நான் அவனுக்குள் இறங்கினேன்.

சிறுவன் திடீரென அவ்விடம் விட்டகன்றான். இராணுவவீரன் புன்னகையோடு "சிங்களம் ஞாபகம் இருக்கு" என்று எனக்குள் இறங்கினான்.

இராணுவவீரன் என்னோடு பேச்சுக்கொடுத்ததும் ஏன் அவ்விடம் விட்டகன்றான்?

அவன் ஏன் பணத்தை வாங்காமல் போனான்? இராணுவன் என்னோடு என் மொழியில் பேசியதாலா? அல்லது நான் அவனோடு அவனது மொழியில் பேசியதாலா?

அவன பணத்தை வாங்காமல் போனது இன்றுவரைக்கும் எனக்குள் பல கேள்விகளை எழுப்பிக்கொண்டிருப்பதோடு மனதை உறுத்திக்கொண்டுமிருக்கின்றது.



**ஞானத்தின் கோன்மையவர் நெற்றியிலுந் தாடியிலும்**
**காணுறப் பெற்ற கலைவடிவம் – ஊணுணவால்**
**கூடும் உடலழுகும் கையிலெழுத் தாணியொடும்**
**ஏடுமுடன் கொண்டவள்ளு வர்**

**ஈழத் திருநாட்டின் ஈடில்லா ஓவியனாய்**
**வாழும் இராசையா வித்தகனின் – ஆளுமையின்**
**தேறல் இதுவாகும் செந்தமிழின் நாயகன்பேர்**
**கூறாமல் கூறும் கலை**

**– ஜின்னா**

# POOBALASINGHAM BOOKDEPOT

**Importers, Exporters, Sellers & Publishers of Books, Stationers and News Agents**

## புதிய வரவுகள்

| நூலின் பெயர் | ஆசிரியர் | வெளியீடு | விலை |
|---|---|---|---|
| • நவீன இலக்கியம் | தேவகாந்தன் | பூபாலசிங்கம் புத்தகசாலை | 550/- |
| • உயிரில் கலந்த வாசம் | சட்டசாதன் | | 350/- |
| • எஞ்சியிருக்கும் சிறகுகளால் பறத்தல் | முல்லை முஸ்ரிபா | | 400/- |
| • பழுத்தோலை | ஏ. சீ. எம். இப்றாஹீம் | | 250/- |
| • மின்மினிகளால் ஒரு தோரணம் | முல்லை முஸ்ரிபா | | 350/- |
| • விபச்சாரி 80 ரூபாய் | யாழ். தர்மினி பத்மநாதன் | மித்ர வெளியீடு | 390/- |
| • மழையில் நனையும் மனசு | எச். எப். ரிஸ்னா | பூங்காவனம் இலக்கிய வட்டம் | 400/- |
| • 64 டிசம்பர் 22 | சீமான் பத்திநாதன் பர்ணாந்து | | 400/- |
| • புலவொலி | ஆ. இரத்தினவேலோன் | ஜீவநதி வெளியீடு | 400/- |
| • கவிதை சிறகு | தாஸிம் அகமது | எஸ் . ஜே வெளியீடு | 500/- |
| • முக்காழி | ஜின்னாஹ் ஷரீபுத்தீன் | அன்னை வெளியீட்டகம் | 400/- |
| • பாலை நில ரோஜா | நிவேதா ஜெகநாதன் | | 480/- |
| • வானம்பாடி பகுதி -01 | வெற்றிச் செல்வி | குருவி வெளியீட்டகம் | 250/- |
| • வானம்பாடி பகுதி -02 | | குருவி வெளியீட்டகம் | 300/- |
| • எரிமலை (நாவல்) | தி.ஞானசேகரன் | ஞானம் பதிப்பகம் | 600/- |

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

புத்த விற்பனையாளர்கள், ஏற்றுமதி, இறக்குமதியாளர்கள், நூல் வெளியீட்டாளர்கள்

தலைமை: இல. 202, செட்டியார் தெரு, கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 2422321. தொ.நகல்: 2337313 மின்னஞ்சல்: pbdho@sltnet.lk

கிளைகள்:

340, செட்டியார் தெரு, கொழும்பு - 11. தொ.பே: 2395665

இல. 309 A-2/3, காலி வீதி, கொழும்பு - 6. தொ.பே: 4-515775, 2504266

இல. 4 A, ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்



பேராசிரியர் துரை மனோகரன்

## நீதிக்குத் தலைவணங்கு!

இலங்கை நீண்டகாலமாகப் பேரின வாதத்தின் வளர்ப்புத் தொட்டிலாக விளங்கிவருகின்றது. அது அடிக்கடி தனது பேரினவாதத் திமிரை உலகுக்கு இனங்காட்டி வருகிறது. பௌத்த தர்மத்தை வளர்க்கவேண்டியவர்கள், அதர்மத் தையே தீனி போட்டு வளர்த்து வருகின்றனர். ஆட்சியாளர்களும், துறவு வேடம் பூண்டவர் களும், பிறரும் போட்டி போட்டுக்கொண்டு பேரினவாதத்தைத் தம் முழுப் பலம் கொண்டு உயர்த்தி வருகின்றனர்.

அண்மையில் முல்லைத்தீவு செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளவில் இடம்பெற்ற சம்பவமும் பேரினவாதத்தின் உச்ச நிலையைப் பிரகடனப்படுத்துகிறது. முழுக்க முழுக்க இந்துக்களுக்கே உரிய இக் கோயில் பிரதேசத்தில், வில்லங்கமாக வந்து விகாரை கட்டி அட்டூழியம் செய்தார், காவி வேடதாரி ஒருவர். இந்துக்களின் மனங்களைப் புண்படச் செய்த அன்னார், அண்மையில் நோய்வாய்ப்பட்டுக் காலமாகி விட, அதையே ஒரு சாட்டாகக் கொண்டு, நீதிமன்ற உத்தரவையும் மீறி, கோயில் வளவுக்குள்ளேயே பேரினவாதிகள் அனைவரும் சேர்ந்து அவரது உடலைத் தகனம் செய்தனர்.

சட்ட வரன்முறைக்கு உட்பட்டுச் செயல் படுமாறு கோரிநின்ற தமிழ்ச் சட்டத்தரணிகள், பொதுமக்கள் அவமதிக்கப்பட்டும், சிலர் தாக்கப் பட்டும் பேரினவாதம் அங்கு உச்சநிலையில் தலைவிரித்தாடியது. பாதுகாப்புத் தரப்பினர், காவல்துறையினர், துறவு வேடம் பூண்டோர், சிங்களச் சட்டத்தரணிகள், சிங்களப் பொதுமக்கள் என அனைவரும் ஒட்டுமொத்தமாக நீதிக்குத் தலைவணங்காத நிலையே காணப்பட்டது.

சட்டத்தைத் தம் கையில் எடுத்துக்கொண்ட காவி வேடதாரி ஒருவரின் தலைமையில், இந்துக் கோயிலின் புனிதத் தன்மையைக் கணக்கில் எடுக்காமல், நீதிக்கு எதிராக இச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சட்டத்தைப் பேண முற்பட்டவர்களை எதிர்த்தும், சட்டத்தை மதிக்காதவர்களை ஆதரித்தும் காவல்துறை செயல்பட்டமை, கேவலமானதும், வெட்கக்கேடானதும் ஆகும்.

நீதியை மதிக்காத பேரினவாதம் நமது நாட்டில் எப்போதோ வேரூன்றத் தொடங்கி விட்டது. அதன் உச்சக்கட்டங்களில் ஒன்றுதான் செம்மலை நீராவியடிப் பிள்ளையார் கோயில் வளவுச் சம்பவம். இதற்கு, ஆட்சியாளர்களும் தார்மீகப் பொறுப்பை ஏற்கவேண்டும். நீதியை அவமதித்த அனைவரும் சட்டத்துக்கு முன்னால் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட வேண்டும். சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்பது, எதிர்காலத்திலாவது நமது நாட்டில் நிலைநிறுத்தப்பட வேண்டும். பேரினவாதிகளுக்கு ஒரு சட்டம். சிறுபான்மையினருக்கு வேறு ஒரு சட்டம் என்ற நியாயமற்ற நடைமுறை நீக்கப்பட வேண்டும்.

நீராவியடிப் பிள்ளையார் கோயில் சம்பவம் தொடர்பாகப் பிரதமர், அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்படப் பலரும் கண்டனங்கள் தெரிவித்துள்ள நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை மௌனம் சாதித்தமை ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. சுமந்திரன் கண்டன அறிக்கையை வெளியிட்டார். நாடாளு மன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தனும், சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜாவும் மட்டும் களத்தில் நின்றனர். மற்றைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரது குரல்கள் மாத்திரம் ஆங்காங்கே ஒலிக்கின்றன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடப்போகும் ஒருவர், நடந்த சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில், பௌத்தத் துறவிகளை அவமதித்ததாலேயே அப்படி ஒரு நிலை ஏற்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அவரை ஆதரிக்குமாறு தமிழ் மக்களிடம் வேண்டிக் கொள்ளும் "மறப்போம் மன்னிப்போம்" கூட்டம், இனிமேல் எந்த முகத்தை வைத்துக்கொண்டு தமிழ் மக்கள் முன்னால் உலா வரப்போகிறது என்பது தெரியவில்லை.

## உறுதி வெளிப்பட வேண்டும்

இப்போது எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போகின்றவர்கள் யார் என்ற விபரம் மக்களுக்குத் தெரிந்துவிட்டது. பலர் ஆசைக்காகப் போட்டியிட முன்வந்தாலும், மூவரே களத்தில் முக்கியமானவர்களாகக் கணிக்கப்படுகின்றனர். இந்த மூவரைச் சுற்றியே முழு நாடும் கவனம் செலுத்துகிறது.

மூவரைப் பொறுத்தவரையிலும், அவர்களின் வெற்றியைத் தீர்மானிக்கப் போகின்றவை, தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளே. சிவப்புச் சட்டைக்காரர் இப்போதும் குழந்தைத்தனமாக உள்ளூராட்சிச் சபைகளே போதும், மாகாண சபைகள் தேவையில்லை என்று குரல் கொடுக்கின்றார். பலரும் கீழே இருந்து மேலே போவதைத் தான் விரும்புவர். இவரது கட்சியினர் மேலே இருந்து கீழே வர விரும்புகின்றனர். தாங்கள் சிவப்புச் சட்டைக்காரர் என்று இவர்கள் மக்கள் முன்னால் வேஷம் போட்டபோதும், இப்போதும் பழைய நாறிப்போன பேரினவாதக் கருத்துகளையே கொள்கை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இவர்களது கை சுத்தமானது என்பதை மறுப்பதற்கு இல்லை. அந்த வகையில், இவர்கள் மதிப்புக்கு உரியவர்கள். ஆனால், இனப் பிரச்சினை தொடர்பாக இவர்களிடம் எந்த உருப்படியான திட்டமும் இல்லை.

நமது நாட்டின் மொத்தப் பேரினவாதிகளின் அன்புக்குரிய சின்னமாக விளங்கும் ஒருவரும் தேர்தலில் போட்டியிடுகிறார். முன்னர் அவரது அண்ணன் ஒருவரைச் சோதிடர் ஒருவர் ஆட்டிவைத்ததைப் போலவே, இவரையும் வடமத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஒரு சோதிடர் ஆட்டிவைப்பதாகக் கேள்வி. “ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே கண்ணா!” ஆடி அடங்குவது தானே வாழ்க்கை நியதி. என்னதான் அவரைச் சுற்றி, அவரது ஆதரவாளர்கள் ஆட்டம் போட்டாலும், தமிழ், முஸ்லிம் மக்கள் அவரது ஆட்டத்துக்குத் தேர்தலில் ஒரு முடிவு கட்டுவார்கள் என்பது பெரும்பாலும் நிச்சயம்.

பச்சைக் கட்சியைச் சேர்ந்த புதியவர் பெருமளவு மக்களைக் கவர்ந்தவராகக் காட்சியளிக்கிறார். ஆனால், அவரிடமும் இனப் பிரச்சினை தொடர்பான அறிவோ, அக்கறையோ இருப்பதாகத் தெரியவில்லை. அவரிடமும் தீர்வு தொடர்பாக உருப்படியான திட்டங்கள் எதுவும் இல்லை. ஆனாலும், தமிழ்த் தரப்பினர் விடாப்பிடியாக நின்று, அவருடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி, இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக நம்பகமான உறுதிமொழிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பொதுவாகச் சகல சிங்கள அரசியல்வாதிகளும் தேர்தல் சமயத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக வாக்குறுதிகளை அள்ளியள்ளி வழங்குவார்கள். தமிழர் தரப்பும் ஏமாந்த சோணகிரிகள் போல நம்பிநம்பி ஏமாந்துபோவது தான் வழமையாகிவிட்டது. இம்முறையாவது மிக உறுதியான முறையில், எதிர்காலத்தில் ஏமாறாத வகையில் இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக ஜனாதிபதி வேட்பாளர்களிடம் இருந்து வாக்குறுதிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இம்முறை தமிழ்ப் பொதுமக்களும் தங்கள் அரசியல்வாதிகள் எப்படி நடந்துகொள்கிறார்கள் என்பது தொடர்பாகக் கவனமாகவே இருப்பார்கள்.

## ஈழத்தின் இரு ஆளுமைகள்

ஈழத்தின் புகழ்பூத்த பேரறிஞர்களில் ஒருவராகிய பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் காலமாகிவிட்டார் என்ற செய்தியை, அவர் காலமான அன்று இரவு பத்தரை மணியளவில் எனது மாணவர்களில் ஒருவரும், கோப்பாய் கல்வியியல் கல்லூரியின் ஓய்வு பெற்ற விரிவுரையாளருமான கௌரிகாந்தன் தொலைபேசியில் தெரிவித்தபோது, நான் ஒருகணம் திணறிவிட்டேன். அவர் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டு சிட்னியில் முதியோர் இல்லத்தில் இருப்பது தெரிந்தபோதிலும், அவர் அமரராகிவிட்டார் என்ற செய்தி மனத்தை நெகிழச் செய்தது.

நான் பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்களின் மாணவன் அல்ல. ஆனால், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஒன்றாகப் பணியாற்றியிருக்கிறோம். நான் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக இருந்தபோது, அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றிக்கொண்டிருந்தார். பின்னர், அவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பணியாற்ற வந்தபோது, நான் விரிவுரையாளராக இருந்தேன். அப்போதுதான் அவருடன் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது. சிரித்துச்சிரித்து அன்புடன் அவர் பழகுவார். சில பேராசிரியர்கள் நேரத்துக்கு நேரம் தங்கள் ‘மூட்’டுக்கு ஏற்ப அவ்வப்போது எரிந்துவிழுவார்கள். ஆனால், பூலோகசிங்கம் எப்போதும் நிதானமாகவே நடந்துகொள்வார்.

அவரின் அந்தப் போக்கு என்னை மிகவும் கவர்ந்தது. எந்த நேரத்திலும் அவருடன் எதுவும் பேசலாம். அவ்வப்போது பல அறிவுரைகளை எனக்கு வழங்குவார்.

அவரது தமிழ் இலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள் முதற்கொண்டு, பல நூல்களும், கட்டுரைகளும் மிகப் பெறுமதி வாய்ந்தவை. குறிப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்திலக்கியம் பற்றி, அவர் விரல்நுனியில் தகவல்களைச் சேகரித்து வைத்திருந்தார். பழந்தமிழ் இலக்கியம் தொடர்பாகப் பரந்த பார்வை அவரிடம் இருந்தது. இந்துக் கலாசாரத் திணைக்களத்தின் பல்வேறு வெளியீடுகளில் அவரது அயராத பணி வெளிப்படுகின்றது.

அவர் அவுஸ்திரேலியாவுக்குப் புலம் பெயர்ந்து சென்ற பின்னரும், அவரது மொழி, இலக்கியப் பணிகள் தொடர்ந்தன. ஆனாலும், இலங்கையில் இருந்திருந்தால், மேலும் அவரது பணிகள் சிறந்திருக்கும். சில ஆண்டுகளுக்கு முன்னர், பேராசிரியர் பூலோகசிங்கம் அவர்களை அட்டைப்பட அதிதியாக ஞானம் கௌரவித்தது. அவர் பற்றிய குறிப்புகளை எழுத்தாளர் முருகபூபதி எழுதியிருந்தார்.

பேராசிரியர் பூலோகசிங்கம் மறைந்தாலும், அவர் ஆற்றிய பணிகளும், பங்களிப்புகளும் அவரை என்றும் நினைவுகூரச் செய்யும். அவரது வாழ்வு ஒரு பேரறிஞருக்குரிய வாழ்வாகவே அமைந்து நிறைவு பெற்றது. அவர் எழுதிய நூலைப் போலவே, அவரது பணிகளும் தமிழ் இலக்கியத்தில் ஓர் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகளாகவே அமைந்துள்ளன.

இலங்கையின் வீரகேசரி பத்திரிகையைப் பொறுத்தவரையில், அதன் பல்வேறு நல்ல அம்சங்களுடன், உடன் ஞாபகத்துக்கு வரும் பெயர்களில் ஒன்று, மொறாயஸ் என்பதாகும். வீரகேசரியினதும், அந்நிறுவனத்தின் பிற பத்திரிகைகள், பிரசுரங்களினதும் ஓவியராகவும், சினிமாப் பகுதிப் பொறுப்பாளராகவும் பணிபுரிந்து, அண்மையில் மறைந்தவர், மொறாயஸ். வீரகேசரியில் 1970களில் எனது சில சிறுகதைகள் வெளிவந்தபோது, அவற்றுக்கு அழகாக ஓவியங்கள் தீட்டியவரும் மொறாயஸே.

வீரகேசரியின் சினிமாப் பகுதியை, எனது பத்து வயது முதற்கொண்டு நான் பார்த்துவந்திருக்கிறேன். மொறாயஸின் வருகையின் பின்னர், வீரகேசரியின் சினிமாப் பகுதி களைகட்டத் தொடங்கியிருந்தது. சினிமா தொடர்பான பல விடயங்களை, அவரது சினிமாப் பகுதி சிறப்பாக வெளியிட்டு வந்தது. முன்னர், சினிமாப் பகுதியில் இடம்பெற்ற 'மோனா பதில்கள்' என்ற கேள்வி – பதில் பகுதியும் சுவாரசியமாக அமைந்தது.

புகழ் பெற்ற ஓவியராக மாத்திரமன்றி, எழுத்தாளராகவும் மொறாயஸ் விளங்கினார். மித்திரன் வாரமலரில் சில புனைகதைத் தொடர்களையும் அவர் எழுதியுள்ளார். தாம் காலமாவதற்குச் சில மாதங்களுக்கு முன்னரும்கூடப் பின்னணிப்பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் பற்றி மித்திரன் வாரமலரில் 'கானக்குரலோனின் கீதசரிதம்' என்னும் தலைப்பில் தொடராக எழுதிவந்துள்ளார். சௌந்தரராஜன் எனக்குப் பிரியமான பாடகர் என்ற முறையில், சௌந்தரராஜன் பற்றி அவர் எழுதிவந்த அத்தொடரைப் பிரியமுடன் வாசித்துவந்தேன். மோனாலிஸா என்ற தமது மகளின் பெயரில் அத்தொடரை அவர் எழுதியிருந்தார்.

மல்லிகை தனது 2007 ஜுன் இதழின் முன் அட்டையில் மொறாயஸின் படத்தை வெளியிட்டு, அவரைக் கௌரவித்தது. மொறாயஸின் மறைவு, வீரகேசரிக்கு மாத்திரம் அன்றி, ஈழத்துக் கலையுலகுக்கும் பேரிழப்பு.

❍❍❍

## பகிர்வோம்....

**ஈழமும் தமிழும்**



ஆறுமுக நாவலரால் ஈர்க்கப்பெற்றவரும் அவருடன் தொடர்புடையவரும் ஈழத்து அறிஞருமான **அம்பலவாண நாவலரும்** தமது பிரசங்கம் செய்யும் திறமையால் திருவாவடுதுறை ஆதீனத்தாரால் **நாவலர்** என்னும் பட்டம் பெற்றவர். அம்பலவாண நாவலரை **ஆறுமுக நாவலரின் பாதசேகரர்** எனும் சிறப்புப் பெயரினாலும் குறிப்பிடுவர்.

# நினைவில் நிழலாடும் இலக்கியச் செல்வர்கள்:
# எப்பொழுதும் 'எதிரொலி'க்கிறார் மலையக எழுத்தாளர்!



தமிழ்மணி, தேசத்தின் கண்
மானா மக்கீன்

**ந**ன்றாகப் பின்னுக்கு வாரிவிடப்பட்ட சுருள்முடி. நல்ல உயரம், கறுத்த உடல்வாகு.

கொழும்பு, நீதிமன்ற வளாகத்தையொட்டிய ஹல்ஸ் டோர்ப் வீதி 86ஆம், இலக்க இல்லத்தை அவர் கட்டியபொழுது எனக்கு வயது பதினைந்துகூட ஆகியிருக்கவில்லை. *(51- 52)*

"நீங்கதானா, கலாஜோதி ஆசிரியர், வணக்கம். உங்கள் கோயமுத்தூர் பேனா நண்பி எனக்கும் தோழி. உங்கள் கையெழுத்து இதழைப் பற்றி நிறைய எழுதியிருக்கு. பார்வைக்குத் தருவீங்களா?"

இப்படி, ஒரு கோவைப் பெண் மூலமாக ஒரு மலையகத் தமையனார் கிடைத்தார். நான் பிறந்த 1937யும் அவரது 1931யும் கழித்துப் பார்த்தால் ஆறு அகவை வித்தியாசம்.

அப்படியும். அவர் 'மக்கீன் ஸார்' என்று விழித்தார்! உடனே 'கலைஜோதி' யைக் கையளித்தேன். என்ன இது, ஒரு கையெழுத்துப் பத்திரிகையில் எழுத்தெல்லாம் துல்லியமாக இருக்கணுமே! கெக்கரே பிக்கரேன்னு இருக்கே! இனி அடுத்த இதழிலேயிருந்து நான் தான் எழுதுவேனாக்கும்!

சொன்னபடியே, தன் முத்துமுத்தான எழுத்துக்களால் சில இதழ்களைத் தயாரித்துக் கொடுத்தார்!. அப்பொழுது 'ரெடிபியுஷன்' பெட்டியில் தான் 'ரேடியோசிலோன்' கேட்பேன். அவரும் அப்படியே! அவர் பேனையை ஊன்றிப் பிடித்தது தமிழ் நிகழ்ச்சிகளின் விமரிசகராகவே! இதிலே அவரது தமையன் சுப்பையாவுக்கும் பங்குண்டு.

திருவாளர்கள் சிவபாதசுந்தரம், பாலசுப்பிரமணியம், சானா சண்முகநாதன் போன்றோர், 'முகத்துவார மோதரவீதி சகோதரர்கள். கடிதங்கள் இன்றைக்கு வந்திருக்கிறதா?" என்று தேடுவார்கள்.! கையிலே எப்பொழுதும் கா.ஸ்ரீ.ஸ்ரீ மொழிபெயர்ப்புகளான காண்டேகர், பிரேம் - சந்த் நாவல்கள், கல்கி, புதுமைப்பித்தன், படைப்புகள்!

கையிலே காசு இருக்கும் சமயம் ரெயின்போ பிரின்டர்ஸ், ராகம் கனகரத்தினம், இலங்கைவங்கி ஜி.என்.கணேசன், முகத்துவாரம் சிகைஅலங்காரர் தங்கவேல் ஆகியோருடன் என்னையும் ஐம்பது சதக் கலரி டிக்கட்டில், ரீகல், மெஜஸ்டிக் படமாளிகைகளில் ஆங்கிலப் படங்களைப் பார்க்கவைப்பார். நடிகை எஸ்தர் வில்லியம்ஸ் அவரது அபிமானம்!

பிற்காலத்தில் சிருஷ்டி இலக்கியத்தில் அவரது கதை யுக்திகள் மிகச் சிறப்பாக அமைந்திருந்ததற்கு முழு முதற்காரணம் ஆங்கிலப் படங்களின் கதையம்சங்களை உன்னிப்பாக உள்வாங்கியதே. எனினும் எந்தத் தழுவலையும் செய்தவரல்லர். நேராக மண்வாசனையைத் தேடி பதுளை, எஸ்டேட்டுகளை வலம் வந்தார்!

பலரும் கூறுவதுபோல் ஆரம்பகாலத்தில் படைப்பிலக்கியவாதியாகப் பரிணமிக்காமல் வானொலி நாடகத் துறையிலேயே காலடிவைத்தார்.

அவரது எழுத்தின் 'எதிரொலி' சானாவின் நாடக அரங்கில் ஆரம்பித்தது. முதன் முதலான வானொலி நாடகமாக அவருக்கும் சானாவுக்கும் அமைந்துபோனது 'எதிரொலி' என்ற நாடகமே. பி.பி.ஸி. பயிற்சிபெற்றுத் திரும்பியிருந்த சானாவுக்கு தனது தயாரிப்புத் திறமையைக் காட்ட ஒரு மலையக வானொலி ரசிகனே தோன்றாத் துணையானார்! (இந்தத் தமிழ் நாடகம், சிங்களநாடகத் தயாரிப்பாளர் வெலிகலயையும் கவர்ந்து சிங்கள நாடக அரங்கிலும் எதிரொலித்தது.)

அன்று, கொள்ளுப்பிட்டி ஸ்கூல் லேனில் தனி அறை எடுத்து உயர் படிப்பில் சித்திபெற உருக்கொடுத்துக் கொண்டிருந்த பின்னாளைய பேராசிரியர் கைலாசபதியின் களைப்புத் தீர்த்தவை அவர் நாடகங்களே! அவரை நாடக எழுத்தாளராக்கியதும் அவர் படைப்புகளே!

அவர் இன்றும் எங்களுடன்தான்! 'ஒரு கூடைக் கொழுந்து' சுமந்தவராக அல்லர்! 'எதிரொலி' எழுப்பி ரேடியோ சிலோனை உசுப்பேற்றியவராய்!

எனக்கொரு தமையன் இல்லாக் குறைபோக்கிய, பாசமிகு என்.எஸ்.எம்.ராமையா அவர்கள் என்னருகிலேயே எப்பொழுதும்!

கலாபூஷணம் கே.பொன்னுத்துரை










**21ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது விழா–2019**

21ஆவது கொடகே தேசிய சாகித்திய விருது விழா-2019 செப்டம்பர் ஐந்தாம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு கொழும்பு-07 இலங்கை மன்றக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. பிரமுகர்களின் மங்கல விளக்கேற்றலுடன் விழா ஆரம்பமானது. தமிழில், தமிழ் நூல்கள் அறிவிப்புரையை, மேமன்கவி நிகழ்த்தினார். இவ்விழாவில் பேராசிரியர் ஜே,பீ.திஸாநாயக சிறப்புரை ஆற்றினார். திக்குவல்லை கமால் சிற்றுரை நிகழ்த்தினார். இலக்கிய உலகில் நீண்ட நாட்களாய் பணிபுரிந்து வரும் சிங்கள, தமிழ், ஆங்கில மொழி இலக்கிய ஆளுமைகளான பேராசிரியர் ஜே.பீ.திஸாநாயக, பேராசிரியர் வினி விதாரண, திருமதி பத்மா சோமகாந்தன் ஆகியோருக்கு கொடகே வாழ்நாள் சாதனை விருதுகள் வழங்கப்பட்டன.

மேலும், இவ்விழாவில் 2018ஆம் ஆண்டு வெளிவந்த சிங்கள தமிழ் ஆங்கில மொழிகளில் வெளிவந்த நூல்களில் சிறந்த நாவல், சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு என பல்துறைச் சார்ந்த சிறந்த நூல்களுக்கு கொடகே விருதுகள் வழங்கப்பட்டன. சிறந்த நாவலுக்கான கொடகே தேசிய சாகித்திய விருதினை தி.ஞானசேகரன் எழுதிய எரிமலை எனும் நாவல் பெற்றுக்

கொண்டது. சிறந்த சிறுகதைத் தொகுப்புக்கான விருதினை ஸ்ரீரஞ்சனியின் உதிர்தலில்லை இனி எனும் சிறுகதைத்தொகுப்பு பெற்றுக் கொண்டது. சிறந்த கவிதைத் தொகுப்புக்கான விருதினை ஜமீலின் ஓவியத்திலிருந்து வெளியேறும் நிறம் எனும் கவிதைத் தொகுப்பு பெற்றுக்கொண்டது. தமிழிலிலிருந்து சிங்களத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல்களில் சிறந்த மொழிபெயர்ப்பு நூலுக்கான, நிஷங்க விஜயமான்னவின் தாரா ஷியாமலி எனும் தொகுப்பைத் தமிழில் மொழிபெயர்த்த அனுஷா சிவலிங்கம் பெற்றுக் கொண்டார். சிறந்த முதல் நூலாக நாளை வரும் மழை எனும் நூலைத் தந்த மூ.கீர்த்தியன் பெற்றுகொண்டார். ஐ. சாந்தன் எழுதிய "Every Journey Ends" என்ற நாவல் சிறந்த ஆங்கில நாவலுக்கான விருதினைப் பெற்றுக்கொண்டது.

●●●



லண்டன் ஸ்ருதி மனோலயா இசைப்பள்ளி ஸ்ரீமனோகரன் ரதீஸ்குமாரின் மாணவிகள் செல்வி அபிஷா கருணாகரன், மகிஷா கருணாகரன் ஆகியோரின் வயலின் இசை அரங்கேற்றம், நல்லை ஆதீன குரு முதல்வர் திருமுன்னிலையில் யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. .பிரதம அதிதியாக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன்,கௌரவ அதிதியாக அழகியல் ஓய்வு நிலை உதவி கல்விப்பணிப்பாளர் திருமதி கிருஷ்ணவேணி, சிறப்பு அதிதிகளாக இந்து கலாசார திணைக்களப் பணிப்பாளர் திரு அ. உமாமகேஸ்வரன், லண்டன் வைத்திய கலாநிதி கந்தையா சிவகுமார் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

●●●

### வித்துவான் க.வேந்தனார் நூற்றாண்டு நினைவு விழா

தமிழ்ப் பேரறிஞர் வித்துவான் க. வேந்தனார் நூற்றாண்டு நினைவு விழா 20-09-2019 ஞாயிறு அன்று கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெற்றது. வேந்தனாரின் 5 நூல்கள், 3 இறுவெட்டுகளுடன் நூற்றாண்டு மலரும் வெளியிடப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் சி. தில்லைநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் இராஜகுலேந்திரா, தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க. இரகுபரன், கொழும்பு சைவ மங்கையர் கழக உப தலைவர் சட்டத்தரணி செல்வி மாலா சபாரட்னம், யாழ்ப்பாணம் உயர்கல்வி நிலைய விரிவுரையாளர் ஜீவராஜ் ஆகியோர் நூல் ஆய்வுரைகளை நிகழ்த்தினர். ஏற்புரையை வேந்தனாரின் இளைய மகன் வேந்தனார் இளஞ்சேய் வழங்கினார். இந்நிகழ்வில் கலாசூரி திவ்யா சுஜேனின் அபிநய ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகளின் நடனம், ஸ்ரீமதி சுபாஷினி பிரணவனின் தேஜஸ்வராலய கலைக்கூட மாணவிகளின் வாய்ப்பாடல்களும் இடம்பெற்றன. ஓய்வு பெற்ற பிரதி பொலிஸ்மா அதிபர் பேரின்பநாதன் இந்நிகழ்வில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

●●●

# வாசகர் பேசுகிறார்

223ஆம் ஞானம் இதழில் பிரமிளா பிரதீபனின் 'இருள்' என்ற சிறுகதை சிறந்த உள்ளடக்கம் கொண்டது. ஆதிக்கத் திறனும், விரசமும் ஆண்களுக்கே உரியது. பெண்கள் அப்பாவிகள், ஆண்கள் இருள் சூழ்ந்த அரக்கர்கள் என்கிறது அக்கதை. உண்மைதான்: பெண்கள் தங்கள் உடுப்புகளை ஒழுக்கமாக உடுத்தியிருந்தால் விரகதாபம் கொண்ட ஆண்களின் கண்கள் சீராகும். அக்கதையின் கரு இன்னும் சீர் பெற்றிருக்கும். ஒரு மகா வித்தியாலயத்தில் இப்படியும் நடந்தது. மேல் வகுப்பில் சுவர் கரும்பலகையில் படிப்பித்துக் கொண்டிருந்த ஆசிரியையின் இடுப்பில் கைகளால் வீசும் கடதாசி ரொக்கட் ஒன்று மோதியது. உடனே அவ்வாசிரியை அதிபர் அறைக்குள் ஓடி அழுதார். விபரமறிந்த அதிபர் அவ் வகுப்பிற்குச் சென்று அதிகாரம் பண்ணினார். இது நிஜமாக நடந்த உண்மைச் சம்பவம். ஒழுக்க விழுமியங்களை சீராகக் கற்பிக்கும் பாடசாலை ஒன்றில் நடந்தது. என்னைப் பார் என் அழகைப் பார் என நறுமணம் கமழ பேரூந்துகளில் செல்லும் நாரிமணிகளின் அழகை இரசித்து இளையோர் கண்கள் என்ன, முதியோர் கண்களும் குருடில்லை. இதையும் உணரச் செய்திருந்தால் கதையின் கரு மிக மிக நன்றாயிருந்திருக்கும்.

தமிழ் மணி மானா மக்கீனின் பத்தியெழுத்தைப் படித்தேன். அவர் தன் அறிவுப் பெட்டகத்தை திறந்து பழைய ஞாபகங்களை மீட்டி, பந்தியாக எழுதுகிறார். உண்மையில் மானா அவர்கள் திறந்த பல்கலைக்கழகம். வாழ்நாள் சாதனையாளர் என்ற பதத்துக்கு எப்பொழுதும் உரித்தானவர். மானா அவர்களே! தொடரட்டும் தங்கள் பணி. - **பாணந்துறை எம். பி. எம். நிஸ்வான்.**

●●●

சஞ்சிகையிலும் சரி தினசரி வார இதழ்களிலும் சரி ஆசிரியர்கள் தீட்டுகின்ற ஆசிரியத் தலையங்களில் உள்ளடக்கும் விஷயங்கள் மிகவும் முக்கியமானவை. அதே போன்று ஞானத்தின் ஒவ்வொரு இதழிலும் ஆசிரியர் தனது பக்கத்தில் குறிப்பிடுகின்ற கருத்துக்கள் மிகவும் பெறுமதியானவையாக இருப்பதை நான் அறிகிறேன்.

'ஞானம்' ஜுலை 2019(230)ஆவது இதழில் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் அவர்கள் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரைப் பற்றியும், உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடுகள் பற்றியும் தெரிவித்திருந்த கருத்துக்கள் மிகவும் சிந்திக்கப்பட வேண்டியவை.

ஈழத்தமிழறிஞர் தனிநாயகம் அடிகளார் முதலாவது தமிழாராய்ச்சி மாநாட்டை மலேசிய கோலாலம்பூரில் தொடக்கி வைத்தது முதல் இதுவரை 10 மாநாடுகள் நடைபெற்றிருக்கின்றன. இவை முறையே 1968 இந்தியா - சென்னை, 1970 பிரான்ஸ் - பாரிஸ் நகரங்களில் இருவருட இடைவெளியிலும், மூன்றாவது மாநாடு நான்கு வருடங்களின் பின் யாழ்ப்பாணத்திலும் நடைபெறுவதற்கு முன்னின்று உழைத்தவர் அடிகளார் என்பதை அறிய முடிகின்றது. 1974ஆம் ஆண்டு நடைபெற்ற மாநாடு உட்பட மேற்படி மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை தொகுப்பு நூலாகக் கொண்டு வந்து தமிழுக்கு தொண்டு செய்திருக்கிறார் அடிகளார்.

ஐந்தாவது மாநாடு 1981இல் இந்தியா - மதுரையிலும், ஆறாவது மாநாடு 1987இல் மீண்டும் மலேசியா - கோலாலம்பூரிலும், ஏழாவது மாநாடு 1989இல் மொரீஸியஸிலும் நடைபெற்றதைத் தொடர்ந்து, எட்டாவது மாநாடு 1995இல் இந்தியா - தஞ்சையிலும் நடைபெற்றிருக்கின்றது. அதே போன்று ஒன்பதாவது மாநாடு பத்து வருட இடைவெளிக்குப் பிறகு மலேசிய - கோலாலம்பூரிலும் நடைபெற்றிருப்பதை அறிய முடிகின்றது.

இம்மாநாடுகள் நடைபெற்ற கால இடைவெளிகளைப் பார்க்கும்போது அதன் வளர்ச்சிப் போக்கு ஆறு வருடங்கள் என்ற கணக்கில் பின்தள்ளப்பட்டுக் கொண்டே வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இறுதியாக மீண்டும் நான்கு வருட இடைவெளிக்குப் பின்னர் அமெரிக்க சிக்காக்கோவிலே கடந்த ஜுலை மாதம் 2019இல் 4ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரையில் நான்கு நாள் மாநாடாக இனிதே நடைபெற்று முடிந்திருக்கிறது. மாநாடுகள் குறிப்பாக மலேசிய - கோலாலம்பூரில்தான் கூடுதலான தடவைகள் நடைபெற்றிருக்கின்றன. இரண்டாவதாக இந்தியாவில் தான். இவ்வகையிலோ மாநாடுகள் கால இடைவெளிகள் விட்டாலும் கூட தொடர்ச்சியாக நடைபெற்றிருக்கின்றன என்ற வகையில் மகிழ்ச்சிதான். அதிலும் ஒரு குறையை ஆசிரியர் சுட்டிக் காட்டியிருக்கிறார். அதாவது நடந்து முடிந்த 10ஆவது மாநாட்டில் ஈழத்து அறிஞர் ஒருவர்கூட

அஞ்சலிக்குறிப்பு:



## 'ஈழத்து புலமைப் பாரம்பரியத்தின் உன்னத அடையாளம் பேராசிரியர் பொன். பூலோகசிங்கம்'

ஈழத்தின் தனித்துவ புலமையாளரான தமிழ்ப் பேராசிரியர் பொன். பூலோகசிங்கம் அவர்கள் தம் 83ஆவது அகவையில் சிட்னியில் காலமான செய்தி எழுதும் துயரம் கனமானது.

சிறந்த பேராசிரியர்,ஆய்வாளர்,பதிப்பாசிரியர் என தமிழியல் உலகில் தடம் பதித்த பேராசிரியரின் வாழ்வும் படைப்புகளும் ஈழத்து புலமைப் பாரம்பரியத்தின் உன்னத அடையாளம் எனலாம்.

வவுனியா செட்டிக்குளத்தில் 1936இல் பிறந்த பேராசிரியர் அவர்களின் கலாநிதிப்பட்ட ஆய்வு, 1963-1965 காலப்பகுதியில் ஒக்ஸ்போட் பல்கலைக்கழக திராவிட மொழியியலறிஞர் பேராசிரியர் தோமஸ் பரோவின் வழிகாட்டலில் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் இலக்கியத்தில் ஈழத்தமிழறிஞரின் பெருமுயற்சிகள், ஈழம் தந்த நாவலர் இந்துக் கலைக்களஞ்சியம், நாவலர் பண்பாடு, சிலப்பதிகார யாத்திரை என பல நூல்களை தமிழுக்காக்கியவர். நூற்றுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை எமதாக்கியவர்.

ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றினை ஆழ ஆய்ந்து பதிவாக்கிய அதேவேளையில் இலக்கியத்தின் வழியான தமிழர் பண்பாட்டு வரலாற்றினையும் பல்துறை இணைநோக்கில் நுண் ஆய்வுக்குட்படுத்தியவர். இந்த வகையில் கோணேசர் கல்வெட்டு, முருகவழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும் ,வன்னி நாட்டின் வரலாறு பற்றிய அவரது ஆய்வுகள் குறிப்பிடத்தக்கன. களனிப்பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழகம்,கொழும்புப்பல்கலைகழகம் ஆகியவற்றில் பேராசிரியராக விளங்கிய அவர், 1997 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தார். அங்கும் நிறைவான கல்விப்பணிகளை ஆற்றியவர்.

சிட்னியில் முதியோர் இல்லமொன்றில் அவரது வாழ்க்கைப்பயணம் நிறைவு பெற்றாலும் தமிழுள்ளவரை அவர் மேலான வாழ்வின் புலமைச்சுவடுகள் எமக்கெலாம் வழிகாட்டியாகும்.

அவர் ஆத்ம சாந்திக்கான பிரார்தனையில் இணந்திருப்போம்.

- **முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

பங்கு கொள்ளாமை கவலைக்குரிய விடயமாகும் என்பதுதான். இதில் நியாயம் இருக்கிறது. மேற்குறிப்பிட்ட தகவல்கள் யாவும் ஞானம் ஆசிரியரின் தேடுதலின் பயன் என்பதை குறிப்பிடுவதில் மகிழ்ச்சி கொள்கிறேன். ஆசிரியருக்குப் பாராட்டுக்கள், நன்றிகள்.

**கலாபூஷணம் எம். எம். மன்ஸூர், மாவனல்லை.**

●●●

'ஞானம்' இதழில் (புரட்டாதித் திங்கள்) வெளிவந்திருக்கும் எனது கட்டுரையின் ஒர் இடத்தில் (பக்கம் 13) காணப்படும் Weter என்னும் ஆங்கிலச் சொல்லில் உள்ள E என்னும் ஆங்கில எழுத்துக்குப் பதிலாகக் காலப்போக்கில் A என்னும் ஆங்கில எழுத்து இடம்பெற்றே அது Water என்னும் சொல்லாக ஆகியிருக்க வேண்டும் என்றே அக் கட்டுரையில் பதிவு செய்திருந்தேன். ஆனால் அவ்விரு ஆங்கில எழுத்துகளுக்கும் மாறாக நு, யு என்னும் தமிழ் எழுத்துக்கள் அதில் இடம்பெற்றுள்ளமை எனக்கு பெரும் ஆச்சரியத்தைத் தருகின்றது.

பிரமிளா பிரதீபனின் சிறுகதை 'இருள்' வாசகர் உள்ளத்தில் நிச்சயம் வெளிச்சத்தைப் பாய்ச்சியிருக்கும். கதையின் 'கரு' எப்படியிருப்பினும் அதில் கையாளப்பட்டுள்ள சில சொற்களும் வசனப்பாங்கும் கவர்ச்சியானவை. மங்கை ஒருத்திதான் ஏனைய மங்கையரின் உணர்ச்சியை நன்கு உணர்ந்து கொள்ள இயலும் என்பதற்கு இச்சிறுகதை ஏற்றதோர் சான்று. பிரமிளாவின் பிரமிப்பூட்டும் எழுத்துப்பணி இன்னும் தொடரட்டும். வாழ்த்துக்கள். **–வாகரைவாணன்.**

●●●

இதழ் 232இல் இரகுபதி பாலசிறீதரனின் சிறுகதை மிகவும் நன்று. இப்படியான முற்போக்கான கதைகளை அவர் எழுதவேண்டும். **– சி. குமாரலிங்கம், செம்மணிவீதி, நல்லூர்**

●●●